# பெரியார் தொலைநிலைக்கல்வி நிறுவனம்

# பெரியார் பல்கலைக்கழகம்

சேலம் – **636 011.**

இளங்கலை தமிழ் இலக்கியம்

**இரண்டாமாண்டு**

**தாள் – 9 : கல்வெட்டுகளும், செப்பேடுகளும்**

**புத்தக ஆக்கம்**

முனைவர் மு. இளங்கோவன்
துணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரி,
புதுச்சேரி - 605 003

**இளங்கலை தமிழ் இலக்கியம்**

**இரண்டாமாண்டு**

**தாள் - 9 : கல்வெட்டுகளும், செப்பேடுகளும்**

அலகு 1 :

கல்வெட்டியல் - குகைக்கல்வெட்டுகள் - கல்வெட்டுத் தமிழ் - வரலாறும் கல்வெட்டுகளும் - வரலாறும் செப்பேடுகளும் - நடுகற்கள் - மொழியியல் ஆய்வு-கல்வெட்டுகளினால் அறியப்படும் உண்மைகள்.

அலகு 2 :

தந்திவர்மன் கல்வெட்டு - முதல் பராந்தகன் கல்வெட்டு - முதல் இராசராசன் கல்வெட்டுகள் - முதல் இராசேந்திரசோழன் கல்வெட்டுகள்

அலகு 3 :

முதல் இராசாதிராசன் கல்வெட்டு - இரண்டாம் இராசேந்திர தேவன் கல்வெட்டு-வீர ராசேந்திரன் கல்வெட்டு- முதல் குலோத்துங்கன் கல்வெட்டுகள்- விக்கிரமசோழன் கல்வெட்டுகள்.

அலகு 4 :

மாறஞ்சடையன் கல்வெட்டுகள் - குலசேகர தேவர் கல்வெட்டு - சுந்தபாண்டியன் கல்வெட்டுகள் - அரிகேசரி பராக்கிரம பாண்டியன் கல்வெட்டுகள்.

அலகு 5 :

தமிழகச் செப்பேடுகள் - செப்பேடுகள் அமைப்பு - கூரம் செப்பேடுகள்- வேள்விக்குடிச் செப்பேடுகள் - சின்னமனூர்ச் செப்பேடுகள் - திருமலை நாயக்கர் செப்பேடுகள் - தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் - செப்பேடுகள் உணர்த்தும் செய்திகள்.

## 1.1 முன்னுரை

பழந்தமிழகத்தின் வரலாற்றை அறிவதற்குக் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் பெருந்துணைபுரிகின்றன.அக்காலத்தில் ஆண்ட அரசர்கள், அவர்களின் வழியினர் பற்றி அறிவதற்கும் மக்களின் கலை, இலக்கியம், சமய ஈடுபாடு பற்றி அறிவதற்கும் கல்வெட்டுகள் சான்றாதாரங்களாக உள்ளன. தமிழகத்தில் பல்வேறு அசர்கள் பல பகுதிகளைத் தலைநகர்களாகக் கொண்டு ஆட்சி செய்துள்ளனர். பல படையெடுப்புகள் நடந்துள்ளன.பல சமயத்தினரின் செல்வாக்கு மிகுந்திருந்தது. அரசர்கள் மாண்டாலும் அவர்களின் கொடையும்,செய்த நற்பணிகளும் கல்லில் பொறிக்கப்பட்டதாலும் செம்பில் வெட்டப்பட்டதாலும் காலம் கடந்து அவர்களின் வராலற்றைப் பேசுகின்றன.

கல்வெட்டைக் கண்டுபிடிப்பது, படிப்பது, படியெடுப்பது, பாதுகாப்பது என்பது அதில் ஈடுபாடு உள்ளவர்களுக்கே இயல்வதான ஒன்றாகும். தமிழகத்தின் பல பகுதிகளிலும் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. தமிழக எல்லை கடந்து அயல் மாநிலங்களிலும்,பிற நாடுகளிலும் கல்வெட்டுகளும், செப்பேடுகளும் காணப்படுகின்றன. தமிழகத்தில் கிடைக்கும் கல்வெட்டுகள் தமிழ், கிரந்த எழுத்துகள் கொண்டும், வடமொழியிலும் எழுதப்பட்டுள்ளன.

கல்வெட்டுகள் பெரும்பாலும் கோயில்கள், குகைகள், பொது இடங்களில் கிடைக்கின்றன. இக்கல்வெட்டுகள் நல்ல நிலையிலும் சில இடங்களில் சிதைந்தும் காணப்படுகின்றன. அண்மைக் காலத்தில் செம்பியன் கண்டியூரில் கண்டெடுக்கப்பட்ட புதிய கல்வெட்டு, சிந்துவெளி எழுத்துடன் ஒத்துள்ளதாக வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

தமிழ்க்கல்வெட்டுகள் பல்லவ அரசன் தந்திவர்மன் காலம் முதல் தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட மராட்டியர் காலம் வரை பல்லாயிரம் கல்வெட்டுகள் கண்டெடுக்கப் பட்டாலும் சில வராலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கல்வெட்டுகளை இந்தப் பாட நூல் அறிமுகம் செய்கின்றது.

சோழப் பேரரசர்களுள் முதன்மையான பராந்தகன், இராசராசன், இராசேந்திரன், முதல் இராசாதிராசன், இரண்டாம் இராசேந்திரன், வீர ராசேந்திரன், முதல் குலோத்துங்கன், விக்கிரம சோழன் ஆகிய அரசர்களின் கல்வெட்டுகள் வழியாக அக்காலத்தில் நடைபெற்ற போர், சமயப்பணிகள், சமூக அமைப்புகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

பாண்டியர்களுள் புகழ்பெற்ற மாறஞ்சடையன், குலசேகரப் பாண்டியன், சுந்தரபாண்டியன், பராக்கிரம பாண்டியன் ஆகியோரின் கல்வெட்டுகள் வழியாக அக்காலத்தில் நடைபெற்ற போர், கொடைப்பொருள்கள், மரபு வழியினர் பற்றிய விவரங்களை அறிந்துகொள்ளலாம். கோயில் திருப்பணிகளுக்கு முதன்மையளித்த பாண்டியனின் சிறப்புகளைக் கல்வெட்டின் துணையுடன் அறியமுடியும்.

கல்வெட்டுகளைப் போல் வரலாற்றுக்குப் பெரும் பங்காற்றும் செப்பேடுகள் பற்றி விரிவாக இந்தப் பாடநூலில் அறிமுகச் செய்திகள் உள்ளன. பல்வேறு வரலாற்றுச் செய்திகளைச் சுவைபட விளக்கும் கூரம் செப்பேடுகள், வேள்விக்குடிச் செப்பேடுகள், சின்னமனூர்ச்செப்பேடுகள், திருமலை நாயக்கர் செப்பேடுகள், தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் இந்தப் பாடப்பகுதியில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

முந்தைய வரலாற்றை அறிவதன் வழியாக நம் முன்னோர்களின் சிறப்பை அறிவதுடன் புதிய வரலாறும் படைக்கமுடியும். ஒவ்வொரு இனமும் தங்கள் முந்திய

வரலாற்றைக் கண்ணும் கருத்துமாகப் பதிவு செய்வதிலும் பாதுகாப்பதிலும் முன்னிற்பதுபோல் இந்தப் பாட நூலைக் கற்கும்பொழுது நம் முன்னோர்களின் வரலாற்றுத் தொடர்ச்சியாக நாம் வாழ்ந்து கொண்டுள்ளோம்

என்பதை இந்த நூல் நமக்கு எடுத்துரைக்கும்.

**1.2 நோக்கங்கள்**

- கல்வெட்டியல் என்பதை விளக்குதல்
- கல்வெட்டுகளின் அமைப்பை விளக்குதல்
- கல்வெட்டின் காலம் அறிதல்
- கல்வெட்டு வெட்டுவதன் நோக்கம்
- கல்வெட்டில் கையெழுத்துப் பெறும் இடம்
- கல்வெட்டின் முடிவுப்பகுதி எவ்வாறு இருக்கும் என விளக்குதல்
- குகைக்கல்வெட்டுகள் பற்றி விளக்குதல்
- கல்வெட்டுகளை மொழியடிப்படையில் நோக்குவது
- கல்வெட்டுகளால் அறியலாகும் உண்மைகள்

**பாட அமைப்பு**

1.1 முன்னுரை

1.2 நோக்கங்கள்

1.3 பாட அறிமுகம்

1.4. பாடப்பிரிவுகள்

1.5 பாடத் தொகுப்புரை

1.6 முக்கியச் சொற்கள்

1.7 தன்மதிப்பீட்டு விடைகள்

1.8 மாதிரி வினாக்கள்

பாடப்பிரிவுகள்

**1.4.கல்வெட்டியல்**

தமிழ்மொழி தொன்மையான மொழியாகும். இலக்கண, இலக்கிய வளம் கொண்ட இந்த மொழியில் எழுத்துகள் பண்டைக்காலத்திலேயே தோற்றம் பெற்றிருக்க வேண்டும் என்று வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். எழுத்துகளைப் பனை ஓலைகளிலும் கல்லிலும் எழுதும் மரபு இருந்துள்ளது. எழுத்துகளைக் கல்லில் பொறித்துவைக்கும் வழக்கம் பழங்காலத்தில் இருந்துவந்துள்ளதைத் தமிழின் முதல் நூலான தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. போரில் வீரமுடன் போரிட்டு இறந்த வீரர்களுக்கு அவர்களின் பீடும் பெருமையும் விளங்க நடுகல் நட்டு வழிபட்ட மரபை அறிய முடிகிறது. புறநானூறு, அகநானூறு போன்ற நூல்களிலும் இதனைக் காணமுடிகிறது. தமிழகத்தின் பல பகுதிகளில் கிடைத்துள்ள நடுகற்கள் இந்த உண்மையை நமக்கு உணர்த்துகின்றன.

கல்வெட்டுகள் பண்டைக்கால மக்களின் ஆட்சிமுறை, கொடைத்திறம், அரசமரபு முதலியவற்றை அறிய உதவுகிறது. தமிழ்க்கல்வெட்டுகள் தமிழகம்

மட்டுமன்றிக் கேரளா, கர்நாடகா. ஆந்திர, ஒரிசா உள்ளிட்ட பிற மாநிலங்களில் கிடைப்பதுடன் இலங்கை,மலேசியா உள்ளிட்ட பிற நாடுகளிலும் கிடைக்கின்றன.

கல்வெட்டுகள் பற்றி அறிவியல் முறைப்படி படிக்கும் அல்லது ஆராயும் துறையே கல்வெட்டியலாகும்.இதில் கல்லின் காலம், கல்வெட்டின் காலம்,கல்வெட்டில் இடம்பெற்றுள்ள அரசன் பற்றிய வரலாறு, கல்வெட்டு இடம்பெற்றுள்ள ஊரின் சிறப்பு, கல்வெட்டப்பட்டதன் நோக்கம், கல்லெழுத்தின் அமைப்பு,கல்வெட்டைப் படி எடுத்தல், கல்வெட்டால் அறியலாகும் பிற தகவல்களைப் படிக்கும் பகுதியே கல்வெட்டியலாகும்.

கல்வெட்டுகளைப் படிப்பது, படியெடுப்பது ஒரு தனிக்கலையாகும்.அது தனித்துறையாகவே வரலாற்றில் வளர்ந்து வந்துள்ளது. கல்வெட்டுகளைப் படிப்பதில் பல அறிஞர்கள் தமிழகத்தில் புகழ்பெற்று விளங்குன்றனர். கல்வெட்டுகளைப் படிப்பதில் இன்றும் பயிற்சி வழங்கப்படுகின்றது. அதன் முதன்மை கருதிப் பலரும் கல்வெட்டுகளைப் படிக்க பயிற்சி பெற்று, பல்வேறு கல்வெட்டுகளைக் கண்டுபிடித்துப் புதிய வரலாற்றுச்செய்திகளை வெளியுலகிற்கு வழங்கி வருகின்றனர். கல்வெட்டுகளைப் படிப்பதில் அறிஞர்கள் பலர் முன்பு புகழ்பெற்று விளங்கினர். அவர்களுள் தி.வை.சதாசிவப் பண்டாரத்தார், சுந்தரேச வாண்டையார், மயிலை.சீனி. வேங்கடசாமி, ஔவை. துரைசாமி பிள்ளை, மா.இராசமாணிக்கனார் உள்ளிட்ட அறிஞர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இன்று வாழும் அறிஞர்களுள் ஐராவதம் மகாதேவன், இரா.நாகசாமி, நடனகாசிநாதன், செ.இராசு.சுப்பராயலு, விசய வேணுகோபால் உள்ளிட்டவர்கள் அனைவராலும் போற்றப்படுகின்றனர்.

### 1.4.1.கல்வெட்டுகளின் அமைப்பு

கல்வெட்டுகள் சில அமைப்பு முறைகளுக்கு உட்பட்டே வெட்டப்பட்டுள்ளன. கல்வெட்டு, செப்பேடுகள் ஒவ்வொன்றும் ஐந்து பகுதிகளைக் கொண்டிருக்கும். அவை மங்கல வாசகம், சாசனம் எழுதப்பட்ட காலம், சாசனச்செய்தி, கையெழுத்துகள், ஓம்படைக்கிளவி என்று அறிஞர் நடன.காசிநான் குறிப்பிடுவார்.

### 1.4.2.மங்கலச்சொல்

மங்கலவாசகம் கல்வெட்டின் தொடக்கத்தில் பொறிக்கட்டிருக்கும். பெரும்பாலான கல்வெட்டுகளில் 'ஸ்வஸ்தி ஸ்ரீ' (மங்கலம் உண்டாகுக) என்னும் சொல் காணப்படும். வேறு சில மங்கலச்சொல்லைக்கொண்டும் கல்வெட்டு தொடங்குகிறது. பல்லவர் காலச்செப்பேடு சிலவற்றில் 'ஜிதம்பகவதா' என்ற சொல் காணப்படுகிறது. ஆய் மன்னனின் பாலியத்துச் சாசனம் "ஓம் ஸ்வஸ்தி ஸ்ரீ" என்று தொடங்குகிறது.

### 1.4.3.கல்வெட்டின் காலம்

கல்வெட்டின் தொடக்கதில் உள்ள மங்கலச் சொல்லை அடுத்து கொடையளித்த காலத்தில் ஆட்சி புரிந்த மன்னர்களப் பற்றியும் அம்மன்னனது ஆட்சி ஆண்டும் சில நேரங்களில் அதற்கு ஈடான சக ஆண்டு அல்லது கொல்லம் ஆண்டு சேர்த்துக் குறிக்கப்படுவது உண்டு.

### 1.4.4.கல்வெட்டின் நோக்கம்

கல்வெட்டு அரசனின் ஆண்டைக் குறிப்பிட்டு, அதன் பிறகு கல்வெட்டுப் பொறிக்கப்பட்டதற்கான காரணத்தை விளக்கும் பகுதி இடம் பெற்றிருக்கும். பெரும்பாலான கல்வெட்டுகள் கோயில்களுக்கு நிலம் வழங்கப்பட்டதையோ, அல்லது கோயில்களில் திருநந்தா விளக்கு அமைப்பதற்குச் சாவா மூவாப் பேராடு,பசு அல்லது

எருமை" வழங்கப்பட்டதையோ குறிக்கின்றன. கோயிலுக்கு நிலம் விற்கும்பொழுதோ அல்லது பிறன் ஒருவனுக்கு விற்கும்பொழுதோ அந்நிலத்தின் பரப்பளவு, அதன் நான்கு எல்லைகள், அந்த நிலத்தைச் சார்ந்திருக்கும் பிற பொருள்கள், அந்நிலத்திற்கு நீர் பாய்ச்சும் வாய்க்கால் ஆகியவை விரிவாகக் குறிப்பிடப்படுவது உண்டு. சில இடங்களில் நிலத்தின் பெயர் குறிப்பிடப்படுவதும் உண்டு. சிவன் கோயிலுக்கு நிலம் விற்கப்பட்ட பொழுதெல்லாம் சண்டேசுவரர் பெயராலேயே விற்கப்பட்டுள்ளன. கொடை அளிக்கப்படும் பொழுது சந்திர. சூரியர் உள்ள அளவும் நிலை பெற்றிருக்க வேண்டும் என்று கல்வெட்டில் குறிப்பிடப்படுவது உண்டு.

### 1.4.5.கையெழுத்து

கல்வட்டுகளில் கொடையளித்தவரின் கையெழுத்தும்,அதைக் கொடையளித்தவர் சொல்ல,எழுதிய ஊர்க்கணக்கன் கையெழுத்தும், சில கல்வெட்டுகளில் அதைக் கல்லில் பொறித்த தச்சனின் கையெழுத்தும், சாட்சிகளில் கையெழுத்தும் காணப்படுவது உண்டு. இன்று பத்திரப்பதிவுகள் வழியாக விற்பனை அல்லது தானம் உறுதிப்படுத்தப் படுவதுபோல் பண்டைக்காலத்தில் இக்கல்வெட்டுகள் உறுதிப்படுத்தும் ஆவணங்களாக விளங்கியுள்ளன.

### 1.4.6.கல்வெட்டின் முடிவு

கல்வெட்டின் இறுதியாக,அளிக்கப்பட்ட கொடையைப்" பன்மாஹேஸ்வரர் ரகைஷ" என்றோ "வைஷ்ணவ ரகைஷ" என்றோ குறிப்பார்கள்.அக்கொடைக்குத் தீங்கு நினைத்தாலோ,அல்லது தீங்கு செய்தாலோ "கங்கைக் கரையில் காராம பசுவைக் கொன்ற தோஷத்தில் போவார்கள் என்றோ "இந்தத் தர்மத்துக்கு அஹிதம் நினைத்தார் கங்கையிடை குமரியிடை எழு நூற்றுக் காதத்திலும் செய்தார் செய்த பாவத்துப் படுவார்" என்றோ குறிக்கப்படுவதும் உண்டு.கொடையைக் காப்பாற்றினால் அதனால் கிடைக்கும் நன்மையும் குறிக்கப்பெற்றிருக்கும்.கொடையைக் "காப்பவர்கள் அடி என் முடிமேலின என்றும்" "இத் தன்மைத்தை ரக்ஷித்தார் அஸ்வமேத யாகஞ் செய்த பலம் எய்துவாராகவும்" என்றும் குறிப்பிடப்பெற்றிருக்கும். இந்த தன்மத்தை நடத்தினவன் அறுபத்துனாலு திருவிளையாடல்களும் விளையாடின அழகிய சொக்கநாதர் அருளைப் பெற்றி, அங்கையக்க்கண்ணியார் அருளைப்பெற்று பிறுது விராச்சியம் பண்ணி சுகமேயிருப்பான்" என்றும் கூறும்.

செப்பேடுகளில் சமஸ்கிருதப் பகுதியில் "பிராம்மணன் சொத்து கொடிய விஷம்.வேறு எந்த விஷமும் விஷமாகாது.விஷம் ஒருவனைக் கொல்லும்.பிராம்மண சொத்தோ புத்திர பௌத்திரர்களைக் ("கொல்லும்) என்று காணப்படுகிறது.

**பிற செய்திகள்**

கல்வெட்டுகளுள் சில கொடையளிக்கப்பட்டதைச் சந்திராதித்யவரை முட்டாமல் நடத்திப்போகக் கடவார்களாகவும் என்று குறிப்பிட்டுவிட்டு, இப்படிக்கு,"செம்பிலும் சிலையிலும் வெட்டிவித்துக் கொள்ளவும்" என்று குறிப்பிடுவுதம் உண்டு. எனவே கொடையளிக்கப்பட்ட செய்தி கல்லில பொறிப்பதோடு மட்டுமல்லாது செப்பேட்டிலும் எழுதி வைக்கப்பட்டுள்ளன என்பது தெளிவாக விளங்குகின்றன.

அக்காலத்தில் ஓலையில் எழுதும் பழக்கமும் இருந்துள்ளதைச் செங்கற்பட்டு மாவட்டம் உத்திரமேரூர் கல்வெட்டு வழி அறியமுடிகின்றது. குடவோலைமுறை என்று வரலாற்றில் குறிப்பிடப்படும் முதற்பராந்தக சோழனின் கல்வெட்டு இதனை விளக்குகிறது.

ஊர்ச்சபைக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறைபற்றிக் குறிப்பிடும் கல்வெட்டுப் பகுதியில், வேட்பாளராக நிற்பவருடைய பெயரை ஓலையில் எழுதி குடத்தினுள் இடுவதைக்குறிக்கிறது. அரசனுடைய அதிகாரிகளுள் ,"திருமந்திர ஓலை" "ஓலை நாயகம்" போன்ற அதிகாரிதகள் இருந்துள்ளதையும் அறியமுடிகிறது.

தஞ்சைப்பெரிய கோயிலில் கருவறையைச் சுற்றியுள்ள சுவர்களில் காணப்படும் ஓவியங்களில் தடுத்தாட்கொண்ட புராணக் காட்சி இடம்பெற்றுள்ளது.அதில் ஒருவர் ஓலை ஒன்றைக் கையில் ஏந்தி நிற்கிறார்.அவ் வோலையில்"இப்படி நானறிவேன்"என்று பொறிக்கப்பட்டுள்ளதைக் கூர்ந்து நோக்கினால் பண்டைய நாளில் ஓலையில் எழுதும் வழக்கம் இருந்துள்ளது புலனாகும்.

பெரிய லெய்டன் செப்பேடு, ஆனைமங்கலம் என்ற ஊரை அரசன் கொடையாக வழங்கியதை"அறவோலை செய்து இருந்தோம்" என்று குறிக்கிறது.எனவே ஓலையில் எழுதும் வழக்கம் இருந்துள்ளமைக்குப் பல சான்றுகள் நமக்குக் கிடைக்கின்றன.

கல்வெட்டுகளில் அரசனை, "தேவர்" எனவும், "பெருமாள்" எனவும் "நாயனார்" எனவும் அவன் தேவியை, "நம்பிராட்டியார்" எனவும் அழைக்கப்பட்டுள்ளதைக் கல்வெட்டுகளால் அறிகிறோம். மேலும் அரச குலப் பெண்கள் "ஆழ்வார்", நாச்சியார்" என்று அழைக்கப்பட்டுள்ளதையும் அறியமுடிகின்றது.

கோயில்களுக்குக் கொடையாக நிலம், ஆடு, பசு, பிற பொருள்கள் கொடையாக அளிப்பது மரபு. அத்தோடு தெய்வங்களுக்குச் செப்புச்சுலைகளும் அளித்துள்ளனர். கல்வெட்டுகள் தெய்வ உருவங்களைத் திருமேனிகள் என்றும், மக்கள் உருவங்களைப் பிரதிமங்கள் என்றும் குறித்துள்ளன.

அரசன் இறந்துவிட்டால் அவனைப் புதைத்த இடம் கல்வெட்டுகளில் பள்ளிப்படை என்று குறிக்கப்பட்டுள்ளது.அந்த இடத்தில் கோயில் எழுப்பி வழிபடும் வழக்கமும் இருந்துள்ளது.

### 1.4.7. அரச ஆணை

நிலக்கொடையைப் பற்றிய அரசனுடைய ஆணையை வெளிப்படுத்தும் கல்வெட்டுகள் சிலவற்றில் அந்த ஆணை எவ்வாறு உருவாக்கப்படுகிறது என்றும் எவ்வாறு நிறைவேற்றப்படுகிறது என்றும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.செங்கற்பட்டு மாவட்டம் திருமுக்கூடலில் காணப்படும் சோழ மன்னன் வீரராசேந்திரனின் கல்வெட்டு அரசனின் ஆணை எவ்வாறு நிறைவேற்றப்படுகிறது என்பதைச் சிறப்பாக எடுத்துரைக்கிறது. அரசனுடைய ஆணை, 'திருமந்திர ஓலை' என்னும் அதிகாரியால் எழுதப்படுகிறது. எழுதி முடித்தபின், 'திருமந்திர ஓலை நாயகம்' என்ற அதிகாரியால் ஒப்புநோக்கப்படுகிறது. பிறகு'விடையில் அதிகாரி'வரி' என்ற புத்தகத்தில் எழுதும்படி ஆணையிடுகிறார். 'உடன் கூட்டம்' 'விடையில்', 'நடுவிருக்கை' ஆகிய அதிகாரிகள் அதை எழுதும்படி செய்கிறார்கள். 'புரவு வரி திணைக்களம்', 'வரிப்பொத்தகம்', 'முகவெட்டி', 'வரியிலீடு', 'வரிப்பொத்தகக் கணக்கு', 'பட்டோலை' ஆகிய அதிகாரிகள் தங்கள் கையொப்பங்களை இட்டுத் தங்களது இசைவைத் தெரிவிக்கிறார்கள். அதன் பின்னர் அவ்வாணை அரச மரியாதையுடன் எவ்வூரைச் சார்ந்த நிலம் கொடையளிக்கப்படுகிறதோ அவ்வூருக்கு எடுத்துச்செல்லப்படும்.

அரசனின் ஆணை பற்றி முன்பே அறிந்த ஊரின் நாட்டாரும் மற்றவர்களும் 'ஆணை' கொண்டுவரும்பொழுது இருக்கை விட்டு எழுந்து, கை

கைப்பித் தொழுது, ஆவ்வாணையைத் தங்கள் தலைமீது கொண்டு செல்கின்றனர். அதன் பின்னர் ஆணை படித்துப் பார்க்கப்படுகிறது.

### 1.4.8. குகைக் கல்வெட்டுகள்

தமிழகத்தில் உள்ள குகைகளில் பண்டைக்காலத்து அரசர்களும் சமணத்துறவியர்களும் பல கல்வெட்டுகளை வெட்டிவைத்துள்ளனர். பெரும்பாலும் சமணத்துறவியர்களுக்குப் படுக்கை அமைத்துக் கொடுத்ததைக் குறிப்பிடும் கல்வெட்டுகளே மிகுதி எனலாம். இக்குகைக் கல்வெட்டுகளுள் மீனாட்சிபுரக்கல்வெட்டு, அல்லது அரிட்டாப்பட்டி கல்வெட்டு, திருவாதவூர், கொங்கற்புலியன்குளம், விக்கிரமங்கல், மேட்டுப்பட்டி, சித்தன்னவாசல், அழகர்மலை, கீழவளவு, ஆனைமலை, திருப்பரங்குன்றம், குன்றக்குடி, புகளூர், மாமண்டூர், அரச்சலூர், பிள்ளையார்பட்டி ஊர்களில் உள்ள கல்வெட்டுகள் புகழ்பெற்ற கல்வெட்டுகளாகும்.

மீனாட்சிபுரம் என்ற ஊருக்கு அருகில் உள்ள மலையில் உள்ள கல்வெட்டு ஆதலால் இதனை மீனாட்சிபுரம் கல்வெட்டு என்பர்.முன்பு ஐராவதம் மகாதேவன் போன்றவர்கள் மாங்குளம் கல்வெட்டுகள் என்று இதனைக் குறிப்பிட்டனர். இம்மலைக்குக் கழுகுமலை என்றும் ஓவாமலை என்றும் பெயர்களுண்டு. இம்மலையின் கிழக்குப்புறத்தில் அமைந்த மலையில இயற்கையாய் அமைந்த குகைத்தளித்தில் படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன.

முதல் கல்வெட்டில் அமைந்த செய்தி நந்நத சிரீ இயக்கன் என்னும் சமணத்துறவிக்குக் கடலன் என்றும் பணவன் என்றும் வழுது என்றும் அழைக்கப்பெற்ற பாண்டியன் நெடுஞ்செழியன் பாறையைச் செதுக்கி அளித்த பள்ளி(கற்படுக்கை) என்ற செய்தியைத் தருகிறது.

இரண்டாவது கல்வெட்டு அவருக்கே பாண்டியன் நெடுஞ்செழியனின் சகலானிய இளஞ்செழியன் தந்தை சடிகன் என்பவன் செதுக்கியளித்த பள்ளி என்கிறது.

மூன்றாவது கல்வெட்டு வெள்ளறை நிகமத்தைச் சேர்ந்த காவிதி தழிதிக அந்தை என்பவரின் மகன் பிளவு என்பான் தந்தைக் குறிப்பிடுகின்றது.சந்திரன் என்பவன் கொடுத்ததை நான்காவது கல்வெட்டும், வெள்ளறை நிகமத்தவர்கள் கொடுத்ததை ஐந்தாவது கல்வெட்டும் குறிப்பிடுகின்றன.

### 1.4.9.திருவாதவூர் கல்வெட்டு

மாணிக்கவாசகர் பிறந்த ஊர் திருவாதவூராகும். இவ்வூரின் புறத்தே இயற்கையாக அமைந்த குகைத்தளம் ஒன்று உள்ளது. அங்குப் பள்ளி அமைந்ததை இரண்டு கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

கல்வெட்டு

1.பங்காடர் இதன் கொட்டூப்பிதோன்

2.உபாசகன் பரீ அகுஊறை கொட்டூபிதோன்

கல்வெட்டுச்செய்தி

1.பங்கநாட்டைச் சேர்ந்த அரிதன் என்பான் அதைச் செதுக்கி அமைத்தான்.

2உபாசகன் ஆகிய பரசு என்பான் உறைவிடம் செதுக்கி அமைத்தான்.

இக்கல்வெட்டுகளில் உள்ள உபாசகன் என்ற சொல் இல்வாழ்க்கை நடத்தி சமயநெறியில் நிற்பவரைக் குறிப்பது ஆகும்.இக்கல்வெட்டில் உள்ள உபாசகன்,பரசு என்னும் சொற்கள் பிராகிரதமொழிச் சொற்களாகும்.

### 1.4.10.விக்கிரமங்கலக்கல்வெட்டு

இவ்வூர் மதுரைக்கு அருகில் உள்ளது. உண்டாங்கல்லு என்று அழைக்கப்படும் குன்றில் உள்ள இயற்கையாக அமைந்த ஒரு குகைக்களத்தில் ஐந்து கல்வெட்டுகள் உள்ளன. இக்கல்வெட்டில் இடம்பெறும் செய்தி அந்தை பிதன் என்பான் மகன் செய்த தானத்தை குறிப்பது ஆகும். பலரின் பெயருகளை இக்கலெவட்டுகளில் காணமுடிகின்றது.

### 1.4.11.சித்தன்னவாசல் கல்வெட்டு

புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள ஊர் சித்தன்னவாசல் ஆகும். இங்கு மலையைக்குடைந்து தோற்றுவிக்கப்பெற்ற கோயில் உள்ளது. இங்கு வரலாறுச் சிறப்பு மிக்க ஓவியங்கள் உள்ளன. இக்குகை சமணக்குகையாகும். சில படுக்கைகள் இங்குக் காணப்படுகின்றன. ஒரு படுக்கையின் பக்கவாட்டில் கல்வெட்டு உள்ளது.

### 1.4.12.அழகர்மலை

அழகர்மலை பழமுதிர்சோலை எனவும் அழைக்கப்பெறுகின்றது. இம்மலையின் உயரே இயற்கையாக குகைத்தளத்தில் படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு இரு கல்வெட்டுகள் உள்ளன. அக்கல்வெட்டு முக்கியத் தகவல்களைக் கொண்டுள்ளன. மதுரையில் வணிகர்களா இருந்த பலர் சமணர்களாக இருந்துள்ளனர் என்பதை இங்குள்ள கல்வெட்டு வழி அறியமுடிகிறது. உப்பு வணிகன், பொன் வணிகன், அறுவை வணிகன், பணித (சர்க்கரை) வணிகன், கொழு (இரும்பு) வணிகன் முதலான வணிகர்களின் பெயர்கள் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 1.4.13.கல்வெட்டுகளும் மொழியியல் ஆய்வும்

கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துகளுக்குக் கல்வெட்டெழுத்து என்று குறிப்பிடுவது மரபு. கல்வெட்டுகளில் பொறுக்கப்படுவதால் காலம் கடந்தும் இவ்வெழுத்துகள் உள்ளன. மொழி வராலாற்றில் கல்வெட்டுகள் ஆய்வுகளுக்குப் பெருதுணைபுரிகின்றன. உலகில் பல பழைமையான மொழிகள் கல்வெட்டுகளில் வெட்டப்பட்டுள்ளன.

எழுத்தமைப்பு, ஒலியமைப்பை ஆராய்வதற்குக் கல்வெட்டுகள் பெரிதும் துணைபுரிகின்றன. பேச்சு மொழிக்கும் இலக்கிய மொழிக்கும் என்ன வேறுபாடுகள் உண்டு என்பதை விளக்க கல்வெட்டுகள் உதவுகின்றன.

தமிழ்மொழியின் சிறப்பறிய பல்லாயிரம் கல்வெட்டுகள் உள்ளன. இவற்றுள் காலத்தால் முந்தையவை பிராமி கல்வெட்டுகளாகும். இவை கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்தவை ஆகும். ஆனைமலை, அழகர்மலை, சித்தன்னவாசல் உள்ளிட்ட இடங்களில் காணப்படும் கல்வெட்டுகள் அக்காலத் தமிழ் மொழியின் அமைப்பு அறிய உதவுகின்றன. பொதுவாகத் தமிழகத்தில் கிடைக்கும் கல்வெட்டுகள் தமிழ், கிரந்தம், வட்டெழுத்து ஆகிய மூன்றுவகை எழுத்துகளில் எழுப்பட்டுள்ளன. திருநாதர் குன்றில் கிடைக்கும் கல்வெட்டு கி.பி.ஐந்தாம் நூற்றாண்டாகும். அண்மையில் மயிலாடுதுறை அடுத்த செம்பியன் கண்டியூரில் கிடைத்த கல்லெழுத்து சிந்துச் சமவெளி

நாகரிகத்துடன் தொடர்புடையது என்று அறிஞர்கள் நம்புகின்றனர். தமிழ்மொழியில் கிடைத்துள்ள கல்வெட்டுகளில் பேச்சுமொழியின் தாக்கம் அதிகமாக உள்ளன.

பேராசிரியர் தெ.பொ.மீனாட்சிசுந்தரம் அவர்கள் தமிழ்மொழி வரலாற்றை ஆராயும்பொழுது குகைக்கல்வெட்டு மொழி, தொல்காப்பியத் தமிழ், சங்க காலத் தமிழ் என்ற வரிசையில் ஆய்வு செய்துள்ளார். மேலும் பல்லவர் கால, சோழர் காலத் தமிழ்மொழி நிலையறிய அவர் கல்வெட்டுகளையே அதிகம் பயன்படுத்தியுள்ளார்.

கல்வெட்டை வெட்டியவர்கள் அக்காலத் தமிழை எப்படிக் கேட்டார்களோ அப்படியே வெட்டியுள்ளனர். கல்வெட்டு மொழியில் இடைச்செருகல் இல்லை. எக்காலக் கல்வெட்டு என்று உறுதி செய்தால் அதனை அக்கால வழக்கு என்று முடிவு செய்யலாம்.

குகைக் கல்வெட்டுகள் பிராமி என்ற எழுத்தில் எழுதப்பட்ட தமிழ்க்கல்வெட்டாக உள்ளன.குகைக் கல்வெட்டுகளின் காலம் கி.மு.மூன்றாம் நூற்றாண்டாகும். திருநாதர் குன்றில் கிடைத்துள்ள கல்வெட்டே தமிழில் கிடைத்துள்ள முதல் கல்வெட்டாக உள்ளது. கி.பி. 7 ஆம் நூற்றாண்டிலிருந்தே தமிழ் வரி வடிவத்திலிருந்தும் கிரந்த வரி வடிவத்திலும் எழுதப்பட்ட கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. கி.பி.எட்டாம் நூற்றாண்டில் வட்டெழுத்து வடிவ வளர்ச்சி மிகுதியாக இருந்தது. கல்வெட்டுகளில் வடமொழிச் சொற்கள் பல தமிழாக்கம் கண்டுள்ளன. ஏகபோகம் என்பது ஒரு பூ எனவும், அந்தப்புரம் என்பது அகம்படி எனவும், தாம்பூலம் சுருளமுது எனவும், திருமேனி திருவுடம்பு எனவும் சிற்றாயம் என்பது சிறுவரிகள் எனவும் பரிவட்டம் என்பது சாத்துக்கூறை எனவும் சர்வமானுயம் என்பது முற்றூட்டு எனவும் வழங்கப்பட்டுள்ளது.

### 1.4.14.கல்வெட்டுகளால் அறியலாகும் உண்மைகள்

பண்டைத் தமிழகத்தின் வரலாற்றினை அறிவதற்குப் பெருந்துணைபுரிவன கல்வெட்டுகளாகும். கல்வெட்டுகளில் அரசர்கள் பற்றியும், அவர்கள் வழங்கிய கொடை பற்றியும், கல்வி, மருத்துவம், கலை, ஊராட்சி முறை, நீதிமுறை, நில அளவை முறை பற்றிய பல குறிப்புகள் காணப்படுகின்றன.

### 1.4.14.1.வரலாறு

தமிழக வரலாறு கல்வெட்டுகள் இல்லையென்றால் முழுமையடைந்திருக்காது. அக்கல்வெட்டுகளுள் வயலூர்க் கல்வெட்டு முதன்மையிடம் பெறுகின்றது. பல்லவ மன்னர்களின் வழிமுறைய் தெளிவாக அறிவதற்குப் பெருந்துணைபுரிவன வயலூர்க் கல்லூவெட்டுகளேயாகும். அதுபோல் சோழமன்னர்களின் வரலாறு அறிவதற்குக் கன்னியாகுமரியில் கிடைத்த வீர இராசேந்திரன் கல்வெட்டு பெருந்துணைபுரிகன்றது.

### 1.4.14.2 கல்வி

சோழர் காலத்தில் கல்வி சிறப்புற்றிருந்தது. பெரும்பாலும் வேதபாடசாலைகளே சோழர் ஆட்சியில் மிகுதியாக இருந்தது.கல்விச்சாலையைப் பற்றி அறிய எண்ணாயிரம் என்ற ஊரில் கிடைத்த முதாம் இராசேந்திரனுடைய கல்வெட்டும் செங்கற்பட்டு மாவட்டம் திருமுக்கூடலில் கிடைத்த கல்வெட்டும் குறிப்பிடத்தக்கன.

### 1.4.14.3. மருத்துவம்

திருமுக்கூடல் கல்வெட்டில் மருத்துவச்சாலை பற்றிய குறிப்புகள் பல கிடைக்கின்றன. வீர இராசேந்திரன் கல்வெட்டு மருத்துவமனையை 'ஆதுரசாலை'

என்கிறது. திருப்புகலூர். குன்றத்தூர் முதலிய ஊர்களிலும் இத்தகைய கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

### 1.4.14.4.ஊராட்சி முறை

உத்திரமேரூர் கல்வெட்டு அக்காலத்தில் நிலவிய ஊராட்சி அமைப்பையும் தேர்தல் முறைகளையும் மிகத்தெளிவாகக் குறிப்பிடுகின்றது. முதற்பராந்தக சோழன் காலத்திய கல்வெட்டில் ஊராட்சி உறுப்பினர் ஆவதற்குரிய தகுதிகளை வரையறுக்கின்றது. குடவோலை முறையால் நடைபெறும் தேர்தல் பற்றியும் மிகச்சிறந்த விளக்கங்களைத் தருகின்றது.

அதுபோல் பாண்டியன் மாறன் சடையனுடைய மானூர்க் கல்வெட்டும் ஊராட்சி முறை பற்றி சிறப்பாக விளக்குகின்றது.

### 1.4.14.5.நீதிமுறை

திருப்பாதிரிப்புலியூரில் காணப்படும் கல்வெட்டில் பெருமாள் பராக்கிராம பாண்டியன் காலத்தில் வெட்டப்பட்ட கல்வெட்டில் நீதிமுறை பற்றிய பல குறிப்புகள் உள்ளன.

### 1.14.15.வரலாறும் கல்வெட்டுகளும்

தமிழக வரலாற்றை அறிவதற்குப் பெரிதும் உதவுவன கல்வெட்டுகளேயாகும்.பல்லவர் காலத்தைச் சார்ந்த கல்வெட்டுகள் இதுவரை 260 கிடைத்துள்ளன. இவற்றுள் கி.பி.845 ஆம் ஆண்டுக்கு முந்தைய கல்வெட்டுகள் 140 அளவில் உள்ளன. கி.பி.ஆறாம் நூற்றாண்டுக்கு முன்பு வாழ்ந்த பல்லவர்கள் பிராகிருதமொழியிலும் சமற்கிருத மொழியிலும் செப்புப்பட்டயங்களை வெளியிட்டனர். நசிம்மவர்மன் காலத்திலிருந்து தமிழிலும் செப்புப்பட்டயங்கள் வெளியிடும் மரபு உண்டானது.

சிம்மவர்மன் ஆறாம் ஆட்சியாண்டில் வெளியிடப்பெற்ற பள்ளன்கோயில் செப்பேட்டில் எழுதப்பெற்ற தமிழ்ப்பகுதிதான் பல்லவர்களின் தமிழ்க்கல்வெட்டுகளில் தொன்மையானது. இவனுடைய 21 ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பெற்ற, தருமபுரி மாவட்டம் கோரையாற்றில் கிடைத்த நடுகல் கல்வெட்டை இரண்டாவதாகக் கொள்ளலாம்.இந்த நடுகல்லில் தமிழ்வட்டெழுத்து ஆகிய இரு எழுத்துகளும் உள்ளன.கல்வெட்டுகளால் அக்காலத்தில் இருந்த தமிழ்ப்பயன்பாடு பற்றிய செய்திகள் தெரிகின்றன.

### 1.14.15.1அரச மரபு சுட்டல்

பல்லவர்காலக் கல்வெட்டுகளில் பல்லவ மன்னர்களை 'வர்மர்' எனவும் 'போத்தரையர்' எனவும் 'விக்கிரம பரமர்' எனவும் அடைமொழிகளால் அழைத்துள்ளனர்.

### 1.14.15.2.வெற்றிகொண்ட ஊர்ப்பெயரைக் குறிப்பிடல்

பல்லவ அரசர்களின் கல்வெட்டில் பல்லவ மன்னர்கள் தாங்கள் வெற்றிகொண்ட ஊர்ப்பெயருடன் தங்கள் பெயரை இணைத்து வழங்கியுள்ளமையைக்குறிப்பிட்டுள்ளது.

முதலாம் நரசிம்மவர்மன் சாளுக்கிய மன்னரின் தலைநகராகிய வாதாபியை வெற்றிகொண்டான். அக்காரணம் பற்றி அவன் திருக்கழுக்குன்றம் கல்வெட்டில் 'வாதாபி கொண்ட நரசிம்மன்' என அழைக்கபெறுகின்றான்.

அதுபோல் தெள்ளாற்றில் நடைபெற்ற போரில் பல்லவ மன்னன் ஒருவன் வெற்றிபெற்றான். எனவே அவன் 'தெள்ளாறு எறிந்த நந்திவர்மன்' என்று அழைக்கப்பெற்றான் என்பதையும் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

வரலாற்றில் காலம் என்பது முக்கிய இடம்பெறுகின்றன. அரசன் முடி சூடிய ஆண்டு, அரசன் போர்செய் ஆண்டு, கொடை நல்கிய ஆண்டு இவற்றை அறிவதற்குக் கல்வெட்டுகள் பெருந்துணைபுரிகின்றன.

பாண்டிய மன்னர்கள் தமிழ்ப்பணிபுரிந்த அரசர்களுள் குறிப்பிடத்தகுந்தவர்கள். சின்னமனூர்ப் பெரிய செப்பேடும், தளவாய்புரச்செப்பேடும் சிவகாசிச்செப்பேடும், கீழ்மாத்தூர்கல்வெட்டும் பாண்டிய மன்னர்களின் தமிழ்ப்பணியைப் போற்றிப் பாராட்டுகின்றன. சின்னமனூர் பெரிய செப்பேட்டில் "மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" என்ற குறிப்பைத் தருகின்றது.பாண்டிய மன்னர்கள் தமிழ் வளர்ச்சிக்குச் சங்கம் வைத்திருந்ததையும் தமிழில் மகாபாரதம் முதலிய நூல்களை மொழிபெயர்க்க உதவினர் என்பதையும் இக்குறிப்பு காட்டுகின்றது.

### 1.14.16கீழ்மாத்தூர் கல்வெட்டு

கீழ்மாத்தூர் கல்வெட்டில் 'தமிழ்வேள்' என்றொருவர் இருந்துள்ளமை குறிப்பிடப்பட்டுள்ளது. இவர் முத்தமிழிலும் வேதம், புராணம், பாஞ்சாரம் முதலாகிய நூல்களில் நல்ல புலமை பெற்றிருந்தார் என்ற குறிப்பும் கல்வெட்டுகள் வழி அறியமுடிகின்றது. பாண்டியர்கள் காலத்தில் தமிழ்ப்புலமை பெற்றிருந்த அறிஞர்களுக்குத் தமிழ்வேள் என்ற பட்டம் அளிக்கப்பெற்றது என்பதும் பாண்டியர் காலக் கல்வெட்டுகளால் அறியமுடிகின்றது.

### 1.14.17.பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுகள்

பிற்காலப் பாண்டியர்களின் கல்வெட்டுகள் முற்காலப் பாண்டியர்களின் கல்வெட்டிலிருந்து சிறிது மாறுபட்டுக் காணப்படுகின்றன. பிற்காலப் பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுகளில் அம்மன்னர்களின் வரிசைமுறை, உறவு நிலைகளை ஆகியன குறிப்பிட்டப்படவில்லை. அரசன் எந்த ஆண்டில் ஆளத் தொடங்கினான் என்பதையும் அறியமுடியவில்லை. முற்கலப் பாண்டியர்களின் கல்வெட்டுகளைப் போல் இவர்களின் கல்வெட்டுகளில் கலி ஆண்டோ, சக ஆண்டோ குறிப்பிடப்படவில்லை. அரசனின் ஆட்சியாண்டும் கோள்நிலையும் மட்டும் கூறப்பட்டுள்ளன.

பிற்காலப் பாண்டியர்கள் தங்கள் பெயர்களுடன் சில பட்டப்பெயர்களையும் இணைத்துள்ளனர். முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டுகள் அவனைச் 'சோணாடு கொண்டருளிய சுந்தர பாண்டிய தேவர்' எனவும் 'சோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டிய தேவர்' எனவும் குறிப்பிடுகின்றன.

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் மூன்றாம் இராசராசனைத் தோற்கடித்து அவன் தலைநகரான தஞ்சையையும் உறந்தையையும் அழித்தான். சோழர்களின் இரண்டாம் தலைநகரான பழையாறைக்குச் சென்று சோழர்கள் பட்டம் சூடிக்கொள்ளும் ஆயிரத்தளி மண்டபத்தில் வீர அபிடேகம் செய்துகொண்டான்.அங்கிருந்து தில்லை சென்று தில்லை அம்பலத்தாண்டவனை வழிட்டு, தன்னாடு திரும்புகையில் பொன்னமராவதி அரண்மனையில் சிலகாலம் தங்கினான். போசள அரசனின் கருத்தின்படி மூன்றாம் இராசராசனை அழைத்து தன் கீழ்ச் சிற்றரசனாக அமர்த்தினான். அதனால்தான் கல்வெட்டுகள் மேற்கண்டவாறு எழுதப்பட்டன.

### 1.14.18. நடுகற்கள்

பண்டைத் தமிழர்கள்போரில் இறந்த வீரர்களுக்கு ஈமக்கடன் செய்து நடுகல் நட்டு வழிபட்டுள்ளனர். இவ்வகையில் நடப்பெற்ற கல்லே பொதுவாக நடுகல் எனப்படும். இதுவரை கிடைத்துள்ள நடுகற்களுள் போர் வீரர்களுக்கு நடப்பட்ட கற்களே மிகுதி. நடுகல் பற்றிய பல குறிப்புகள் சங்க நூல்களிலும் பிற்கால நூல்களிலும் காணப்படுகின்றன. வீரர்களின் இறப்பு காரணமாக நடுகற்கள் நடப்படுவதால் இக்கற்களை வீரக்கல் (*Hero Stones*) என்று குறிப்பிடும் மரபு உண்டு.

### 1.14.18.1நடுகற்களின் அமைவிடம்

நடுகற்கள் போர் நடைபெற்ற ஊரின் புறத்தே மிகுதியும் காணப்படுகின்றன. சில நடுகற்கள் ஏரிக்கரையிலும் ஆற்றங்கரையிலும் காணப்படுகின்றன. சில நடுகற்கள் ஊரிலிருந்து அதிகமான தொலைவுடைய காட்டுப்பகுதிகளில் காணப்படுகின்றன. போர்க்களத்தில் வீரர்கள் வீழ்ந்த இடத்தில் நடுகற்கள் நடப்பெற்றன எனவும்,வீர்கள் இறந்த இடங்களிலோ வேறு இடங்களிலோ நடுகற்கள் நடப்பட்டிருக்கலாம் எனவும், பெரும்பாலும் வீரர்களைப் புதைத்த இடத்தில் நடுகற்கள் நடப்பட்டுள்ளன எனவும் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

### 1.14.18.2நடுகற்கள் போர்க்களத்தில் இடம்பெறல் மரபு

ஒரு போர் இரண்டு இடங்களில் நடந்தால் அந்த அந்த ஊர்களில் வீழ்ந்துபட்ட வீரர்களுக்கு அந்த அந்த ஊர்களில் நடுகல் வைப்பது மரபு.வட ஆர்க்காடு மாவட்டத்தில் சாத்தனூர், அய்யாத்தான்பாளையத்தில் கிடைத்துள்ள நடுகற்கள் சான்றாகும். பராந்தக சோழன் ஆட்சிக்காலத்திர் ஆநிரைகள் கவர்ந்து செல்லப்பெற்றன. அவற்றை மீட்கும்பொழுது அய்யாத்தான் பாளையத்தில் ஒரு மறவனும், சாத்தனூரில் வேறொரு வீரனும் இறந்து பட்டனர். அதன் அடிப்படையில் இரண்டு ஊர்களிலும் அந்த அந்த ஊர்களில் நடுகற்கள் நடப்பட்டுள்ளன.

### 1.14.18.3.ஒரே இடத்தில் பல நடுகற்கள்

சாத்தனூரில் பல நடுகற்கள் காணப்படுகின்றன. இவை காலத்தால் வேறுபட்டவை. மகேந்திரவர்மன் காலத்திய நடுகற்களும் உண்டு. முதல் நரசிம்மவர்மன் காலத்திய நடுகற்களும் உண்டு. இரண்டாம் நரசிம்மவர்மன் காலத்திய நடுகல்லும் உண்டு. பராந்தகன் காலத்திய நடுகல்லும் உண்டு. எனவே ஊரின் ஒரு பகுதியில் இவ்வீரர்களுக்கு நடுகல் எடுக்கப்பெற்றிருக்க வேண்டும் என்று அறியமுடிகின்றது.

### 1.14.18.4.நடுகல் எடுக்கும் மரபு

நடுகற்கள் போரில் வீழ்ந்துபட்ட மறவர்களுக்கு எடுப்பது என்று அறிந்தோம். இவ்வாறு நடுகல் எடுப்போர் அரசன் வீரனுக்கு எடுப்பதும், மகன் தந்தைக்கு எடுப்பதும், தந்தை மகனுக்கு எடுப்பது, அண்ணன் தமிபிக்கு எடுப்பது, தம்பி அண்ணனுக்கு எடுப்பது,வீரர்கள் வீரர்களுக்கு எடுத்தது, ஊரார் வீரர்களுக்கு எடுத்தது, என்று பல வகையில் நடுகற்கள் எடுப்பதைக் காணமுடிகின்றது.

### 1.14.18.5.நடுகற்கள் இருப்பிடம்

தமிழகத்தின் பல பகுதிகளில் நடுகற்கள் காணப்படினும் திருவண்ணாமலை மாவட்டம் செங்கத்தில் பல முக்கியத்துவம் வாய்ந்த நடுகற்கள் கிடைத்துள்ளன.சேலம் மாவட்டம்,தருமபுரி மாவட்டம், வேலூர் மாவட்டத்திலும் பல நடுகற்கள் கிடைத்துள்ளன. இப்பகுதியில் நடுகற்கள் இருக்கும் இடத்தை வேடியப்பன் கோயில் என்கின்றனர்.

வேடர், கிருட்டினராப்பன், மீனராப்பன், சன்யாசியப்பன் என்று நடுகற்கள் பல பெயர்களில் வழங்கப்படுகின்றன. சில இடங்களில் ஊமை வேடியப்பன், இரட்டை வேடியப்பன், சாவுமேட்டு வேடியப்பன், ந்ததமேட்டு வேடியப்பபன் எனவும் ஆஞ்சநேயர் கல்லு எனவும் நடுகற்கள் பெயர்பெறுகின்றன.

### 1.14.18.6.நடுகற்களின் உருவம்

நடுகற்கள் பெரும்பாலும் போர்புரியும் வீரன் வடிவில் காணப்படுகின்றன. கைகளில் வில்லும், அம்பும் ஏந்தியபடி உருவம் இருக்கும். சில நடுகற்களில் வாளும் கேடயமும் ஏந்தியபடி வீரனின் உருவும் இருக்கும். சில நடுகற்களில் ஒரு கையில் வில்லும் மறுகையில் இடையில் உள்ள குறுவாளை உருவும் வண்ணம் காட்சி இடம்பெற்றிருக்கும்.

பல நடுகற்களில் வீரனின் உடலில் பல அம்புகள் தைத்தபடி நிற்பது காட்சியாக்கப்பட்டிருக்கும்.

ஆநிரைகளை மீட்பதுபோல் சில நடுகல் வீரன் காட்டப்பட்டுள்ளான். இவை ஆநிரை மீட்டலின்பொழுது ஏற்பட்ட போரில் வீழ்ந்துபட்ட வீரனுக்கு எடுக்கப்பெற்ற நடுகல்ஆக இருக்கும். அதுபோல் புலியுடன் போர்புரிவதுபோல் சில நடுகற்கள் உள்ளன. செங்கம் பகுதியில் காணப்படும் இந்த நடுகற்கள் புலியுடன் சண்டையிட்ட வீரனுக்கு எடுக்கப்பட்டது என்று அறிஞர்கள் நம்புகின்றனர்.

### 1.14.18.7.நடுகற்களில் எழுத்துகள்

நடுகற்களில் பீடும் பெருமையும் எழுதி வைப்பது மரபு.அவ்வகையில் வட்டெழுத்தில் எழுத்தப்பெற்ற கல்வெட்டுகளும், தமிழ் எழுத்தில் எழுதப்பெற்ற கல்வெட்டுகளுகளும், கிரந்த எழுத்தில் எழுதப்பெற்ற கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. தருமபுரி மாவட்டம் பாப்பாம்பட்டியில் கிடைத்துள்ள நடுகல் இதுவரை வட்டெழுத்தில் கிடைத்துள்ள நடுகற்களுள் பழைமையானது. தொன்மைக்காலத்தில் இருந்த தமிழ்மொழி பற்றிய ஆய்வுக்கு இந்த நடுகல் எழுத்துகள் உதவுகின்றன.

நடுகற்களில் கல்லில் உள்ள வீரனின் பெயர்,அரசனின் பெயர், ஆட்சியாண்டு, போர் பற்றிய குறிப்பு, வீரனின் சிறப்பு,கல்நட்டார் பெயர் முதலியன நடுகற்களில் பொறிக்கப்பட்டிருக்கும்.சில நடுகல் உருவம் இல்லாமலும்,சில நடுகற்களில் உருவம் மட்டும் காணப்படுகின்றன.

### 1.14.18.8.நடுகல் எடுக்கும் முறை

நடுகல் எடுப்பது பற்றி தொல்காப்பியமும் புறப்பொருள் வெண்பாமாலையும் பல குறிப்புகளைத் தருகின்றன. தொல்காப்பியம் நடுகல் எடுப்பதை ஆறு கூறுகளாக்கிக் குறிப்பிடுகின்றது.

" காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்

சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தலென்று

இருமூன்று மரபில் கல்லொடு புணரச்

சொல்லப்பட்ட எழுமூன்று துறைத்தே"

என்று குறிப்பிடுகின்றது.

புறப்பொருள் வெண்பாமாலை 1.கற்காண்டல், 2 கற்கோள் நிலை, 3கல் நீர்ப்படுத்தல், 4 கல்நடுதல், 5.கல்முறைப் பழிச்சல், 6.இல்கொண்டு புகுதல் என்று ஆறுகூறுகளைக் குறிப்பிடும்.

**1.காட்சி**

காட்சி என்பது கல் உள்ள இடத்தைச் சென்று காண்பதும்-கல்லைத் தேர்ந்தெடுப்பதும் ஆகும்.கல் காணுதலே காட்சியாகும். மறவர், கூத்தர், பாணர் கல் தேர்வு செய்ய செல்வது உண்டு. இவ்வாறு செல்பவர்கள் கல் செதுக்கத் தக்கதா, எழுத்துகளைப் பொறிக்க இயலுமா என்று நூல்நெறி மரபில் நின்று ஆராய்ந்து தேர்ந்தெடுப்பர்.

**2.கால்கோள்**

கால்கோல் என்பது கல்கோள் எனவும் குறிப்பிடப்படுவது உண்டு. நடுகல் செய்வதற்குரிய கல்லை வெட்டிக்கொள்வது ஆகும். மாலையும் மலரும் மதுவும் படைத்து,கல்லைக்கொள்வது ஆகும். புகை எழுப்பி, மணியடித்து, இறந்து பட்ட வீரனுக்கு உரிய கல் இது என்று பறையொலிப்பக் கல் கொணர்வர்.

**3.நீர்ப்படை**

நடுகல் செய்ய எடுத்த கல்லை நீராட்டித் தூய்மை செய்வர். தேர்ந்தெடுக்கப்பெற்ற கல்லை வண்டியில் ஏற்றி,அதை எடுத்து வந்து நீராட்டி, வாசனையுடைய மஞ்சன நீராட்டுவது வழக்கம். புறப்பொருள் வெண்பாமாலையில் இது பற்றிய குறிப்பு காணப்படுகின்றது.

**4.நடுதல்**

நீராட்டிய கல்லை,மலரும்,மதுவும் காட்டி, செம்மறி ஆட்டுப்பலியிட்டு, மயிற்பீலி சூட்டி படலை சாற்றிப்விழா எடுத்து நடுகல் நடுவது வழக்கம்.

**5.பெரும்படை**

தெய்வமாக்கிய நடுகல் வீரன் முன்பு தீபங்கள் முதலிய சிறப்புகளைப் படைத்தல் பெரும்படை என்று இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் குறிப்பிடுவர்.

நடுகல் ஒற்றைக் கற்களாகவும் சில இடங்களில் வேறுபட்டும் காணப்படுகின்றன. மூன்று பக்கங்களில் பலகைக்கற்கள் நிறுத்தப்பட்டு அடியில் ஒரு பலகைக்கல்லும், தலையில் ஒரு பலகைக்கல்லும் ஒரே பலகைக்கல்லும் கொண்டதாக இவை உள்ளன. கல்லால் எடுக்கப்பெற்ற திண்ணை போன்றும், கல்லறை போன்ற அமைப்பிலும் இவை காணம்ப்படுகின்றன. இவ்வகை அமைப்பில் உள்ளவற்றில் பின்புறத்தில்வீரனின் உருவமும் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளன. இதனைக் கல்திட்டை எனவும், கல்தெற்றி எனவும் கற்பதுக்கை எனவும் கல்லறை எனவும் வேறுபெயர்களால் குறிப்பிடப்படுவதும் உண்டு. இந்நடுகற்களைக் கோயிலாகவும் தெய்வமாகவும் கருதும் மரபை மலைபடுகடாம் குறிப்பிடுகின்றது. கூத்தர்கள் நன்னனின் நவிரமலையில் இருந்த நடுகற்களை வணங்கியக் குறிப்புகளை மலைபடுகடாம் குறிப்பிடுகின்றது.

**6.வாழ்த்தல்**

நடுகற்களாய் நின்ற வீரனின் திருவுருவம் முன்னர் மக்கள் கூடி வழிபடுவதும் அவன் மெய்ப்புகழைப் புகழ்ந்து பாடுவதும் ஏற்பட பின்னாளில் விழாக்கள் வேடிக்கைகள், நடைபெறத் தொடங்கின. சூலம், கத்தி, குதிரை முதலியன

நிறுத்தப்பட்டன.இந்த நடுகற்களுக்கு விழா எடுக்கும்பொழுது ஆடுகளைப் பலியிட்டுள்ளனர்.மது வைத்துப் படைக்கப்பட்டுள்ளது.

### 1.14.18.9.நடுகல்லும் நம்பிக்கையும்

நடுகல்லைப் போர்வீரனாக எண்ணிய மக்கள் பின்னாளில் தெய்வநிலைக்கு உயர்த்தினர்.நேர்த்திக்கடன் செலுத்தும் முறையும் பின்னாளில் ஏற்பட்டது.நடுகற்களை வழிபடுவதால் மக்கள் நலம்பெறுவர் என்று கருதினர்.மழை இல்லாத காலங்களில் இந்த நடுகற்களை வழிபட்டால் மழைவளம் சிறக்கும் என்பது மக்களின் நம்பிக்கையாகும்.

சிலப்பதிகாரத்தில்

"தெய்வம் கொள்ளுமின் சிறுகுடியீரே

தொண்டகம் தொடுமின் சிறுபறை தொடுமின்

கோடுவாய் வைம்மின் கொடுமணி இயக்குமின்

குறிஞ்சி பாடுமின் நறும்புகை எடுமின்

பூப்பலி செய்மின் காப்புக்கடை நிறுமின்"

என்று குன்றவர் பத்தினிக்குக் கோட்டம் சமைப்பதை அடிகளார் குறிப்பிட்டுள்ளார்.

## தன்மதிப்பீட்டு வினாக்கள்

1.கல்வெட்டியல் என்றால் என்ன?

2.கல்வெட்டுகளைப் படிப்பதில் புகழ்பெற்ற அறிஞர்கள் யாவர்?

3.கல்வெட்டின் அமைப்பு எத்தனைப் பகுதிகளைக் கொண்டிருக்கும்?

4.கல்வெட்டுகளில் இடம்பெறும் மங்கலச் சொல் என்ன?

5.கல்வெட்டில் இடம்பெறும் செய்திகள் யாவை?

## பாடத்தொகுப்புரை

- வரலாறு அறிவதற்கு உதவும் கல்வெட்டுகளை அறிவியல் முறையில் படிப்பது கல்வெட்டியல் என்னும் துறையாகும்.
- கல்வெட்டுகள் சில அமைப்பு ஒழுங்கில் எழுதப்பட்டுள்ளன.
- அரசர்கள் தாம் தொடங்கிய நற்பணிகள் தொடர்ந்து நடக்க வேண்டும் என்று அதனை ஆணையாகப் பிறப்பித்துக் கல்லிலும் செம்பிலும் வெட்டிவைத்துள்ளனர்.
- கல்வெட்டுகள் தொடக்கம்,முடிவு இவற்றுடன் கையெழுத்தையும் கொண்டுள்ளன.
- சமண சமயத் துறவிகளுக்குப் படுக்கை அமைக்க பலரும் உதவியுள்ளதைக் குகைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.
- மொழியமைப்பை அறிவதற்குக் கல்வெட்டுகள் பெருந்துணைபுரிகின்றன.
- கல்வெட்டுகளில் ஊராட்சி,மருத்துவம்,கல்வி,நீதிமுறை குறிப்பிடப்பட்டுள்ளன

## முக்கியச்சொற்கள்

சாசனம்-கல்வெட்டு

ஸ்வஸ்தி ஸ்ரீ-மங்கலம் உண்டாகுக

திருநந்தா விளக்கு-இறைவனுக்கு ஏற்றப்படும் விளக்கு

பள்ளி-கற்படுக்கை

தன் மதிப்பீட்டு விடைகள்

1.கல்வெட்டுகள் பற்றி அறிவியல் முறைப்படி படிக்கும் அல்லது ஆராயும் துறையே கல்வெட்டியலாகும்.

2.தி.வை.சதாசிவப் பண்டாரத்தார், சுந்தரேச வாண்டையார், மயிலை.சீனி.வேங்கடசாமி, ஔவை. துரைசாமி பிள்ளை, மா.இராசமாணிக்கனார் உள்ளிட்ட அறிஞர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இன்று வாழும் அறிஞர்களுள் ஐராவதம் மகாதேவன், இரா.நாகசாமி, நடனகாசிநாதன், செ.இராசு.சுப்பராயலு, விசய வேணுகோபால்

3.கல்வெட்டு ஐந்து பகுதிகளைக் கொண்டிருக்கும்.அவை மங்கல வாசகம்,சாசனம் எழுதப்பட்ட காலம்,சாசனச்செய்தி, கையெழுத்துகள், ஓம்படைக்கிளவி.

4.'ஸ்வஸ்தி ஸ்ரீ'(மங்கலம் உண்டாகுக)

5. பெரும்பாலான கல்வெட்டுகள் கோயில்களுக்கு நிலம் வழங்கப்பட்டதையோ, அல்லது கோயில்களில் திருநந்தா விளக்கு அமைப்பதற்குச் சாவா மூவாப் பேராடு, பசு அல்லது எருமை" வழங்கப்பட்டதையோ குறிக்கின்றன.

மாதிரி வினாக்கள்

1.கல்வெட்டியல் என்றால் என்ன? விளக்குக

2.கல்வெட்டின் அமைப்பினை விளக்குக

3.கல்வெட்டில் இடம்பெறும் செய்திகளை விளக்குக

4.குகைக்கல்வெட்டு பற்றி விளக்குக

5.சித்தன்னவாசல் - குறிப்பு வரைக

6.மொழியியல் ஆய்வுக்குக் கல்வெட்டுகள் எவ்வாறு துணைபுரிகின்றன?

7.கல்வெட்டுகளில் தமிழ்ச்சமூக அமைப்பு எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?

8.தமிழக வரலாற்றை அறிவதற்குக் கல்வெட்டுகள் எவ்வாறு பயன்படுகின்றன?

9.நடுகற்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக

10.தொல்காப்பியம் குறிப்பிடும் நடுகல் பற்றிய செய்திகளைத் தொகுத்துரைக்கவும்

## குறிப்புகள்

...........................................................................................
...........................................................................................
...........................................................................................
...........................................................................................
...........................................................................................
...........................................................................................
...........................................................................................
...........................................................................................
...........................................................................................
...........................................................................................
...........................................................................................
...........................................................................................
...........................................................................................
...........................................................................................
...........................................................................................
...........................................................................................
...........................................................................................
...........................................................................................
...........................................................................................
...........................................................................................
...........................................................................................
...........................................................................................
...........................................................................................
...........................................................................................
...........................................................................................
...........................................................................................
...........................................................................................
...........................................................................................
...........................................................................................
...........................................................................................
...........................................................................................
...........................................................................................
...........................................................................................

அலகு 2

## தந்திவர்மன் கல்வெட்டு

தந்திவர்மன் என்னும் அரசன் பல்லவ அரசனாவான். இவன் நந்திவர்மன் என்ற பல்லவ அரசனின் மகனாவான். தந்திவர்மன் கி.பி.777 முதல் கி.பி.830 வரை ஆண்டவன்.இவனுக்கு மாற்பிடுகு என்னும் பட்டப்பெயரும், வைரமோகன் என்ற வேறுபெயரும் உண்டு. இவன் கதம்ப மன்னர் குலத்தில் பிறந்த அக்கள நிம்மடி என்ற பெண்ணை மணந்துகொண்டவன். திருச்சிராப்பள்ளி வட்டத்தில் இக்காலம் ஆலம்பாக்கம் என வழங்கும் தந்திவர்மமங்கலத்தில் கைலாசநாதர்கோயிலை இவன் கட்டியுள்ளான். இவனுக்கு இராட்டிரகூட மன்னன் கோவிந்தனும், பாண்டிய மன்னன் வரகுணமகாராசனும் பகைவர்களாக இருந்துள்ளனர்.

### கல்வெட்டு தோன்றிய காலம்

தந்திவர்மன் அரியணை ஏறி 12 ஆம் ஆண்டில் அதாவது கி.பி,789 இல் இக்கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது.

### கல்வெட்டு அமைவிடம்

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலின் கருப்பக்கிருகத்திற்குப் போகும் வாயிலுக்கு அருகில் தரையில் வைக்கப்பெற்றுள்ள ஒரு கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. கல்வெட்டு தமிழும், வடமொழியும் கலந்து எழுதப்பட்டுள்ளது.

### கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள செய்தி

திருவல்லிக்கேணிக் கேணி கோயிலுக்கு உரிமையுடையவர்கள், கோயிலுக்குரிய கருமாரச் சேரிப்புலத்தை ஒற்றிக்கு வைத்துவிட்டனர். அதனால் நாற்பத்தைந்து காடி நெல்வருமானம் குறைந்துபோக, சுவாமிக்குத் திருவமுது தடைப்பட்டது.புகழ்த்துணை விசையரையன் முப்பதின் காடி நெல்லும் ஐங்கழஞ்சு பொன்னும் கொடுத்து ஒற்றியை மீட்டுத் தன்னுடையதாக்கி, நாள் ஒன்றுக்கு ஐந்துநாழி நெல்லைக் கொடுத்து,அதை நன்கு குற்றுதலால் உண்டாகும் இரண்டு நாழி தூக்குதல் அரிசியைக் கொண்டு, சங்கசர்மனும், சத்திசர்மனும், இளைய சத்திசர்மனும் சுவாமிக்கு இரவுப் போனகம் காட்டக் கடவார்கள் எனவும், அப்போனகம் தடைப்படுமாயின், அவிப்புலம், தத்தன்புலம், காரை கிழான் புலம் இவைகளிலிருந்து சுவாமி போனகத்துக்குத் திருவமுத் காட்டக் கடவதென்றும், அவர்கள் தவறிவிடுவார்களானால், அரசன் விதிக்கும் தண்டத்திற்குட்பட்டு அவர்கள் நடத்தக் கடவதென்றும் ஏற்பாடுகளைச் செய்துள்ளான்.

இவனே பொன்விளக்கு, வட்டில், உலோகத்தால் செய்த பானை இவைகளையும் கொடுத்துள்ளான்.

இக்கல்வெட்டில் வந்துள்ள காப்புரை

"இதனை ரக்ஷிப்பார் அடியிரண்டும் என் முடிமேல்"என்பதாகும்.

## முதல் பராந்தகன் கல்வெட்டு

முதலாம் ஆதித்த சோழனின் மகன் முதல் பராந்தக சோழன் ஆவான். இவன் கி.பி.907 இல் அரியணை ஏறி, நாற்பத்தெட்டாண்டுகள் ஆட்சி செய்தவன். இவனுக்கு மதுராந்தகன், வீரசோழன், வீரநாராயணன், இருமடிச்சோழன் என்னும் வேறு பெயர்களும் உண்டு. இவன் பாண்டிய நாடு,ஈழநாடு முதலியவைகளை வென்றான். வாணர்களது வாணகப்பாடியை வென்று கங்க அரசனாகிய இரண்டாம் பிருதிவிபதிக்குக்கொடுத்தான். நெல்லூர் நாட்டில் உள்ள சேட்புலி நாட்டை

வென்றவன்.இவன் ஆட்சி தெற்கே கன்னியாகுமரி முதல் வடக்கே நெல்லூர் வரை பரவியிருந்தது.

பராந்தகன் தில்லைச்சிற்றம்பலத்துக்குப் பொன் வேய்ந்த பெருமைக்கு உரியவன். தஞ்சாவூர் திருப்புள்ளமங்கைக்கோயில், திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி கோயில், திருவாவடுதுறை கோயில் முதலியன் இவன் காலத்தில் கட்டப்பட்டன.

பராந்தக சோழன் பயிர்த்தொழிலுக்கு முத்மையளித்தவன். சிதம்பரம் பகுதியை வளமுறச்செய்யும் வீரநாராயணன் ஏரி(வீராணம் ஏரி) இவன் காலத்தில் வெட்டப்பட்டது. வேலூ மாவட்டம் சோளிங்கபுரத்தில் உள்ள சோழ வாருதி என்ற குளத்தை அகலப்படுத்தியவன் இவனே யாவான்.

**கல்வெட்டு இருக்குமிடம்**

இவன் அரியணை ஏறிய 33 ஆம் ஆண்டில் அதாவது கி.பி.940 இல் இவன் வெட்டுவித்த கல்வெட்டு மதுரைக்கு வடகிழக்கில் ஆறு கல்தொலைவில் உள்ள ஆனைமலை நரசிங்கப்பெருமாள் கோயில் கருப்ப இல்லில் வாசலுக்கு இடப்பக்கமுள்ள பாறையின்மீது செதுக்கப்பட்டுள்ளது.

முதல் பராந்தகன் காலத்தில் மதுரையிலிருந்து ஆட்சி செய்தவன் இராசசிம்ம பல்லவன் ஆவான். அவன் மீது பாண்டியன் படையெடுத்துச்சென்று அவனை வென்றான். தோற்ற இராசசிம்மன் ஈழநாட்டு வேந்தனாகிய ஐந்தாம் காசிபனை உதவுமாறு வேண்டினான். அவனும் சக்கசேனாபதியின் தலைமையில் பெரும்படை ஒன்றை அனுப்பினான். வெள்ளூர் என்ற இடத்தில் இராசசிம்ப பாண்டியனுக்கும் முதல் பராந்தகனுக்கும் பெரும்போர் நடந்தது. பராந்தகன் வென்றான்.

பாண்டியன் படையிம் இலங்கைப் படையும் தோற்றன. இப்போரில் பராந்தகனுக்குப் படைத்தலைவனாகப் பணியாற்றியவன் சோழநாட்டுப் பாம்புணிக் கூற்றத்து அரைசூருடையான் தீரன் சென்னிப் பேரரையனும் உடையர்பாளையம் வட்டம் பழுவூரிலிருந்த பழுவேட்டரையன் கண்டன் அமுதனும் பரதூருடையான் நக்கன் சாத்தனும் ஆவர்.

**கல்வெட்டில் இடம்பெற்றுள்ள செய்தி**

ஆனைமலை நரசிங்கப் பெருமானடிகள்,தம்முடைய நிலங்களுக்காக,நரசிங்க மங்கலத்துச் சபையாருக்கு ஆண்டுதோறும் பதினெட்டு ஈழக்காசுகளை வரியாக இட வேண்டும். இப்பதினெட்டு ஈழக்காசுகளில் மூன்றில் ஒரு பாகம் ஆறு. இந்த ஆறு ஈழக்காசுகளும் ஆண்டுதோறும் சபையார்க்குக் கிடைக்குமாறு, அதிகாரிகள் மருதூருடையான் அருணிதிகலியன், பதைந்து ஈழக்காசுகளை மூலதனமாகச் சபையாரிடத்தில் கொடுத்துள்ளான்.ஓர் ஈழக்காசுக்கு மாதம் ஒன்றுக்கு வட்டி கால் புத்தக்கமாகப் பதினைந்து ஈழக்காசுகளுக்கு மூன்றே முக்கால் புத்தக்கம் ஆகும். ஓராண்டிற்கு 33-4 ஜ் 12குநாற்பத்தைந்து புத்தக்கம். ஓர் ஈழக்காசுக்குப் புத்தக்கம் (45-6) 71/2 ஆகின்றது. புத்தக்கம் நாற்பத்தைந்துக்கு ஆறு ஈழக்காசு. எனவே பதினைந்து ஈழக்காசை மூலதனமாக வைத்து விட்டதனால் மேற்கூறிய வட்டி விகிதப்படி ஆண்டுதோறும் 6 ஈழக்காசுகள் சபையார்க்குச் சேர்ந்துவிடுகின்றன. இந்த ஆறு ஈழக் காசு நீங்கலாக நரசிங்கப் பெருமானடிகள் பன்னிரண்டு ஈழக் காசுகளை நரசிங்க மங்கலத்துச் சபையார்க்குக் கொடுப்பதாக உடன்பட்டு, கோயிலுக்குச் சொந்தமான ஊருடையான் குளத்தை உரிமையாக்கிக்கொண்டான். பின் இவன் தான் இறை காவலாகக் காத்தகாசுகளைக் கொண்டு இக்குளத்தின் கீழ்,நீர் நிலம், இருவேலியை

வாங்கினான். குளத்தைக் கல்லியும்,கரையை உயர்த்தியும் அதில் நீர் கோக்குமாறு செய்தான்.

இந்நிலத்தால் வந்த வருவாய் ஐந்து நாழிக்காலால் நெல் முந்நூறு கலத்தில் பாதியாகிய நூற்றைம்பது கல நெல்லுங்கொண்டு நரசிங்கப் பெருமானடிகளுக்கு மூன்று சந்தியும் திருவமுது செய்விப்பதென்றும், எஞ்சிய நூற்றைம்பது கல நெல்லுங்கொண்டு நாடோறும் வேதம் வல்ல பிராமணர் ஐவருக்குச் சிறப்பான அமுது செய்விப்பதென்றும் ஏற்பாடுகளைச் செய்திருந்தான்.

**வேதம் வல்ல பிராமணர் உண்ணுதற்கு அளித்த நிவந்த விவரம்**

ஒருவர்க்குப் பத்து அல்லது எட்டு முறை குற்றப்பட்ட இரு நாழி அரிசியும்,கறி மூன்றும்,தயிர் நாழியும்,நெய் இரு செவிடும்,பாக்கு இரண்டும்,வெற்றிலை இரண்டும் ஆக இம்முறைப்படி ஐவர்க்கு(நரசிங்கப் பெருமானடிகள் திருவமுது செய்யும் பொழுது) அமுது செய்விப்பதென்று ஏற்பாட்டைச் செய்துள்ளான்.இவர்களுக்குச் சமைப்பானுக்கு நாடோறும்நெல் ஐந்நாழியும் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை புடைவையும்(வேட்டியும்) கொடுக்குமாறு திட்டம் செய்திருந்தான்.

**கல்வெட்டு**

1.ஸ்வஸ்தி ஶ்ரீ மதிரை கொண்ட கொப்பரகெசரி பன்மற்கு யாண்டு முப்பத்து முன்றாவது இவ்வாண்டு(தெ) வ(தா)னங் கிழிரணிய முட(டத்)துப் படும் (பி)-

2.ரம்மதெய(ம்) (ந)ரசிங்க மங்கலத்துச் சவையொ ஞ் சோழப் பெருமானடிகளதிகாரிகள் சோழநாட்டுப் புறங் கரம்பைனாட்-

3. டு மருதூர் மருதூருடையா னருணிதி கலியனுக்கு ஒட்டிக் குடுத்த பரிசாவது எங்களூர் திருவா(னை) மலை நரசிங்கப் பெருமானடிகள் (த)-

4.முடைய நிலத்தால்ச் சவையொமுக்கு (ஆ)ண்டெடுத்து இடக் கடவ ஈழக்காசுப் பதினெட்டு (இ)க்காசுப் பதினெட்டிலும் முன்றத் தெ(ர)ன் (று) ஈ-

5.ழக்காசு ஆறு.இவ்வாறு ஈழக்காசுக்கும் பலிசையாகச் சவையார் கைய்வழி குடுத்த ஈழக்காசு ஈழக்காஉப் பதினைந்து,(ப) தினைஞ்சினாலும் வந்த பலி -

6.சையாவது ஈழக்காசின் வா(ய்)த் திங்கள் காற் புத்த(க்க) மாக ஒரோ திங்களால் வந்த புத்தக்க முன்றெ முக்கால். முன்றெ முக்காலு ஓராண்டு பந்நிரண்டு தி-

7.ங்களால் வந்த புத்தக்கம் நாற்ப(த்) தைஞ்சு நாற் பத்தஞ்சினா லொரு ஈழக்காசுக்குப் புத்தக்கம் ஏழரை ஆக(ஈ)ழக் காசு (ஆ)று இவ்வாறு(ஈ)ழ-

8.க் காசும் இறை நீக்கித் தெவர் சவையார்க்கு இடக்கடவ காசு 12 பன்னிருண்டும் நீக்கி அதிகாரிகள் மருதூருடையான் அருணிதி கலியன் இறை காவலா(க) காத்த

9.காசி(னா)ல் வந்த நிலன் ஊருடையான் (கு)ளமான கலியென(ரி)யும் இக்குளத்தான் (வே)ண்டுமாறு கல்லிக் கரை நீளம் அட்டப் பெறுவதாகவும் (இ)

10.க் குளங்கரை உசர அட்டப் பெறுவதாகவும், இக்குளதினீர் (தா)ன் வெண்டு அளவுங் கொக்கப் பெறுவதாகவு மிக்குளம் இதின் கிழ் நீர் நிலனிருவே-

11.லியு மருதூருடையா னருணிதி கலியன் விலைக்குக் கொண்டு இக்குளத்தின் கிழ் நீர் நிலனிரு வெலியி(னா)ல் வந்த பொகம் அஞ்ஞாழிக் காலால் நெல்(லு) ங கலம்

12.இவையிற்றின் பாதி....

என்று தொடரும் கல்வெட்டு

இருபத்தொன்றாம் அடியில்

21. த்து மித்தன்(மம்) முட்டாமெ அயவரை(யும்) சந்திராதிச்சர் உள்ளளவும் ஊட்டுவிப்பொ மானொஞ் சவைய்யும் சிரிகாரியம் ஆராயும் வயிஷ்ணவரும்,இதன்(மம்) ரக்ஷித்தான்.

என்று முடிகின்றது.

இக்கல்வெட்டடு வழியாக முதல் பராந்தகன் காலத்தில் கோயில் பராமரிப்பு, கோயில் உள்ள இறைவனுக்கு வேதம் ஓதும் அந்தணர்கள் பாதுகாக்கப்பட்ட விவரங்கள் தெரியவருகின்றன.

**முதல் இரசராசன் கல்வெட்டு**

சோழப்பேரரசை உலக அளவில் கொண்டு சேர்த்த பெருமைக்கு உரிய அரசன் இராசராச சோழனாவன். இவன் ஆட்சிக்காலத்தில் சோழப்பேரரசு கடல் கடந்து இலங்கை, கடாரம் உள்ளிட்ட அயல்நாட்டுக்கும் பரவியது. இவனது கப்பற்படை மிகச்சிறந்து விளங்கியது. இவன் தம் ஆட்சிக்காலத்தில் பல கல்வெட்டுகளை வெட்டி அக்கால வரலாற்றை அறிவதற்குத் துணை செய்துள்ளான். இக்கல்வெட்டுகள் சோழமண்டலம் முழுவதும் பரவிக் கிடக்கின்றன. சில கல்வெட்டுகளைக் கண்டு இராசராசனின் சிறப்பினை அறிவோம்.

இராசராசன் இரண்டாம் பராந்தகன் எனப்படும் சுந்தரசோழனின் இரண்டாவது மகனாவான். கி.பி.985-முதல் 1014 வரை அரசாண்டவன். இவன் ஐப்பசி சதய நாளில் பறிந்தவன். இவன் இயற்பெயர் அருண்மொழிவர்மன் என்பதாகும். இவனுக்குச் சிவபாதசேகரன், சயங்கொண்டான், நிகரிலி சோழன், பாண்டிகுலாசினி என்னும் சிறப்புப்பெயர்கள் உண்டு. குந்தவைநாச்சியார் என்னும் தமக்கையார் இருந்தார். இவ்வம்மையாரிடத்தில் இராசராசன் பெரும் மதிப்பு வைத்திருந்தான். தஞ்சை பெரிய கோயிலைக் கட்டிய பெருமைக்கு உரியவன்.தேவரத் திருமுறைகளைத் தொகுப்பித்தவன்.

இராசராசனின் கல்வெட்டுகளுள் புகழ்பெற்றது தஞ்சை இராச ராச பெருவுடையார் கோயிலிலுள்ள கோயிலில் மேற்கு ஆவரணத்தின் முதல் மாடத்திற்கு மேல் செதுக்கப்பட்டுள்ள கல்வெட்டு குறிப்பிடத்தக்கது. கல்வெட்டு தமிழ் எழுத்தில் வெட்டப்பட்டுள்ளது.

**கல்வெட்டில் குறிப்பிடப்படும் செய்தி**

பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான் தஞ்சை இராசராசேச்சரத்தில் செம்பினால் செய்யப்பட்ட நம்பி ஆரூரனார், நங்கை பரவையார், திருநாவுக்கரையர், திருஞான சம்பந்த அடிகள், முதலாம் இராசராச சோழன், ஒலோக மாதேவியார் இவர்கள் பிரதிமங்களையும், சந்திசேகரர் திருமேனியையும் எழுந்தருளுவித்து அணிகலன்களையும் அளித்துள்ளான். இவனே யன்றி, திருஞானசம்பந்த அடிகள், திருநாவுக்கரையர், நம்பி ஆரூரனார், நங்கை பரவையார் இவர்களுக்கு, இராசேந்திரசிங்க வளநாட்டுத் திருவாலி நாட்டு, குறுவாணியக் குடியாகிய பரகேசரி புரத்து நகரத்தாரும், நம்பி ஆருரனார், நங்கை பரவையார் இவர்களுக்கு, நித்த விநோத வளநட்டு வெண்ணிக்கூற்றத்து வெண்ணி நகரத்தாரும் அணிகலன்களை அளித்துள்ளனர். இவ்வணிகலன்களை எவரும் மாற்றிவிடா வண்ணம் இவைகளின் நிறைகள் குறிக்கப் பெற்றுள்ளன.

1.ஸ்வஸ்திஸ்ரீ உடையார் ஸ்ரீ ராஜராஜீஸ்வரம் உ
2.டையார்க்கு ஸ்ரீ காரியஞ் செய்கின்ற பொய்கை-
3.நாடு கிழவன் ஆதித்தன் சூர்யனான தென்னவ
4.ன் மூவேந்த வெளான் ஸ்ரீ ராஜராஜீஸ்வரம் உ
5.(டை)டயார் கொயிலில் யாண்டு இருபத்தொன்பதாவது
6.வரை எழுந்தருளுவித்த செப்பு பிரதிமங்கள்
7.உடையார் கொயிலில் முழத்தால் அளந்தும் ரதநங்கள் சரடுநீ-
8.க்கி தக்ஷண மேருவிடங்கன் என்னும் கல்லால் நிறைஎடுத்-
9.த்தும் பொன் ஆடவல்லான் என்னுங் கல்லால் நிறை எடுத்-
10.துங் கல்லில் வெட்டினபடி...

என்று தொடங்கும் கல்வெட்டு

59.வித்த நங்கை பரவையார்க்குக் குடுத்தன.(66)திருகம்(பி) ஒன்று பொன் முக்காலெ இரண்டு மஞ்சாடியுங் குன்றி(67) திருகம்பி ஒறு பொன் முக்-
60.காலே இரண்டு மஞ்சாடி(68)

என்று கல்வெட்டு நிறைவடைகின்றது.

**இராசராசனின் உக்கல் கல்வெட்டு**

காஞ்சிபுரத்திலிருந்து வந்தவாசிக்குச்செல்லும் பெருவழியில் மாமண்டூருக்கத் தென்கிழக்கே ஐந்து கல் தொலைவில் உள்ள உக்கல் என்ற ஊரில் உள்ள திருமால் கோயிலின் மேற்குப் புறச்சுவரில் உள்ள கல்வெட்டு இராசராசன் காலத்து கல்வெட்டாகும்.இது தமிழும் கிரந்தமும் கொண்டு கொண்டு எழுப்பட்டுள்ளது.

கி.பி 1014 இல் வெட்டப்பட்ட கல்வெட்டாகும இது.இராசராசனில் வெற்றிச்சிறப்பைக் கூறும் கல்வெட்டு இதுவாகும்.

**மெய்க்கீர்த்தியால் அறியப்படும் செய்திகள்**

காந்தளூர்ச்சாலையிலுள்ள கலங்களை அறுத்தருளினான். வேங்கைநாடு, நுளம்ப பாடி, தடிகைபாடி, குடமலை நாடு, கொல்லம், கலிங்கம், ஈழமண்டலம், இரட்டபாடி, பழந்தீவு இவைகளை இராசராசன் வென்றான் என்று செய்திகள் புலனாகின்றன.

**கல்வெட்டால் அறியப்படும் செய்தி**

இராசராச சோழனது பணிமகனும்,நித்த விநோத வளநாட்டிலுள்ள ஆவூர்க் கூறத்து ஆவூரைத் தனக்குப் பிறப்பிடமாகக்கொண்டவனுமாகிய கண்ணன் ஆரூரன்,தன் அரசன் பெயரால் சயங்கொண்ட சோழ மண்டலத்துக் காலியூர்க் கோட்டத்துத் தனியூர்உக்கலாகிய விக்கிரமாபரணச் சதுர்வேதி மங்கலத்தின் மேலைபெ பெருவழியில் ஒரு கிணற்றை அமைப்பித்து அதற்கு நிவந்தம் அளித்துள்ளான்.

**நிவந்தத்தின் வகை**

இராசராசன் கிணற்றிலிருந்து தொட்டிக்கு நீர் இறைப்பார்க்கு அருண்மொழித் தேவன் மரக்காலால் நாள் ஒன்றுக்கு நெல் இரு குறுணி ஆகத் திங்கள் ஆறுக்கு நெல் முப்பது கலமும்,இராச ராச் பெயரால் தண்ணீ வார்ப்பார்க்கு நாடோறும் நெல் இரு குறுணியாகத் திங்கள் ஆறுக்கு முப்பது கலமும்,இப்பந்தலுக்கு மட்கலம் இடுவார்க்குத் திங்கள் ஒன்றுக்கு நெல் இரு தூணியாகத் திங்கள் ஆறுக்கு நெல் நான்கு கலமும்,இராச

ராசன் கிணற்றுக்கும் தொட்டிக்கும் சேதம் ஏற்பட்டால் அவைகளைப் புதுப்பிக்க ஆண்டுதோறும் இருகலனே இரு தூணி நெல்லும் ஆக 66 கலம் எட்டு மரக்கால் நெல் விளையக் கூடிய நிலத்தின் விலைக்குரிய பணத்தையும்,அதற்கு வரிக்கு உரிய பணத்தையும் தனியூர் உக்கலாகிய விக்கிரமாபரணச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார்,கண்ணன் ஆரூரனிடம் பெற்றுக்கொண்டு வரி இல்லாமல்(நிலத்தை விற்றுக்கொடுத்து அத்தர்மத்தை நடத்துவதாக இசைந்தனர்)

**கல்வெட்டில் அரிய செய்திகள்**

இராசராசக் கிணற்றிலிருந்து தொட்டிக்கு நீரிறைப்பார் முதலான பலபணியாளர்களுக்கு ஓர் ஆண்டில் ஆறு மாதங்களுக்குத்தான் கூலிகள் கொடுக்கப்பட்டு வந்தன. தண்ணீர்ப் பந்தல் இக்காலம்போல் அல்லாமல் பண்டைக்காலத்தில் ஆறு மாத காலம் நடத்தப்பெற்று வந்தது என்பது புலனாகின்றது. இக்கல்வெட்டில் வந்துள்ள பெருவழி (Road) பணிமகன்(Humble Servant) புதுக்கு(Repair) என்னும் சொற்கள் தூய தமிழ்ச்சொற்களாகும்.

**இராசராசனின் மேற்பாடி கல்வெட்டு**

இராசராச சோழனின்பத்தொன்பதாம் ஆட்சியாண்டில்(கி.பி.1014) வேலூ மாவட்டம் திருவல்லத்துக்கு வடக்கே ஆறு கல் தொலைவில் உள்ள மேல்பாடி என்னும் ஊரில் உள்ள சோழேச்சுரர் கோயிலின் அடிப்பகுதியில் இருக்கும் கல்வெட்டு தமிழும் கிரந்தமும் என்ற இரு மொழிகளில் உள்ளது.

**கல்வெட்டால் அறியப்படும் செய்தி**

சயங்கொண்ட சோழமண்டலத்துப் பெரும்பாணப்பாடித் தூநாட்டு மேற்பாடியாகிய இராசாசரியபுரத்து நகரத்தார் தங்கள் நகரில் முதலாம் இராசராச சோழன், ஆற்றூர் துஞ்சின தேவர்க்குப் பள்ளிப்படையாக எடுப்பித்தருளின அரிஞ்சிகை ஈஸ்வரத்து மகாதேவர்க்கு, ஸ்ரீ கோயிலுக்கும், திருச்சுற்றாலைக்கும், திருமுற்றத்துக்கும்,திருந ந்தவனத்துக்கும், மடைவளாகத்துக்கும் ஆக,ஒரு குறிப்பிட்ட நான்கெல்லைக்குட்பட்ட 5136 1/2 தேவதான இறையிலியாகக் கொடுத்துள்ளனர்.

**இராசராசன் தஞ்சைக்கோயில் கல்வெட்டு**

தஞ்சாவூர் பெரியகோயிலில் வடபுறச்சுவரில் இராசராசனின் இருபத்தொன்பதாம் ஆட்சியாண்டு கல்வெட்டில் திருப்பதியம் விண்ணப்பம் செய்வோர்க்கு ஏற்படுத்தப்பட்ட நிவந்தங்களைப் பற்றிய குறிப்புகளைத் தரும் கல்வெட்டு உள்ளது.இதன் காலம் கி.பி.1014 ஆகும்.

**கல்வெட்டால் அறியப்படும் செய்திகள்**

முதலாம் இராசராச சோழன் தஞ்சை இராசராசேச்சரமுடையார்க்குத் திருப்பதியம் விண்ணப்பம் செயவதற்குப் பிடாரர்கள் நாற்பத்தெண்மரகொட்டிமத்தளம் வாசிபார் ஒருவர், உடுக்கை வாசிப்பார் ஒருவர் ஆக ஐம்பதின்மரை நியமித்து அவர்களுக்கு நாள்தோறும் ஆள் ஒன்றுக்கு இராசகேசரியோடொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் முக்குறுணி நெல் உள்ளூர்ப் பண்டாரத்தில் கொடுக்குமாறு ஏற்பாடு செய்திருந்தான்.

**திருப்பதியம் விண்ணப்பம் செய்வார்க்கு ஏற்படுத்தப்பட்ட விதிகள்**

திருப்பதியம் விண்ணப்பம் செய்தவர்களில் இறந்தவருக்கும், வேற்றுத்தேசங்களுக்குப் போனவர்க்கும் பதிலாக, அவ்வவர்க்கு நெருங்கிய உறவினராய்

இருப்பார்அந்நெல்லு பெற்றுத் திருப்பதியம் விண்ணப்பம் செய்வதென்றும், அவ்வாறு நெருங்கிய உறவின் திருப்பதிகம் விண்ணப்பம் செய்யத்தகுதியுடையாராய் இல்லாவிடில், அவர்களே

யோக்கியராய் இருப்பாரை அமர்த்தி, திருப்பதியம் விண்ணப்பம் செய்வித்து அந்நெல்லைப் பெறுவதென்றும், அவ்வவர்க்கு நெருங்கிய உறவினர் இல்லையானால், அந்தத்தொழில் செய்பவர்களே தகுதியுடையராய் இருப்போரைத் திருப்பதியம் விண்ணப்பம் செய்யத் தேர்ந்தெடுப்பதோடு, அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவரே நெல்லு பெறுவதென்றும் விதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

திருப்பதியம் என்பதில் பதியம் என்பது பத்துப்பாடல்களைக் குறிக்கும். பதிகம் என்பது இலக்கண ஆழக்கில் ஆளப்படுவது. தேவராப்பாடல்களை இங்குப் பதிகம் என்னும் சொல் குறிக்கிறது.

திருப்பதியம் விண்ணப்பம் செய்வதற்கு நியமிக்கப்பட்டிருந்த நாற்பத்தெண்மர்களின் பெயர்கள் விவரம்:

1.பாலன் திருவாஞ்சியத்தடிகளான ராஜராஜப் பிச்சனான சதாசிவன்

2.திருவெண்ணாவல் செம்பொற் சோதியான தக்ஷிணமேரு விடங்கப் பிச்சனான ஞானசிவன்

3.பட்டாலகன் அம்பலத்தாடியான மனோத்தம சிவன்

4.பட்டாலகன் சீருடைக் கழலனான் பூர்வசிவன்

5.பொற்சுவரன் திருநாவுக்கரையனான பூர்வ சிவன்

6.மாதேவன் திருஞான சம்பந்தனான ஞானசிவன்

7.கயிலாயன் ஆரூரான தர்மசிவன்

8.செட்டி எடுத்த பாதமான கவச சிவன்

9.இராமன் சம்பந்தனான சத்திய சிவன்

10.அம்பலவன் பக்தர்கள் -- -- வாம சிவன்

11.கம்பன் திருநாவுக்கரையனான சதாசிவன்

12.நக்கன் சீராளனான வாம சிவன்

13.அப்பி திருநாவுக்கரையான நேத்திர சிவன்

14.சிவக்கொழுந்து சீராளனான தர்ம சிவன்

15.ஐந்நூற்றுவன் வெண்காடனான சதாசிவன்

16.அரையன் அணுக்கனான திருமறைக் காடனான தர்மசிவன்

17.அரையன் அம்பலக் கூத்தனான ஓங்கார சிவன்

18.ஆரூரன் திருநாவுக்கரையனான ஞானசிவன்

19.கூத்தன் மழலைச் சிலம்பனான பூர்வ சிவன்

20.ஐந்நூற்றுவன் சீ ஆரூரனான தத்புருஷ சிவன்

21.சம்பந்தன் ஆரூரனான வாமசிவன்

22.அரையன் பிச்சனான தர்ம சிவன்

23.காஸ்யபன் எடுத்த பாதப் பிச்சனான உருத்திரசிவன்

24.சுப்பிரமணிய ஆச்சனான தர்ம சிவன்

25.கூத்தன் அமர புஜங்கனான சதாசிவன்

26.வெண்காடனான அகோர சிவன்

27.மாதேவன் திருநாவுக்கரையான விஞ்ஞான சிவன்

28.கூத்தன் வெண்காடனான உருத்திரசிவன்

29.ஐந்நூற்றுவன் திருவாய்மூரனான அகோரசிவன்

30.திருமலைக் கூத்தனான வாம சிவன்

31.ஐந்நூற்றுவன் எடுத்த பாதமான தர்ம சிவன்

32.அரையன் தில்லைக் கரசான பூர்வ சிவன்

33.காளி சம்பந்தனான தர்ம சிவன்

34.காபாலிக வாலியான ஞான சிவன்

35.வெண்காடன் நமசிவாயமான உருத்திர சிவன்

36.சிவன் அனந்தனான யோக சிவன்

37.சிவக்கொழுந்து சம்பந்தனான அகோர சிவன்

38.இராமன் கணவதியான ஞான சிவன்

39.பிச்சன் வெண்காடனான அகோர சிவன்

40.மறைக்காடன் நம்பி ஆருரனான ஞான சிவன்

41.சோமன் சம்பந்தனான ஞான சிவன்

42.சத்தி திருநாவுக்கரையனான ஈசான சிவன்

43.பொற்சுவரன் நம்பி ஆரூரனான தர்ம சிவன்

44.ஆச்சன் திருநாவுக்கரையனான நேத்திர சிவன்

45.ஐயாறன் பெண் ஓர் பாகனான ஹிருதய சிவன்

46.ராஜாதித்தன் அம்பலத்தாடியான சிகா சிவன்

47.செல்வன் கணபதி தெம்பனான தர்ம சிவன்

48.கூத்தன் தில்லைக் கூத்தனான ஞான சிவன்

உடுக்கை வாசித்தவனின் பெயர்

துவைத கோம புரத்து தத்ய கிரமவித்தன் மகன் சூரிய தேவக கிரமவித்தன் ஆன ஆலாலவிடங்க உடுக்கை விஜ்ஜாத்திரனான சோமசிவன் கொட்டி மத்தளம் வாசித்தவனின் பெயர்.

குணப்புகழ் மருதனான சிகா சிவன்

இக்கல்வெட்டில் இருக்கும் பெயர்களுள் முதலில் இருப்பன இயற்பெயர்களாகும்.பின் சிலருக்கு இருப்பன பட்டப்பெயர்கள். இறுதியில் இருப்பன சிவ தீட்சை பெற்ற பெயர்கள்(தீட்சா நாமம்)

**முதல் இராசேந்திர சோழன் கல்வெட்டுகள்**

முதல் இராசராசனின் மகன் முதல் இராசராச சோழன் ஆவான். இவன் தாய் வானவன் மாதேவி. இவன் பிறந்தது மார்கழி மாதம் திருவாதிரை யிலாகும்.

இவனுக்குப் பண்டித சோழன், முடிகொண்டசோழன், விக்கிரமசோழன், கங்கைகொண்ட சோழன் என்ற சிறப்புப்பெயர்கள் உண்டு. தஞ்சாவூரை அடுத்துக் கங்கைகொண்ட சோழபுரத்தைத் தலைநகராக உருவாக்கியவன் இவன். இவன் சேரன் செங்குட்டுவன் போல் வடநாடு வரை படையெடுத்துச் சென்ற சிறப்பிற்கு உரியவன். கங்கைகொண்ட சோழபுரத்திற்கு மேற்கே சோழகங்கம் என்ற ஏரியை வெட்டுவித்தான்.தன் தலைநகரான கங்கை கொண்டசோழபுரத்தில் கங்கை கொண்ட சோழீச்சுரம் என்ற பெரியதொரு கோயிலை எடுப்பித்தவன். தஞ்சை மாவட்டத்தில் ஓடும் முடிகொண்ட சோழப் பேராற்றை வெட்டுவித்தான். பிராமணர்களில் ஒரு பிரிவினராகிய எண்ணாயிரவரைச் சோழநாட்டில் குடியேற்றினான். இவனுக்கு வானவன் மாதேவியார், முக்கோக்கிழானடிகள், பஞ்சவன் மாதேவியார், வீரமாதேவியார் என்னும் மனைவியரும், முதலாம் இராசாதி ராசன், இரண்டாம் இராசேந்திரன், வீர இராசேந்திரன் என்ற புதல்வர்களும் உண்டு. அருமொழி நங்கையார் அல்லது பிரானார்,அம்மங்கைதேவியார் என்னும் பெண்களும் இருந்தனர். இவனுக்குக் கி.பி.1010 இல் இளவரசு பட்டம் கட்டப்பெற்றதால் அதிலிருந்து இவனது ஆட்சியாண்டைக் கணக்கிட வேண்டும். இவனது ஆட்சியாண்டு கி.பி.1012 முதல் கி.பி.1044 வரையாகும்.

இவன் கல்வெட்டுகளுள் சில இவனைப் பூர்வதேசமும்கங்கையும் கடாரமுங் கொண்ட கோப்பரகேசரி வர்மன் என்று குறிப்பிடுகின்றன. இவனது மெய்க்கீர்த்தி "திருமன்னி வளர இருநில மடந்தையும்" எனத் தொடங்குகிறது.

**கல்வெட்டு வழியாக அறியலாகும் செய்திகள்**

முதலாம் இராசராசனின் தமக்கையாரும் சுந்தரசோழனின் மகளுமான ஆழ்வார் பராந்தகன் குந்தவையார் என்னும் குந்தவை நாச்சியார் தஞ்சை இராசராசேச்சரத்தில் தக்ஷிணமேரு விடங்கரின் பிராட்டியார் உமா பரமேஸ்வரியார், தஞ்சை விடங்கரின் பிராட்டியார் உமா பரமேஸ்வரியார் இவர்களின் திருமேனிகளையும்,தன் தந்தையாராகிய இரண்டாம் பராந்தகன், தாயார் வானவன்மாதேவி இவர்களின் பிரதிமங்களையும் எழுந்தருளுவித்து அவர்களுக்கு மிகுதியானதிருவாபரணங்களையும் கொடுத்துள்ளனர். அவைகளோடு அவர்களுக்குத் திருவமுது, திருப்பள்ளித் தாமம், திருவிளக்கண்ணெய் இவைகளுக்கும் ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூரில் இருந்த சுந்தரசோழ விண்ணகர ஆதுல சாலைக்கு வைத்திய போகமாக, இவ்வம்மையார், நித்த விநோத வளநாட்டு நல்லூர் நாட்டுப் பிரமதேயம் இராசகேசரித் சதுர்வேதி மங்கலத்தில் ஒன்பது மா நிலத்தையும் ஒன்றேகால் மனையையும் வாங்கியளித்துள்ளனர். இராசகேசரி சதுர்வேதி மங்கலத்து, திருச்சேலூர் மகாதேவர்க்குத் திருவுண்ணாழிகையில் நின்றெரிய நுந்தாவிளக்கு வைத்துள்ளனர். முதலாம் இராசேந்திர சோழனுடைய ஏழாம் ஆண்டுக் கல்வெட்டில் இவ்வம்மையார் குறிக்கப்படுகின்றர். அதற்குப் பின்னர் எவ்வளவு காலம் இவ்வம்மையார் வாழ்ந்தனர் என்று அறிய இயலவில்லை.இவர் "இராஜராஜதேவர் திருத்தமக்கையார்" என்று கல்வெட்டில் திரு என்ற அடைமொழி கொடுத்தே குறிக்கப்பெற்றுள்ளார்.

**கல்வெட்டு உணர்த்தும் செய்தி**

முதலாம் குந்தவையார் தாம் எழுந்தருளுவித்த தட்சிண மேரு விடங்கர் பிராட்டியார் உமாபரமேஸ்வரிக்குக் கொடுத்த அணிகலன்கள்:

திரு மகுடம் ஒன்று - நானூற்று ஏழு கழஞ்சு எட்டு மஞ்சாடி நிறையும்,ஐயாயிரம் காசு விலையுடையது.

வாளி இருண்டு - ஒவ்வொன்றும் இரு கழஞ்சு ஒன்பது மஞ்சாடியே ஏழு மா நிறையும் பதினைந்து காசு விலையும் உடையது(வாளி-காதணி)

உழுந்து இரண்டு - ஒவ்வொன்றும் இரு கழஞ்சரை மஞ்சாடியே ஏழு மா நிறையும்,பதினைந்து காசு விலையும் உடையது.

திருமாலை - ஒன்று நூற்று முக்கழஞ்சரையே மஞ்சாடி நிறையுப் விலை ஆயிரம் காசும் உடையது.

ஸ்ரீ வாகு வலயம் இரண்டு -ஒன்று நிறை நூற்று நாற்கழஞ்சரையே நாலு மஞ்சாடியும், விலை காசு ஆயிரதிருநூற்றைம்பதும் உடையது. மற்றொன்று நிறை நூற்று நாற்கழஞ்சரையே மூன்று மஞ்சாடியும் ஏழு மாவும் உடையது.விலை காசு ஆயிரத்து இருநூற்றைம்பது.

ஸ்ரீ சந்தம் ஒன்று - நிறை நூற்று எழுபத்து நாற்கழஞ்சே கால்.விலை காசு ஆயிரத்தைந்நூறு.

திருக்கைப் பொட்டுகள் இரண்டு - ஒன்று நிறை இருபத்தாறு கழஞ்சே முக்காலே நாலு மஞ்சாடியும் எட்டு மாவும். விலை காசு எண்பது.

மற்றொன்று - நிறை இருபத்தாறு கழஞ்சரையே மூன்று மஞ்சாடியும் மூன்று மாவும், விலை காசு எண்பது.

சூடகம் இரண்டு - ஒன்று, எண்பத்தைங் கழஞ்சரையே முக்காலே மஞ்சாடியும் குன்றியும் நிறையுடையது. விலை காசு எண்ணூறு. மற்றொன்று நிறை தொண்ணூற்றுக் கழஞ்சே முக்காலே மஞ்சாடிக்கு விலை காசு எண்ணூறு. (சூடகம் - முன்கை வளையல்)

**முதல் இராசேந்திரன் தஞ்சைக் கல்வெட்டு**

தஞ்சாவூர் பெரிய கோயிலில் மேற்கு ஆவரணத்து ஒரு மூலையில் உள்ள கல்வெட்டு, தமிழும் கிருந்தமும் கொண்டு விளங்குகிறது. இது இராசேந்திரனின் காலமான கி.பி.1015 இல் வெட்டப்பட்டதாகும்.

**கல்வெட்டில் குறிக்கப்படும் செய்தி**

பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான், தஞ்சை இராசராசேச்சரத்தில் எழுந்தருளுவித்த நம்பி ஆரூரனார்க்கும், திருஞானசம்பந்த அடிகளுக்கும், திருநாவுக்கரைய தேவர்க்கும், முதலாம் இராசேந்திர சோழ தேவரின் மூன்றாம் ஆட்சியாண்டில் நாற்பத்தொன்றரை பலம் எடையுள்ள தராநிலை விளக்கு ஒன்றையும், முதலாம் இராச ராச சோழ தேவரின் பிரதிமத்திற்கு நூற்றிருபது பலம் எடையுள்ள தராநிலை விளக்கு ஒன்றையும், நாற்பலம் நிறையுள்ள வெண்கல மடல் ஒன்றையும் கொடுத்துள்ளான்.

**அரிய செய்தி**

நாற்பதொன்றரை பலம், நூற்றிருபதின் பலம் என இக்கல்வெட்டில் வந்துள்ள நிறுத்தலளவைப் பகுதியால் பழங்காலத்தில் பலம் என்னும் எடையே உயர்ந்த எடையாகக் கருதப்பட்டு வந்தமை தெரியவருகின்றது.

**கல்வெட்டின் மூலப்பகுதி**

1.ஸ்வஸ்தி ஸ்ரீ உடையார் ஸ்ரீ ராஜா ராஜீஸ்வரம்

2.உடையார்க்கு ஸ்ரீ காரியஞ் செ(ய்கி)ன்ற பெ(ா)

3.ய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூர்ய(னா)

4.ன தென்னவன் மூவேந்த வெளா(ன்)

5.தான் எழுந்தருளுவித்த நம்பியாரூர

6.நார்க்கும் திருஞான சம்பந்தடிகளுக்கும் திரு

7.நாவுக்கரைய தேவர்க்கும் உடையா(ர்) ஸ்ரீ(ரா)

8.ஜேந்திர சோழ தேவர்க்கு (யா)ண்டு மூன்றா(வ)து வ(ரை)

9.குடுத்த தரா நிலை விளக்கு ஒன்று இரு(ப்பு) நாராசம் உட்பட நி-

10.றை நாற்பத்தொரு பலவரை (க)

இவபெ(னதா)ம் எழுந்தருளுவி-

11.த்த பெரிய பெருமாளுக்குக் குடுத்த தரா(நிலை) விளக்கு ஒன்று

12.இருப்பு நாராசம் உட்பட நிறை நூற்றிரு(பதின்) ப(ல)ம் (உ) வெண்க -

13.லமடல் ஒன்று நிறை நாற்பலம்.

**இராசேந்திர சோழனின் கல்வெட்டு(4)**

தஞ்சாவூர் இராச ராசேச்சரத்துக் கோயிலின் கருப்பக்கிருகத்தின் வட புறத்தைச்சூழ்ந்துள்ள சுவரில் அடிப்பாகத்தில் உள்ள கல்வெட்டு இராசேந்திரனின் மூன்றாம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்ட கல்வெட்டு ஒன்று உள்ளது. தமிழும் கிரந்தமும் என்ற அமைப்பில் உள்ள கல்வெட்டில்தஞ்சைக் கோயிலுக்கு வழங்கப்பட்ட திருமேனிகள்,அணிகலன்கள் பற்றிய குறிப்புகளைத் தருகின்றது.

**கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ள செய்தி**

பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான் முதலாம் இராசேந்திர சோழவேந்தரின் மூன்றாவது ஆண்டிற்கு முன், தஞ்சை இராச இராசேச்சரத்தில் க்ஷேத்திர பாலதேவர், ஆடுகின்ற ஸ்ரீ பைரவமூர்த்தி இவர்கள் திருமேனிகளையும், சிறுத்தொண்ட தேவர், திருவெண்காட்டு நங்கை, சீராள தேவர் இவர்களின் பிரதிமங்களையும், பத்மங்களோடு கூடின பீடங்களுடன் எழுந்தருளுவித்து அவர்களுக்கு அணிகலன்களையும் கொடுத்துள்ளான்.

**கொடுத்துள்ள அணிகலன்களின் வகைகள்**

க்ஷேத்திரபால தேவர்க்குத் திரள்மணிவடம்;சுருக்கின வீர பட்டம்;திருக்குதம்பைத் தகடுகள்; பைரவர்க்குத் திரள் மணி முத்து வடங்கள் இரண்டு; சிறுத்தொண்ட நம்பிக்குத் திரள் மணி வடம்; உருத்திராட்சக் காறை; திருவெண்காட்டு நங்கைக்குப் பட்டைக்காறையில் கோத்த தாலி; சீராள தேவர்க்குச் சுருக்கின வீர பட்டம்; திருக்குதம்பைத் தகடுகள், பட்டைக்காறை,சூலம் இவைகளைக் கொடுத்துள்ளான்.

**முதலாம் இராசேந்திர சோழன் கல்வெட்டு(4)**

கல்வெட்டு அமைவிடம்:

தஞ்சை பெரிய கோயிலில் கருப்பக்கிருகத்தைச் சூழ்ந்துள்ள மேற்குப் புறத்திலுள்ள இரு தூண்களில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டு தமிழ், கிரந்த

எழுத்துகளால் அமைந்துள்ளது. முதலாம் இராசேந்திரனின் மூன்றும் ஆட்சியாண்டில் வெட்டப்பட்ட மூவேந்த வேளான் 'தத்தா நமரே காண்'மலாடுடையாருக்கு எடுக்கப்பெற்ற பீடம், அணிகலன் பற்றிய குறிப்புகளைத் தரும் கல்வெட்டு இது.

**கல்வெட்டுச் செய்தி**

பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான்,முதலாம் இராசேந்தி சோழனின் முன்றாம் ஆட்சியாண்டில் தஞ்சை இராசராசேச்சரத்தில் தத்தா நமரே காண் என்ற மலாடுடையார் பிரதிமத்தைப் பீடம், பீரபைகளுடன் எழுந்தருளுவித்து, அவர்க்கு உருத்திராட்ச வடம் ஒன்றை அளித்துள்ளான். (பிரபை-திருவாட்சி)

மிலாடுடையார்- இத்தொடர் மலாடுடையார் என்றிருக்க வேண்டும். மலையமான் நாட்டாருக்கு அரசராதல் பற்றி மலாடுடையார் எனக் கூறப்பட்டுள்ளார். இவர் மெய்ப்பொருள் நாயனார் எனக்குறிக்கப்பெறுவர். முத்தநாதன் என்னும் பகையரசன் மெய்ப்பொருள் நாயனாரிடத்துப் பலமுறை தோற்று நிறைவில் பொய்வேடம் புனைந்து மெய்ப்பொருளாரைச் சிவ வேடம் தாங்கி,நினைத்த காரியம் முடித்தான்.

**கல்வட்டு மூலம்**

1.ஸ்வஸ்தி ஸ்ரீ கொப் பரகேசரி வன்ம ரான ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர்க்கு

5.யாண்டு மூன்றாவது உடையார் ஸ்ரீ ராஜ ராஜீஸ்வரம் உடையார்க்கு ஸ்ரீ காரியஞ் செய்கின்ற பொய்

10.கைநாடு கிழவன் ஆதித்தன் சூரியன் னான

தென்னவந் முவெந்தவேளாற் யாண்டு முன்றாவது வரை

15.செய்வித்த செப்பு பிரதிமங்கள் உடையார் கொயிலில் முழத்தால் அளந்தும் ரத்நங்கள் தக்ஷி

20.ண மேரு விடங்க நென்னுங் கல்லால் நிறை எடுத்து கல்லில் வெட்டின க பாதாதி கேஸாந்தம் இருபதிற்று விரல் உசரத்து இரண்டு கைய்யுடையராகக் கனமா கச் செய்த தத்தா நமரெ காண் என்றமி லாடுடையார் ஒருவர்(உ) இவர் நின்ற பதிற்று

35.விரல் நீளத்து எண் விரல் அகலத்து எண் விரலுசரத்து பத்மத் தொடுங் கூடச் செய்த பீடம் ஒன்று (ங) இவனெ இவர்க்குக் குடுத்தன.(ச) ருத்திரா

40.க்ஷம் ஒன்றிற் கட்டின பொன் எழுமஞ்சாடி உட்பட ருத்ராக்ஷம் ஒன்று நிறை அரைக் கழஞ்செ நா லு மஞ்சாடியுங் குன்றிற்கு விலை காசு ஒன்று.(ரு)

**இராசேந்திர சோழனின் கல்வெட்டு (5)**

இராசேந்திர சோழனின் அயல்நாட்டுப்படையெடுப்பு பற்றிய அரிய செய்திகளைத் தாங்கியுள்ள கல்வெட்டு அவனின் 19 ஆம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டு, தஞ்சாவூர் இராசகோபுரத்துக் கர்ப்பகிருகத்தில் தென்புறத்திலுள்ள முதற்படை, இரண்டாம் படைகளில் உள்ளது. தமிழும், கிரந்தமும் கலந்து அமைந்த கல்வெட்டாக இது உள்ளது.

**கல்வெட்டால் அறியப்படும் போர்ச்செயல்கள்**

கடாரத்தரசனாகிய சங்கிராம விசயோத்துங்கனைத் தோற்கடித்தான்; அவனுடைய செல்வத்தையும் அவன் தலைநகரின் வாசலில் கட்டியிருந்த விச்சாதிரத்

தோரணத்தையும் மணிகள் பதிப்பிக்கப்பட்ட இரட்டைக் கதவுகளையும் தன் வசமாக்கிக்கொண்டான்; சுமித்ராத் தீவிலுள்ள விசயம், பண்ணை, மலையூர் என்னும் ஊர்களை வென்றான். பின் மலேயாத் தீபகற்பத்திலுள்ள மாயிருடிங்கம், இலங்கா சோகம்,மாப ப்பாளம், இலிம்பிங்கம், வளைப்பந்தூறு, தக்கோலம், மதமாலிங்கம் என்னும் ஊர்களை வென்றான்.பிறகும் சுமித்ராவிலுள்ள இலாமுரிதேசத்தைக் கைக்கொண்டான்; நக்கவாரத் தீவுகளை வென்றான். மலேயாத் தீபகற்பத்தின் மேலைக் கரையிலுள்ள கடாரத்தை வென்றான்.

**உரைநடைப்பகுதியால் அறியப்படும் செய்திகள்**

இராசேந்திர சோழன் தஞ்சை இராச ராசேச்சரத்தில் இருந்த தன் குருவாகிய சர்வசிவ பண்டிதர்க்கும், அவரது சிஷ்யர்களாய் ஆர்யதேசம், மத்யதேசம், கௌடதேசம் ஆகிய இவ்விடங்களில் இருந்தவர்களுக்கும் சந்திர சூரியர் உள்ளவரை ஆண்டுதோறும் நிறைந்த அளவாக ஆடவல்லான் என்னும் மரக்காலால் இரண்டாயிரம் கல நெல்லை ஆசாரிய போகமாகக் கொடுக்க ஏற்பாடு செய்திருந்தான்.

**கல்வெட்டு மூலம்**

1.ஸ்வஸ்திஸ்ரீ திருமன்னி வளர இரு நில மடந்தை(யு)ம் பொற்சயப் பாவையும் சிர்த்தநி ச்(செ)சல்வியும் (த)ன் பெருந்தெவியராகி இன்புற நெடுதியல் ஊழியுள் இடைதுறை நாடும் துடர்வன வெலிப்படர்வன வாசியும் கள்ளி சூழ் மதிள்-

2.கொள்ளிப் பாக்கையும் நண்ணற்கரு (மு)ரண் மண்ணைக் கடக்கமும் பொருகடலீழத் தரைசர்த மூடியும் ஆ(ங்)கவர் தெவியர் ஓங்கெழில் முடியும் முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த சுந்தரமுடியும் இந்திர(னா)ரமும் தெண்டிரை ஈழமண்ட-

3.லமுழுவதும் எறிபடைக் கொளன் முறை(ம) யிற் சூடுங்குலதனமாகிய பலர் புகழ் முடியும்(செ)சங்கதிர் மாலையும் சங்கதிர் வெலைத்தொல் பெருங்காவற் பல பழந்திவும் செருவிற்சினவி இருபத்தொரு காலரசு களைகட்ட பரசுராமன் -

4.மெவருஞ் சாந்திமத் தீவர(ண்) கருதி இருத்(தியசெ)ம் பொற்றிருத்தகு முடியும் ப(ய)ங்கொடு பழி மிக மு(யங்கி)யில் முதுகிட்டொளித்த சயசிங்கன் அளப்பரும் புகழொடும் பி(டி)யல் இரட்டபாடி எழரை இலக்கமும் நவநெதிக்குலப் பெருமலைக -

5.ளும் விக்கிரம வீரர் சக்கரக்கொட்டமும் முதிர்பட வல்லை மதுர மண்டலமும் காமிடை வளநாம்மணை(க்)கொணையும் வெஞ்சின வீரர் பஞ்சப் பள்ளியும் பாசடைப் பழ(ன) மாசுணி தேசமும் அயர்வில் வண்கீர்த்தி ஆதிநகரவையில்

6.சந்திரன் றொல்குலத் திந்திரதனை விளை அமர்களத்துக் கிளையொடும் பிடித்துப் பல(தன)த்தொடு நிறைகு(ல) தனக் குவையும் கிட்டருஞ் செறிமி(ளை) ஒட்ட விஷையமும் பூசுரர் செர்நற் கோசலை நாடும் தந்மபால (னை) வெம்மு(னை) யழித்து வண்டுறை சொலைத்த(ண்)ட -

7.புத்தியும் இரணசூரனை முரணுகத் தாக்கி(த்) திக்கணை கீர்த்தி தக்கண(லாடமும் கோவிந்த சத்தன் மாவிழிந் தொட(த்) தங்காத சாரல் வங்காளத் தேசமும் தொடு கழற் சங்கு வொட்ட(ல்) மயிபாலனை வெஞ்சமர் விளாகத் தஞ்சுவித்தரு(ளி) யொண்டிறல் யானையும் செ(ப)ண்டி

**இரண்டாம் அடுக்கு**

8.ர் பண்டாரமும் (நித்தில நெடுங்கடலுடுத்திர)லாடமும் வெறிமலர்த்(தீ)ர்த்தத்தெ (றிபு)னல் கங்கையும் அலைகடல் நடுவுட் பலகலஞ் செலுத்திச் சங்கிராம விசை யொத்துங்க வந்மனாகிய கடாரத்தரசனை வாகயம் பொரு

9.கடல் கும்பக் கரியொடு மகப்படுத் துரிமையில் பிறக்கிய பெருனெதிப் பெருக்கமும் ஆர்த்தவனகனகர் (ெ)பார்த்தொழில் வாசலில் விச்சாதித் தொரணமும் மொய்த்தொளிர் புனைமணிப்புதவமும் கனமணிக் கதவமும் நிறைசீர் விசையமும துறை -

10.நிர்ப் பண்ணையும் வன்மலையூரெயிற் றொன் மலையூரும் ஆழ்கடலகழ்சூழ் மாயிருடிங்கமும் கலங்காவல் (வி)னை இலங்கா சொகமும் காப்புறு நிறைபுனல் மாப்பப் பாளமும் காவலம் புரிசை மெவிலிம் பங்கமும் விளைப் பந்தூ றுடை வளைப்ப -

11.ந்நூ(று)ம் கலைத்தக் கொர்புகழ் தலைத்தக் கொலமும் திதாமால்வினை மதமாலிங்கமும் கலாமுதிர்க் கடுந்திறல் இலாமுரி தேசமும் தெனக்க வார்பொழில் மானக்கவாரமும் தொடுகடல் காவல் கடுமுரட் கடாரமும்(ம)ா-

12.(ப்பொ)ரு தண்டாற்கொண்ட கொப்பாகெஸரி வந்மரான உடையார் ஸ்ரீ ராஜேந்திர சொழதெவர்க்கு யாண்டு யக(19) ஆவது நாள் இருநூற்று நாற்பத்திரண்டினால் உடையார் ஸ்ரீ ராஜேந்திரசொழ தேவர் கங்கைகொண்ட சோழபுர-

13.(த்துக்) கோயிலினுள்ளால் முடிகொண்ட சோழன் திருமாளிகையில் வடபக்கத்து தேவாரத்துச் சுற்றுக் கல்லூரியில் தாநஞ்செய் தருள இருந்து உடையார் ஸ்ரீராஜ ராஜ ஈஸ்வரமுடையார் கோயிலில் ஆசர்ய போகம் நம் உடையார்

14.சர்வ சிவபண்டித (சைய்)வ்வாசார்யாருக்கும் இவ்வுடையார் சிஷ்யரும் பிற சிஷ்யரும் ஆய் ஆர்யதேசத்தும் மத்ய தேசத்துத்தான் ஹௌட தேசத்துத்தான் உள்ளாராய் யோக்யராயிருப்பார்க்கெ ஆட்டாண்டு தொறும் இத்தேவர் கோயிலில் ஆடவல்லா(னெ)-

15.(ன்னு)ம் மரக்காலால் உள்ளூர்ப் பண்டாரத்தே நிறைச் சளவாக இரண்டாயிரக் கலநெல்லு ஆட்டாண்டுதொறும் சந்திராத்தித்தவல் பெறத் திருவாய் மொழிந்தருளத் திருமந்திர ஓலை செம்பியன் விழுப்பரையன் எழுத்தினா-

16.(ல்) த் திருவாய் கேழ்விப்படி கல்லில் வெட்டித்து.இது இவ்வம்சத்துள்ள சைய்வ்வ ஆசாரியர்களே இத்தன்மம் (ர)க்ஷிக்க.

**கல்வெட்டின் அரிய சொற்களுக்கு விளக்கம்**

அலைகடல் நடுவுள் பல கலஞ்செலுத்தி- சோழர்கள் கப்பல் படைகளை வைத்திருந்தனர் என்பதை உறுதிப்படுத்தும் தொடர்.

சங்கிராமம்-போர்

விசயோத்துங்கன்-(விசய+ உத்துங்கன்) வெற்றியில் மிக மேம்பபட்டவன்

கடாரம்- இது மலேசியாத் தீபகற்பத்திலுள்ள மேல் கரையில் உள்ள ஊர்.இதுபொழுது "கெடா" என வழங்கப்படுகின்றது.பட்டினப்பாலையில் "காழகத்து ஆக்கம்" காழகம் எனப்படுகின்றது.பெரிய லெய்டன் செப்பேட்டில் கடாகம் எனப்படுகின்றது.

புதவமும் கதவமும்- இரட்டைக் கதவுகளையும்(புதவக் கதவம் புடைத்தனன் ஓருநாள் என்பது சிலப்பதிகாரம்)

விசையம்-சுமத்திராத் தீவிலுள்ள பாலம்பாங் என்று வழங்கப்பெறும் தேயம்

பண்ணை- சுமத்திராத் தீவில் கீழ்க்கரையில் உள்ள ஊர்

மாயிருடிங்கம்-மலேயாவில் நடுப்பகுதியில் உள்ளது.சீனதேசத்து நூல்களில் இது ஜிலோடிங் எனப்படுகின்றது.இலங்காசோகம்-மலேசியாத் தீபகற்பத்திலுள்ள கெடாவிற்குத் தெற்கில் உள்ள ஊர்.

பப்பாளம்- இது கிரா பூசந்திக்குத் தெற்கே மலேசியாவின் மேற்குப்புறத்தே உள்ளது.

தக்கோலம்-இது கிரா பூசந்திக்குத் தெற்கே மலேசியாத் தீபாகற்பத்திற்கு மேற்கே உள்ளது.கிரேக்க ஆசிரியர் தாலமி இதனை தகோலா என்று குறிப்பிடுவார்.

மதமாலிங்கம்- மலேசியாத் தீபகற்பத்தின் கீழ்க்கரையில் குவாண்டன் ந்தியின் முகத்துவாரத்தில் உள்ள தெமிலிங் என்னும் இடமாகும்.சீன நூல்களில் இது தன்மாலிங் எனப்படுகின்றது.

இலமுரிதேசம்-சுமத்திரா தீவில் வடபகுதியில் உள்ளது.மார்க்கபோலா இதை லன்பரி என்பர் சீனர்கள் லான்வூலி என்பர்

நக்கவாரம்-நிக்கோபார்த் தீவுகள்.மணிமேகலை குறிப்பிடும் நாகநாடு இதுவாகும்.

மாதிரி வினாக்கள்

1.தந்திவர்மன் குறிப்பு வரைக

2.முதல்பராந்தகனின் சிறப்பை விளக்குக

3.பராந்தகனின் ஆனைமலை கல்வெட்டில் இடம்பெற்றுள்ள செய்திகள் யாவை?

4.முதல் இராசராசனின் சிறப்புகளை எழுதுக.

5.இராசராசனின் உக்கல் கல்வெட்டு பற்றி விளக்குக.

6.இராசராசனின் வெற்றிச்சிறப்பை விளக்குக.

7.இராசராசன் திருப்பதியம் விண்ணப்பம் செய்ய செய்த ஏற்பாட்டினை எழுதுக.

8.முதல் இராசேந்திர சோழனின் வெற்றிச்சிறப்பை எழுதுக

9.இராசேந்திர சோழன் காலத்தில் எடுக்கப்பெற்ற திருமேனிகள் பற்றி விளக்குக.

10.'தத்தா நமரே காண் என்ற மலாடுடையார்'-குறிப்பு வரைக

# குறிப்புகள்

அலகு 3:

**முதல் இராசாதிராசன் கல்வெட்டு**

கங்கைகொண்டசோழன் என்று சிறப்பிக்கப்பெறும் முதலாம் இராசேந்திரசோழனின் மகன் முதல் இராசாதிராசன் ஆவான். இவன் பிறந்தது பூச நட்சத்திரம் ஆகும். இவனுக்கு விசய

ராசேந்திரன், ஆகவமல்லகுல காலன், கல்யாணபுரங்கொண்ட சோழன், வீர ராசேந்திர வர்மன், சயங்கொண்டசோழன் என்னும் சிறப்புப் பெயர்களும் உண்டு. இவனுக்கு கி.பி.1018 இல் இளவரசுப்பட்டம் கட்டப்பட்டது. இவன் கி.பி.1044 முதல் கி.பி.1054 வரை ஆட்சிபுரிந்தான். இவன் இராசகேசரி என்னும் பட்டம் உடையவன். இவனுக்கு மூன்று மெய்க்கீர்த்திகள் உண்டு.

அவை,

"திங்களேர் பெறவளர்","திங்களேர் தரு",

"திருக்கொடியொடு தியாகக்கொடி"

எனத் தொடங்குகின்றன. இவன் கொப்பத்துப் போரில் உயிர் துறந்தான்.இவன் "கல்யாணபுரமும் கொல்லாபுரமும் ஏறிந்து யானைமேற் றுஞ்சின உடையார் விசய ராசேந்திர தேவன்" எனக் கல்வெட்டுகளில் குறிக்கப்பெற்றுள்ளான்.யானை மேலிருந்து போர் செய்கையில் பகைவனுடைய அம்பு பட்டு உயிர் நீத்த காரணம் பற்றி "யானை மேற்றுஞ்சின தேவன்" என இம்மன் அழைக்கப்படுகின்றான்.

**கல்வெட்டு அமைவிடம்**

காஞ்சிபுரம் மாவட்டம் மணிமங்கலம் என்ற ஊரிலுள்ள இராசகோபாலசாமி கோயிலின் வடக்கு மேற்குச்சுவரில் முதலாம் இராசாதி ராசன் காலத்திய கல்வெட்டு,தமிழும் கிரந்தமும் கலந்து எழுதப்பெற்று உள்ளது.முதலாம் இராசாதி ராசனின் 29 ஆம் ஆட்சியாண்டில் கிப.பி.1047 இல் இக்கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது.

**கல்வெட்டால் அறியப்படும் செய்தி**

செங்காட்டுக் கோட்டத்து மாங்கணுர் நாட்டு,மணிமங்கலமான இராச சூளாமணிச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார்,அவ்வூர்க் காமகோடி விண்ணகர ஆழ்வார் பண்டாரத்திலிருந்து நூறு காசை வட்டிக்குக் கொண்டு, அக்காசு நூற்றாலும் வந்த வட்டிக்கு இறைகரத் தூட்டாக இரண்டாயிரத்து இருநூறு குழி நிலத்தைக் கொடுத்துள்ளன்னர்.

**மெய்க்கீர்த்திப் பகுதியால் அறியப்படும் செய்திகள்**

உறவிர்களுக்கு மகுடஞ்சூட்டி நாடு கொடுத்தது. பாண்டியர்,திருவாங்கூர் அரசர்,மேலைச்சாளுக்கியர்,இலங்கை அரசராகிய விக்கிரமபாகு இவர்களோடு போர் நிகழ்த்திய விவரம் தெரியவருகின்றது.

**இராசாதிராசனின் ஆட்சி சிறப்பு**

வில்லவர், மீனவர், வேள்குலர், சாளுக்கியர், வல்லவர், கௌசலர், வங்கணர், கொங்கணர், சிந்துரர், ஐய்யணர், சிங்களர், டங்களர், ஆந்திரர் முதலான அரசர்கள் இட்ட திறை (கப்பம்) களுடன் தன் குடிமக்களிடம் இருந்து ஆறில் ஒரு கூறு வரி

வாங்கியும் நான்மறையவர்களுக்கு விரும்பியவண்ணம் கொடுத்தும் மனுநெறி நின்று அசுவமேதஞ் செய்து ஆண்டான்.

**இரண்டாம் இராஜேந்திர தேவன் கல்வெட்டு**

கங்கைகொண்டசோழன் என்று சிறப்பிக்கபெறும் முதலாம் இராசேந்திரசோழனின் மகன் இரண்டாம் மகன் இவன். இவன் கி.பி.1068 முடிய தன் ஆட்சியை செலுத்தியுள்ளான். இவனுக்குக் கி.பி.1051 இல் முடிசூட்டப்பட்டது. இவன் பரகேசரி என்ற பட்டமுடையவன். இவனுக்கு மூன்று மெய்க்கீர்த்திகள் உள்ளன. அவை "இரட்டபாடி ஏழரை இலக்கமுங் கொண்டு", திருமாது புவியெனும் பெருமாதர்", திருமகள் மருவிய செங்கோல் வேந்தன்றன் முன்னோன் சேனை" எனத் தொடங்குகின்றன. இவனுக்குக் கிழானடிகள் என்ற மனைவியும் ஆறு புதல்வர்களும், மதுராந்தகி என்னும் மகளும் இருந்தனர்.இந்த மதுராந்தகிசே இரண்டாம் இராசேந்திரனுக்கு(முதல் குலோத்துங்கனுக்கு)மணம் செய்விக்கப்பெற்றவள்.

**கல்வெட்டு அமைவிடம்**

காஞ்சிபுரம் மாவட்டம் மணிமங்கலம் என்ற ஊரிலுள்ள இராசகோபாலப் பெருமாள் கோயிலின் உள் பிரகாரத்தில் கீழைச்சுவரின் வெளிப்பக்கத்தில் உள்ளது.

**கல்வெட்டால் அறியப்படும் செய்தி**

மாகணூர் நாட்டு இராச சூளாமணிச் சதுர்ப்பேதி மங்கலத்து மகா சபையார் சேனாபதிகள் சயங்கொண்டு சோழப் பிரமாதிராயரின் தாயார் காமக்கவ்வையள் பக்கம்,பொருள்பெற்றுத் தங்கள் ஊரின் தென்பாலுள்ள சிற்றூராகியமண்பாக்கத்தில் குறிப்பிட்ட நான்கு எல்லைக்கு உட்பட்ட நிலத்தை வாங்கிக் காமகோடி விண்ணகர ஆழ்வார்க்குக் கொடுத்துள்ளனர்.

இக்கல் வெட்டின் சிறப்பு ஆக இநாற்பாற் கெல்லைக்கும் நடுவுட்பட்ட நிலமும் ஓடையுமுடைப்பும் மேல்நோக்கின மரமும் கீணோக்கிய கிணறும் என்னும் இந்நாற்பாற் கெல்லைக்கும் நடுவுட்பட்டதெல்லாம்' என்னும் கல்வெட்டுப் பகுதியால் நிலத்தை விற்பனை செய்து கொடுத்தவர் சில பகல் கழித்து நிலத்தை விற்றேனே ஒழிய அதிலுள்ள மரம் கறிகளை விற்கவில்லை என்று வாதாடினால் சிக்கல் எழும். இத்தகு பேச்சுக்கே இடமில்லாதபடி கல்லில் இடம்பெற்றுள்ள வாசகங்கள் உள்ளன.

**வீரராசேந்திரன் கல்வெட்டு**

முதல் இரேந்திரசோழனின் மகன் வீரராசேந்திரன் ஆவான். இவன் இராசகேசரி என்னும் பட்டம் உடையவன். கி.பி.ஆ063 முதல் கி.பி.1070 வரை ஆட்சிபுரிந்தவன். இவன் பிறந்தது ஆவணி மாதத்து ஆயில்ய நாள் ஆகும்.இவனுக்கு மேதினி வல்லபன், பாண்டியகுலாந்தகன், வீரசோழன், கரிகாலன் என்னும் சிறப்புப் பெயர்கள் உண்டு.

இவன் தில்லைச் சிற்றம்பலத்துப் பெருமானுக்குக் கெம்புகள் பதிக்கப்பெற்றதும், திரைலோக்கிய சாரத் என்னும் பெயருடையதுமாகிய முடியணி ஒன்றை அளித்துள்ளான். இவன் சோழநாடு, துண்டிரநாடு, பாண்டிநாடு, கங்கவாடி நாடு, இவைகளில் உள்ள வேதங்கள் வல்ல பிராமணர்களுக்கு நிலங்கள் வழங்கியுள்ளான்.

பாண்டிநாட்டிலுள்ள மிழலைக்கூற்றத்திலுள்ள பொன்பற்றி என்னும் ஊரில் தலைவராக விளங்கிய புத்தமித்திரன் என்பான் இவ்வரசனின் வேண்டுகோளின்படி வீரசோழியம்

என்னும் இலக்கண நூலை எழுதியுள்ளார். வீர ராசேந்திரனின் மனைவி அருமொழி நங்கை. இவன் கி.பி.1070 இல் விண்ணுலகெய்தினான்.

**கல்வெட்டால் அறியலாகும் செய்திகள்**

சயங்கொண்ட சோழமண்டலத்துச் செங்காட்டுக் கோட்டத்து மாகணூர் நாட்டு மணிமங்கலமான ராஜ சூளாமணிச் சதுர்வேதி மங்கலத்து மகாசபையார், இவ்வூரில் வசித்து வந்த சேனாபதி ஜயங்கொண்ட சோழப் பிர்மாதிராஜா தகப்பனார் மஞ்சிப் பயனாரான ஜயசிங்க குலாந்தகப் பிர்மராயரிடம் பொருள் கொண்டு 4450 குழி நிலத்தை விற்றுக் கொடுக்க அதை மஞ்சிப்பயனாரும் அனுபவித்து வந்தனர். அந்நிலத்தை முதலாம் வீர ராசேந்திர சோழத் தேவரின் ஐந்தாம் ஆட்சியாண்டில் அந்த மஞ்சிப்பயனார் மகனார் ஜயங்கொண்ட சோழப் பிர்மாதிராஜர், ஸ்ரீ மத் துவாரபதியான காமக்கோடி விண்ணகர ஆழ்வார்க்கு அர்ச்சனா போகமாகச் சபையாரிடம் கொடுத்துள்ளார். அச்சபையாரும் அந் நிலத்தை அந்தக் காமக்கோடி விண்ணகர ஆழ்வார்க்கு வரி நீக்கிக் கொடுத்துள்ளனர்.

**வீர ராசேந்திரன் கல்வெட்டில் குறிப்பிடப்படும் போர்கள்**

வீர ராசேந்திரன் இரட்டபாடி நாட்டின் மீது படையெடுத்துச்சென்றான். அதுபொழுது தன்னை எதிர்கொண்ட ஆகமவல்லனது இரண்டாம் மகனாகிய விக்கலனையும் அவனது சேனாபதியையும் கங்கபாடிப் போர்க்களத்திலிருந்து துங்கபத்திரை ந்திக்கரைக்குக் துரத்திவிட்டான்.

மீளவும் ஆகவமல்லன் ஒரு பெரும்படையை அனுப்பினான்.வீர ராசேந்திரன் அச்சேனையை அழித்ததோடு அவனது சேனாதிபதியாகிய சாமுண்டராயன் தலையை அறுத்தான்;அவனது மகளாகிய இருகையன்தேவி நாகலை என்பவளை முகத்தோடு மூக்கி வேறாக்கினான்.

மீளவும் ஆகவமல்லன் விக்கலசிங்கன் என்பவர்களுடன் கூடல்சங்கமத்தில் எதிர்த்தான். ஆகவமல்லன் முதலானோர் தோற்றனர். வீர ராசேந்திரன் சாளுக்கியருடையதாரம், குலதனம், சங்கு, தொங்கல், வெண்சாமரை, சூகரக்கொடி, மகரதோரணம், புஷ்பகப்படி, களிறு முதலியவைகளைப் பிடித்துக்கொண்டான்.

இதில் மேலைச்சாளுக்கிய படைத்தலைவர்களில் மல்லியண்ணன்,மஞ்சிப்பையன், பிரமதேவன், அசோகையன், சந்தியவண்ணன், விமய்யன், வங்காரன் என்பவர்களும் கங்கன், நுளம்பன், காடவர்கோன், வைதும்பராயன் என்னும் அரசர்களும் இறந்தனர்.

ஆகவமல்லன் பழியொடு வாழ்வதைவிட சாவது நல்லது என்று கருதி,தானும் தன் புதல்வரும் முதுகிட்டுடைந்த கூடலே போர்க்களமாகக்கொண்டு, தன்னோடு போருக்கு வருமாறும் அவ்வாறு வராது அஞ்சினவர் மன்னர் அல்லர் என்றும், போர்ப்பெரும்பழிப் புரட்டர் ஆவார் என்றும் ஓலை ஒன்றை எழுதி,கங்கா கேத்தன் என்பவனிடம் கொடுத்து வீர ராசேந்திரனிடம் அனுப்பினான்.அதனைப் பெற்ற வீர ராசேந்திரன் சிந்தையும் முகமும்மகிழ்ந்து, ஆகவமல்லன் விரும்பியவண்ணம் சென்று கூடல் சங்கமத்திற்கு அருகில் உள்ள காந்தைஎன்னும் இடத்தி அவன் குறித்த நாளிலும் அதற்கு மேல் ஒரு மாத காலமும் காத்திருந்தான். ஆகவலம்மலனோ குறித்தபடி வரவில்லை. அவன் அச்சமுற்று மேல்கடல் பக்கம் ஒளிந்துகொண்டான்.அதன் பின்னர் வீர ராசேந்திரன் அப்பக்கங்களில் இருந்த தேவநாதன், சித்தி, கேசி என்னும் சாளுக்கியத் தலைவரோடு தனித்தனியாயாகப் போரிட்டு அவர்கள் தோற்று ஓட்படி

செய்தான். பல இடங்களை எரியூட்டினான். துங்கபத்திரைக்கரையில் வெற்றித்தூண் ஒன்றை நிறுவினான்.

**வேங்கிநாட்டுப் போர்**

வேங்கி நாட்டுக்குச் சென்ற வீர ராசேந்திரனைச் சேனைத் தலைவர்களாகிய சனநாதன், இராசமய்யன், திப்பரசன் என்பவர்கள் கிருஷ்ணா நதியின் கரையில் தடுத்தனர். இரு திறத்தாருக்கும் விசவாடாவில்(பெசவாடா) போர் நிகழ்ந்தது. மேலைச்சாளுக்கியருடைய சேனைத் தலைவர்கள் தோற்றோடிப் போய் காடுகளில் ஒளிந்தனர். பின் வீர ராசேந்திரன் கோதாவரியில் தன் யானைகளை நீருண்ணச் செய்து, கலிங்கத்தைக் கடந்து சக்கரக்கோட்டத்திற்கு அப்பால் சென்று வேங்கை நாட்டைத் திரும்பக் கைப்பற்றினான்.

கீழைச்சாளுக்கிய மன்னன் அடைக்கலம் புகுந்தான். கீழைச்சாளுக்கிய மன்னனாகிய விஜையாதித்தன் வீரராசேந்திரனுடைய பூங்கழற்கு அடைக்கலம் புக அருள் செய்தான்.

**வீரராசேந்திரனின் பிற போர்கள்**

வீரராசேந்திரன் பொத்தப்பி மன்னனையும், சேரனையும் வென்றான். சனநாதனுடைய தம்பியின் தலையை வெட்டினான். சீவல்ல பாண்டியன் மகனாகிய வீரகேசியைத் தோற்கடித்தான்.

**முதல் குலோத்துங்கன் கல்வெட்டு**

குலோத்துங்கன் அதிராசேந்திரன் என்ற சோழ மன்னனுக்குப் பிறகு சோழமண்டலத்தின் ஆட்சியைப் பெற்றவன்.இவன் கி.பி.1070 முதல் கி.பி.1120 வரை ஆட்சி செய்தவன்.

இவன் பிறந்தது பூச நட்சத்திரம் ஆகும்.இவன் இராசகேசரி என்ற பட்டதுடன் ஆண்டவன்.திரிபுவனச் சக்கரவர்த்தி என்ற பட்டம் பூண்ட சோழமன்னர்களுள் இவனே முதல்வன்.

இவனுடைய மெய்க்கீர்த்திகள்

" புகழ்மாது விளங்கச் செயமாது விரும்ப"

" புகழ் சூழ்ந்த புணரி யகழ்சூழ்ந்த புவியில்"

" திருமன்னி விளங்கு இருகுவ டனையதன்"

எனத் தொடங்குகின்றன.

குலோத்துங்கனுக்கு விஷ்ணுவர்த்தனன், பராந்தகன், விக்கிரசோழன், அகளங்கன், அபயன், திருநீற்றுச் சோழன், சுங்கம் தவிர்த்த சோழன் உள்ளிட்ட சிறப்புப் பெயர்கள் உண்டு. இவன் இரண்டாம் இராசேந்திரனின் மகளாகிய மதுராந்தகியை மணந்து கொண்டவன். இவ்வம்மையாரேயன்றி, தியாகவல்லி, ஏழிசை வல்லபி, திரை லோக்கியமாதேவி என்னும் மனைவியரும் இருந்தனர். குலோத்துங்கனின் நான்காம் மகனான விக்கிரசோழனே இவனுக்குப் பிறகு சோழநாட்டின் அரசனாக முடிசூட்டிக்கொள்ளும் பேறு பெற்றவன். குலோத்துங்கனின் அவைக்களப் புலவராக விளங்கியவர் சயங்கொண்டார் ஆவார். குலோத்துங்கனின் கலங்க வெற்றியைப் புகழ்ந்து பாடப்பட்ட நூல் கலிங்கத்துப்பரணி ஆகும்.

**கல்வெட்டு அமைவிடம்**

தஞ்சாவூர் பெரியகோயிலின் கருப்பகிருகத்தின் வடபுறத்தைச் சூழ்ந்துள்ள சுவரின் வடபுறத்தில் முதற்குலோத்துங்கனின் கல்வெட்டு உள்ளது. தமிழ், கிரந்த எழுத்துகளால் கல்வெட்டு அமைந்துள்ளது. குலோத்துங்கனின் பதினைந்தாம் ஆட்சியாண்டில் இக்கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது.

**கல்வெட்டால் அறியப்படும் குலோத்துங்கனின் சிறப்புகள்**

இளவரசாகப் பட்டம் பெற்றதும் திக்கு விசயம் செய்தது;சோழமண்டலத்தின் ஆட்சியைப் பெற்றது; மேலைச்சாளுக்கியர், பாண்டியர் முதலானவர்களோடு போர் புரிந்தது கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆட்சிச்சிறப்பு**

மனுநெறி தழைக்கவும், வறுமை நீங்கவும், செங்கோல் திசைதோறும் செல்லவும்,பூமி எங்கணும் தனது வெண்கொற்றக்குடையின் ஒளி வீசவும், மேரு மலையில் புலிக்கொடி பறக்கவும்,பல தீவுகளில் உள்ள அரசர்கள் கப்பல்களிலிருந்து கொண்டுவரப்பட்ட களிறுகள் அணி அணியாக நிற்கவும் ஆட்சி புரிந்தான்.

**கல்வெட்டால் அறியப்படும் செய்திகள்**

முதற் குலோத்துங்கனின் பதினைந்தாம் ஆட்சியாண்டில் முதலாம் வீர ராசேந்திர சோழத் தேவரது மனைவியார் அருமொழி நங்கையரான(ஸிம்ஹன்) மாதேவியார், தஞ்சை இராச ராசேச்சரமுடையாருக்கு நிவந்தம் அளித்துள்ளானர். (நிவந்த வகை இன்னதென்று புலனாகதாவாறு எழுத்துகள் சிதைந்துள்ளன).

**முதல் குலோத்துங்கன் கல்வெட்டு (2)**

**கல்வெட்டு அமைவிடம்**

திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ள திருவானைக்கா கோயிலின் இரண்டாம் பிரகாரத்தின் கீழ்ச்சுவரில் குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டு உள்ளது. இவனின் 47 அம் ஆட்சியாண்டில் (கி.பி.1117) இக்கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது. முன்பகுதியில் உள்ள கல்வெட்டின் மெய்க்கீர்த்தி பகுதியும் இக்கல்வெட்டின் மெய்க்கீர்த்தி பகுதியும் பெரும்பான்மையும் ஒத்துள்ளன.

**குலோத்துங்கன் தேவியாரும் அவர்கள் பாராட்டப்படும் விதமும்**

1.தியாகவல்லி உலகுடையாள்; 2.ஏழிசை வல்லபி ஏழுலகம் உடையாள்; 3.உலகமுடையாள் என்பவர்கள் இவனது தேவிமார்கள்.

இவர்களுள் தியாகவல்லி உலகுடையாள், சிவனிடத்து உமையெனவும்; ஏழிசை வல்லபி ஏழுலகமுடையாள், உமையுடன் கங்கை வீற்றிருப்பதெனவும்; உலகமுடையாள் திருமாலகத்துப் பிரியாதென்றும் திருமகள் இருப்பது எனவும் போற்றப்படுகின்றனர்.

**கல்வெட்டால் அறியப்படும் செய்தி**

திருவானைக்காவில் திருவெண்ணாவல் கீழ் இனிது எழந்தருளிய திரிபுவனபதிக்குப் பழைய அடியாராகிய சண்டேஸ்வரர் உள்ளிட்ட கன்மிகள் வளம்பகுடி அரையன் மகன் முனையன் அருமொழி தேவனான வில்லவராயனுக்கு மீக்கோழை ஆளிகுடியில் நாலே முக்கால் வேலி நிலத்தை விற்றுக் கொடுத்து அக்காசைக் கோயில் பண்டாரத்தில் ஒடுக்கியுள்ளனர். இந்நிலம் மேடு பள்ளமாய்க் கிடந்ததைக் கல்லித் திருத்திப் பயிரிட்டு வரும் வருவாயான இருபத்து முக்கலனே இருதூணிக் குறுணி

நெல்லையுங் கொண்டு இவ்வில்லவராயன் திருவானைக்கா கோயிலில் எழுந்தருளிவித்த இடங்கை நாயகருக்கும் அவர் தம் பிராட்டியார்க்கும் திருமஞ்சனப் படிகளுக்கும்,திருவமுது படிக்கும் இரண்டு திருநாளிலும் இரண்டு நாள் எழுந்தருளுகைக்குமாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு நிபந்தஞ்செய்து கொடுத்துள்ளான்.

**விக்கிரம சோழன் கல்வெட்டு**

முதல் குலோத்துங்கனின் மகன் விக்கிரமசோழன் ஆவான்.இவன் பிறந்த நட்சத்திரம் ஆனி மாதத்து உத்திரட்டாதியாகும்.இவனுக்கு இரண்டு மெய்க்கீர்த்திகள் உண்டு.அவை,

"பூ மாது புணரப் புவி மாது வளர"

"பூமாலை மிடைந்து பொன்மாலை திகழ"

எனத் தொடங்குகின்றன.

இவன் பரகேசரி பட்டமுடையவன்.இவன் கி.பி.1120 முதல் கி.பி.1136 முடிய ஆட்சி செய்தவன்.இவனுக்குத் தியாகசமுத்திரம்,அகளங்கன் என்னும் சிறப்புப்பெயர்களும் உண்டு.இவனை இளமைப் பருவத்தில் வேங்கிநாட்டுக்கு அரசப் பிரதிநிதியாக இருந்து ஆட்சிக்கு உதவினான்.அந்த நாளில் தென்கலிங்க நாட்டின் படையெடுத்துச்சென்று அந்நாட்டு அரசனாகிய தெலுங்க வீமனை வென்றான். இவ்வெற்றியைப் பாராட்டி ட்டக்கூத்தரால் இவன் மீது பரணி ஒன்று பாடப்பட்டது. ஆனால் அந்த நூல் இப்பொழுது கிடைத்திலது.தில்லைச்சிற்றம்பலப் பெருமானுக்கு அளப்பரிய தொண்டு செய்துள்ளான்.ஒட்டக்கூதர் இவன்மேல் உலா நூல் ஒன்று இயற்றியுள்ளார்.விக்கிரம சோழ தேவருலா என்பது அந்த நூலின் பெயராகும்.

**கல்வெட்டு அமைவிடம்**

தஞ்சை இராச ராசேச்சரத்தின் கருப்பக்கிருகத்தைச் சூழ்ந்துள்ள சுவரின் வடபுறம் உள்ள கல்வெட்டு விக்கிரமசோழன் ஆட்சிக்காலத்தில் வெட்டப்பட்டது.இது தமிழும் கிருந்தமும் கலந்து எழுதப்பட்டுள்ளது.

**கல்வெட்டால் அறியப்படும் போர்ச்செயல்கள்**

**கலிங்கப்போர்**

வேங்கை மண்டலத்தில் அரசப்பிரதிநிதியாக இருந்தபொழுது கலிங்க தேசத்தை நெருப்பிட்டுக் கொளுத்தினான். குளம் என்னும் ஊரில் இருந்த தெலுங்க வீமன் மலையின்மீது ஒளிந்துகொண்டான்.

**பட்டம் பெற்ற பின் நடந்த போர்கள்**

பாண்டியர் வெஞ்சுரம் புகவும், சேரலர் கடல் புகவும்,சிங்களர் அஞ்சி நெஞ்சு அலமரவும், கங்கர் திறையிடவும்,கன்னடர் வெந்நிடவும், கொங்கர் ஒதுங்கவும், கொங்கணர் சாயவும் செய்தான்.

**ஆட்சியின் சிறப்பு**

தண்ணளி பரப்பித் தனித்தனிப் புரந்து, மண்முழுதுங் களிப்பவும், மணி நாவொடுங்கவும், விசையமும் புகழும் மேலோங்கவும் ஆண்டான்.

**கல்வெட்டில் குறிப்பிடப்படும் செய்திகள்**

தஞ்சாவூர் இராச ராசேச்சரமுடையாருக்குக் கார் நெல்லை அளந்து வந்த புதுவுடையான் அரையன் இறந்தமையால், அவன் மகனான உடையான் கல்லாலைக்கு அப்பதவியைக் கொடுத்ததோடு, அப்பதவியை அவனுடைய வர்க்கத்தாரும் சந்திரர் சூரியர் உள்ளவரை அநுபவிப்பதென்றும், அக்கல்லாலை என்பான் தஞ்சாவூர்த் தேவர்க்கு அடைத்த நாட்டுப் பண்டாரங்களில் நெல்லை அளந்து அக்கணக்கை அந்தந்த நாட்டுப்பண்டாரங்களிலும், தஞ்சையில் இராச ராசேசரமுடையார் பண்டாரத்திலும் சேர்க்கக் கடவன் எனவும் விக்கிரம சோழன் திருவாய் மலர்ந்தருளிய செய்தியைக் கல்லில் வெட்டப்பட்டுள்ளது.

**விக்கிரமசோழன் கல்வெட்டு (2)**

**கல்வெட்டு அமைவிடம்**

அரியலூர் மாவட்டமு திருமழபாடி யில் வைத்தியாநாத சுவாமி கோயிலில் இரண்டாம் பிரகாரத்தில் விக்கிரம சோழனின் பதினைந்தாம் ஆட்சியாண்டு (கி.பி.1135)கல்வெட்டு உள்ளது.தமிழும் கிரந்தமும் கலந்து எழுதப்பெற்ற கல்வெட்டு இது.

**தில்லையில் செய்த தொண்டு**

நடராசப் பெருமான் எழந்தருளியிருக்கும் செம்பொன் அம்பலத்தைச் சூழ்ந்த திருமாளிகை, கோபுர வாசல், கூடசாலை, பலிபீடம் இவைகளுக்குப் பொன் வேய்ந்தான். அம்பலம் நிறைந்த அற்புதக் கூத்தர் இம்பர் வாழ எழந்தருளும் திருத்தேர்க்குப் பொன் வேய்ந்த முத்துவடங்களைப் பரப்பினான்.தன் பெயரால் வீதி ஒன்றை அமைத்தான். பொன்னால் செய்த பரிகல பரிச்சின்னங்களைக் கொடுதான்.இவைகளைச் செய்து முடித்த காலம் அவன் ஆட்சியின் பத்தாம் ஆண்டு சித்திரைத் திங்கள் அத்தம் பெற்ற ஆதிவாரத்தில் ஆகும்.

**கல்வெட்டால் அறியப்படும் செய்தி**

திருமழபாடி உடையார் கோயிலில் ஸ்ரீ நந்தி தேவரை எழுந்தருளுவித்தவர் அள்ளியூருடையார் ஆவர்.அவர் பெயரில் எச்சில் மணி என்ற அளவில் கல்வெட்டு உள்ளது.எஞ்சிய பகுதிகள் சிதைந்துள்ளன.முற்பகுதியில் விக்கிரம சோழனின் வெற்றிச்சிறப்புப் பேசப்பட்டுள்ளது.

மாதிரி வினாக்கள்

1.முதலாம் இராசாதிராசன் குறிப்பு வரைக

2.வீரராசேந்திரன் பற்றி குறிப்பு வரைக

3..வீரராசேந்திரன் கல்வெட்டால் அறியலாகும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

4.வீரராசேந்திரனின் போர்ச்சிறப்பை எழுதுக.

5.முதல் குலோத்துங்கனின் சிறப்புகளை எழுதுக.

6.முதல் குலோத்துங்கனின் திருவானைக்கா கல்வெட்டு பற்றி விளக்குக.

7.விக்கிரமசோழன் பற்றி குறிப்பு வரைக.

8.விக்கிரமசோழனின் திருமழபாடி கல்வெட்டு பற்றி விளக்குக.

9.சோழர் ஆட்சியில் சமய வளர்ச்சி பற்றி விளக்குக.

10.சோழ மன்னர்களின் படையெடுப்புகள் பற்றி விளக்குக.

# குறிப்புகள்

அலகு 4

**மாறஞ்சடையன் கல்வெட்டுகள்**

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி வட்டம் திருக்கோர்ணம் என்னும் ஊரில் உள்ள கோகர்ணேசுவரர் கோயில் கருப்பக்கிருகத்துத் தென்புறச் சுவரில் மாறஞ்சடையன் காலத்திய கல்வெட்டு உள்ளது. கி.பி 782 இல் வெட்டப்பெற்ற கல்வெட்டு இதுவாகும்.மாறஞ்சடையனின் பதினேழாம் ஆட்சியாண்டில் இக்கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது.தமிழும் கிரந்தமும் கலந்த எழுத்தில் கல்வெட்டு உள்ளது.

**மாறஞ்சடையன் பற்றிய குறிப்புகள்**

பாண்டிய நாட்டைக் கி.பி.765 முதல் கி.பி.790 முடிய ஆட்சி செய்தவன் பாண்டியன் மாறவர்மன் ஆவான். இவனுக்குப் பராந்தகன் என்ற வேறு பெயரும் உண்டு. ஆனைமலைக் கல்வெட்டு, வேள்விக்குடிச் செப்பேடுகள், சீவர மங்கலத்துச் செப்பேடுகளில் இவனைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.இவன் வைணவ சமயம் சார்ந்தவன்.காஞ்சிவாய்ப் பேரூரில் திருமாலுக்குக் குன்ற மன்னதோர் கோயில் கட்டினான். காஞ்சி என்பது(கோவை) பேரூர்க்கு அண்மையில் ஓடும் ஆறாகும். மக்கள் இவ்வாற்றை இன்று நொய்யல் என்று குறிப்பிடுகின்றனர். பதிற்றுப்பத்தில் இவ்வாறு 'சாந்துபுலர் மார்ப நின்பெயர் காஞ்சியம் பெருந்துறை மணலினும் பல வாழியர்'(48 ஆம் பாடல்) என்று காஞ்சி என்று குறிக்கப்பட்டுள்ளது.

**கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ள செய்தி**

வல்லநாட்டுக் கவிப்பால் கல்குறிச்சி வரகுணவதி அரையன் ஆன நக்கஞ்செட்டி, திருவெட்பூர் கோகர்ணத்து மகாதேவர்க்கு ஒரு நுந்தாவிளக்கு எரிப்பதற்குப் பலரிடத்தில் யாசித்துப் பதினைந்து கழஞ்சு பொன்னை அந்நாட்டார் பாதுகாவலில் வைத்துள்ளான்.

**கல்வெட்டு மூலம்**

1.ஸ்வஸ்தி ஸ்ரீ கொமாற -

2.ஞ்சடையார்க்கு யா -

3.யாண்டு யஎ ஆவது -

4.வல்ல நாட்டு கவி -

5.ப்பால் கல்குறிச் -

6.சி வரகுணவதி

7.அரையன் ஆன -

8.தக்கஞ் செட்டி உ -

9.ஞ்ஞட்டு திருவெ -

10.ள்பூர்க் கொகர் -

11ணத்து மாதெ -

12.வர்க்கு நொந்தா -

13.விள(க்)கினுக்கு ராவு -

14.ம் பகலும் நொந் -

15.தா விளக்குனுக்கு

16.வெத்த பொன்

17.யரு பதின் அஞ் -

18.கழஞ்சு இப் -

19.பொன் நாட்டார் ர -

20.க்ஷெயாக வெத்த

21.பொன்

**குலசேகரதேவர் கல்வெட்டு**

குலசேகர தேவர் என்னும் பெயரில் பாண்டிய நாட்டை ஆண்டவன் விக்கிரம பாண்டியனின் மகனாவான். இவன் காலம் கி.பி.1190 முதல் கி.பி.1217 ஆகும்.அவனுடைய மெய்க்கீர்த்திகள் 1.பூதல மடந்தை 2. பூவின் கிழத்தி 3.பூதல வனிதை எனத் தொடங்குகின்றன.இவனுக்கு இராச கம்பீரன் என்னும் சிறப்புப்பெயர் உண்டு என்பதைத் திருப்பூவணத்துச்செப்பேடு உணர்த்தும்.

இவனுடைய கல்வெட்டுகள் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் காணப்படுகின்றன. பாண்டிய நாடு முழுவதும் இவன் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது.இவன் அரண்மனையில் புகழாபரணன் என்னும் கூடத்திலிருந்த சிங்காதனத்தின் பெயர் மழவராயன் என்பதை ஒரு கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

**கல்வெட்டு அமைவிடம்**

புதுக்கோடை மாவட்டம் திருமயம் வட்டம் மலையக்கோயில் என்னும் ஊரில் உள்ள குடபோகக்கோயிலின் வாசற்படிக்கு வலபுறச் சுவரில் கல்வெட்டு உள்ளது.

கல்வெட்டு குலசேகரதேவரின் காலமான கி.பி.1192-93 இல் வெட்டப்பட்டுள்ளது.

**கல்வெட்டால் அறியப்படும் செய்திகள்**

விருதராஜ பயங்கர வளநாட்டு, திருவோதிக்கால் ஸ்ரீ வரமுடைய நாயனார்க்குக் கல்வாயில் நாடாள்வான்,பாணிதம் பற்றில் உள்ள தேவ தானமான நிலத்தின் கடமை,வரி,அந்தராயம் இவைகளை நீக்கிக் கொடுத்துள்ளான்.

**மெய்க்கீர்த்தியால் அறியப்படும் செய்திகள்**

செம்பியர், வில்லவர், மாளவர், பல்லவர் இவர்கள் குலசேகர தேவனுக்குக் கப்பம் கட்டி வந்தனர் என்ற செய்தி மெய்க்கீர்த்தி வழியாக அறியமுடிகின்றது.

**சுந்தரபாண்டியன் கல்வெட்டு**

குலசேகர பாண்டியனுக்குப் பின் பாண்டிய நாட்டில் ஆட்சி பொறுப்பேற்றவன் சுந்தரபாண்டியன் ஆவான்.இவன் மாறவர்மன் என்னும் பட்டம் புனைந்தவன்.இவன் மெய்க்கீர்த்தி, "பூமருவிய திருமடந்தையும் புவிமடந்தையும் புயத்திருப்ப" என்று தொடங்குகின்றது.இவன் சோழநாட்டின் மீது படையெடுத்துத் தஞ்சாவூரையும் உறையூரையும் நெருப்பிட்டுக் கொளுத்தினான். மூன்றாம் இராச ராச சோழனைக் காட்டுக்குத் துரத்தினான். அவனுடைய பைம்பொன்னால் ஆகிய முடியைக் கவர்ந்து பாணனுக்குப் பரிசிலாக வழங்கினான்.

ஆயிரத்தளியில் சோழன் அபிடேக மண்டபத்தில் இவன் வீராபிடேகம் செய்துகொண்டான். அது கருதி இவனுடைய கல்வெட்டுகளுள் சில இவனைச் சோணாடு கொண்டருளிய சுந்தர பாண்டிய தேவர் எனக் குறிப்பிடுகின்றது. தில்லைப் பெருமைனை வழிபட்டு, பின் பொன்னமராவதி சென்று அங்குள்ள மணி மண்டபத்தில்

தங்கியிருந்தபொழுது, தனக்கு முன் போரிட ஆற்றலற்றுக் காட்டுக்கு ஓடிய மூன்றாம் இராசராச சோழனை அழைத்து அவனுக்குச் சோழநாட்டின் ஆட்சியை வழங்கினான்.மீண்டும் பாண்டியனுடன் இராசராசன் முரண்பட மீண்டும் போர் நடைந்தது.சோழன் தோற்று வடநாட்டிற்கு ஓடினான். பின் சுந்தரபாண்டியன் பழையாறையாகிய முடிகொண்ட சோழ மண்டலத்துக்குச் சென்று வீராபிடேகம் செய்துகொண்டான்.இவ்வேந்தனின் பட்டத்தரசி உலகமுடையாள் ஆவாள்.இவன் கி.பி.1216 முதல் கி.பி.1238 முடிய அரசாட்சி செய்தான்.சுந்தரபாண்டியனின் மூன்றாம் ஆட்சியாண்டில்(கி.பி.1219) இக்கல்வெட்டு வெட்டப்பட்டது.

**மெய்க்கீர்த்தி பகுதியால் அறியப்படும் வீரச்செயல்கள்**

சுந்தரபாண்டியன் கொங்கர், கலிங்கர், கோசலர், மாளவர், சிங்களர், தெலுங்கர், சீனர், குச்சரர், மகதர், விக்கலர், செம்பியர், பல்லவர் முதலிய பார்த்திவர் எல்லாம் திறை கொண்டு வந்து வணங்கும்படியான வீரம் பொருந்தியவனாக விளங்கினான்.

**கல்வெட்டால் அறியப்படும் செய்திகள்**

கானநாடான விருதராச பயங்கர வளநாட்டுத் துறுமா நாட்டுத் திருநாவலூர், அனுமன் தாயான அஞ்சன மங்கலம், இவ்வூர்களின் வரிப்பணம் மிகுதியாய் இருந்தது.இதைக் குறைக்குமாறும், அப்படிக் குறைப்பது சுந்தரபாண்டிய தேவரின் திருமேனி நன்றாயிருக்குமென்றும், அழகப் பெருமாளன் நாயனார் சுந்தரபாண்டிய தேவரிடம் விண்ணப்பஞ் செய்தார்.அதை அரசர் ஏற்றருளி,முதல் தரத்து நிலத்துக்கு,மா ஒன்றுக்கு இரு கல நெல்லைத் தள்ளிவிட்டு ஐங்கலனே இரு தூணிப் பதக்கு நானாழி நெல்லும்,நீர்ப் பஞ்சமுள்ள நிலத்துக்கு மா ஒன்றுக்கு முக்கலனே இரு தூணி முக்குறுணி மூவுழக்கும்,நவிரை என்னும் நெல்லில் ஒன்றுக்கு முக்காலும் வரகில் ஒன்றுக்குப் பதக்கும்,எள்,தினை இவைகளில் நான்கில் ஒன்றும் அரசர் எழுந்தருளினால் திருவெழுச்சிக் குடிமை முதலாக நாடென்ற வரிகள் எப்பேர்ப்பட்டனவும்,ஒன்றுக்குப் பாதியும் கொடுக்குமாறு அரசன் கட்டளையிட்டருளினான்.

**அரிகேசரி பராக்கிரம பாண்டியன் கல்வெட்டு**

அரிகேசரி பராக்கிரம பாண்டியனுக்குப் பொன்னின் பெருமாள்,மானக்கவசன் என்ற வேறுபெயர்களும் உண்டு.இவன் தென்காசிப் பெரிய கோயிலைக் கட்டியுள்ளான்.இவன் சிறந்த சிவபக்தன் ஆவான். இவன் தேவியின் பெயர் உலகம் முழுதுடையாள். இவ்வம்மையாரும், இவரது கணவனும் "இலகு கருணை இரண்டு உருவென்ன அம்மையும் அப்பனுமாய் அனைத்துயிர்க்கும் இம்மைப் பயனும் மறுமைக்கு உறுதியும் மேம்பட நல்கி" எனப் பாராட்டப்படுகின்றனர்.இவ்வரசனின் மெய்க்கீர்த்தி," பூமிசை வனிதை மார்பினிற் பொலிய" எனத் தொடங்குகிறது.இவன் கி.பி.1422 முதல் கி.பி.1463 வரை ஆட்சி செய்தவன்.

**மெய்க்கீர்த்தியால் அறியப்படும் செய்திகள்**

பராக்கிரம பாண்டியன் சிங்கை, அனுரை, இராசை, சண்பை, விந்தை, அறந்தை, முதலை, வீரை, வைப்பாறு ஆகிய ஊர்களில் தன் பகைவர்களை வென்றான். பதினெண்மொழிப் பார்த்திவர் அனைவரும் திறையும் சின்னமும்,முறை முறை கொணர்ந்து குறைபல இரந்து குரைகழல் இறைஞ்ச அவரவர் வேண்டியது அவரவர்க்கு அருளானான். அந்தணர் செந்தழில் ஓம்ப விந்தை முதலானைந்து ஊர்களில் அகரங்களை அமைத்துள்ளான். திருப்புடைமருதூர் கோயிலில் மண்டபம்

எடுத்துள்ளான். திருநெல்வேலி சிவபெருமானுக்கு நள்ளிரவு வழிபாட்டுக்குப் பொற்கலத்தில் அமுது செய்தருள ஏற்பாடு செய்துள்ளான்.

**கல்வெட்டால் அறியப்படும் செய்திகள்**

அரிகேசரி பராக்கிரம பாண்டியன் தென்காசி விசுவநாதப் பெருமானின் கோயிலை அடிமுதல் கலசம் வரை திருப்பணி செய்துள்ளான.அதில் விசுவநாதரை எழுந்தருளச் செய்துள்ளான்.அர்த்த மண்டபம்,மகா மண்டபம், சோபானம் இவைகளையும் திருப்பணி செய்வித்தான்.திருப்பளியறை நாச்சியார் முதலாகவுள்ள திருமேனிகளைச் செய்து வைத்தான்.மதில் கோபுரம் இவைகளையும் கட்டுவித்தான்.விசுவநாதரின் வழிபாட்டிற்குச் சாத்துப்படி, திருமாலை, திருப்பரி சட்டம்,திருவிளக்கு முதலியவைகளுக்கும்,விசேட பூசைகளுக்கும், திருநாட் செலவுகளுக்கும் தன் 25 ஆம் ஆண்டில் தென்காசி வாயுளான், குன்றக்குடி, நல்லூர், வடவாரி நாட்டுப் பைம்பொழில் என்னுப் ஊர்களைக கொடுத்துள்ளான். 29 ஆண்டில் புலியூர், வீரபாண்டியன் என்னும் ஊர்களைக் கொடுத்துள்ளான்.

**குலசேகர பாண்டியர் கல்வெட்டு (2)**

**கல்வெட்டு அமைவிடம்**

திருநெல்வேலி மாவட்டம் தென்காசி விசுவநாதர் கோயிலிலுள்ளமுன் கோபுரத்தின் இடந்த நிலையில் உள்ள சுவர்களில் உள்ள கல்வெட்டு அரிகேசரி பராக்கிரம பாண்டியன் கி.பி.1547 இல் வெட்டப்பட்ட கல்வெட்டில் தமிழும் கிரந்தமும் கலந்து பாடல்களாகக் கல்வெட்டு உள்ளது.

**கல்வெட்டுப் பாடல்களால் அறியப்படுவன**

கி.பி.1442 முதல் கி.பி.1463 முடிய அரசாண்ட அரிகேசரி பராக்கிரம பாண்டியன் என்னும் அரசன் தென்காசி நகரமைத்து அங்குச் சிவாலயங்களும் கோபுரமும் கட்டிமுடித்தான். சிவபெருமானுக்கு விசுவநாதன் என்று காசியில் உள்ள பெருமான் பெயரையே இட்டுக் குடமுழுக்கும் செய்வித்தான். இவன் கொற்கை வேந்தன், மதுரை வேந்தன், தென்காசியை ஆண்ட பெருமான், மானவேகன், வடிவெழுத ஒண்ணாத அழகன்,பொன்னின் பெருமாள், விந்தைப் போர் கடந்த பாண்டியன் எனவும் அழைக்கப்படுகின்றான்.

இவன் கி.பி.1447 இல் சிவாலயங் கட்டத் தொடங்கிப் பதின்மூன்று மாதத்தில் கட்டிமுடித்தான். பின் பல திருப்பணிகளும் செய்து கி.பி.1457 இல் கோபுர வேலை தொடங்கி ஆறு ஆண்டுகளில் எங்கும் இல்லாத வகையில் ஒன்பது நிலைக் கோபுரமும் கட்டிமுடித்தான். பின் இக்கோயிலுக்குப் பழுது வராமல் காக்க எனத் தன் சந்ததியினரை வேண்டிக் கொள்கின்றான். இக்கோயிற் பாதுகாப்பைத் தானாகவே பாடலால் பாடியிருக்கின்றான். பெரும் போர் வீரனும் பெரும் சிவ பக்தனுமான பராக்கிரபாண்டியன் கி.பி.1463 இல் இயற்கை எய்தினான். அவனுக்குப் பின் அரசாட்சி செய்த இவன் தம்பியாகிய குலசேகர பாண்டியன் தன் தமையன் தந்த பணியை உரிமையோடு சிரமேற் கொள்வதாக ஒரு பாடலால் தெரிவிக்கின்றான். இதுவே இக்கல்வெட்டின் இறுதிப் பாடலாகும்.

மாதிரி வினாக்கள்

1.மாறஞ்சடையன் பற்றிய குறிப்புகள் வரைக

2.நக்கஞ்செட்டியின் சமய ஈடுபாட்டை விளக்குக

3.குலசேகரதேவர் குறிப்பு வரைக.

4.குலசேகரதேவர் காலத்துக் கல்வெட்டு பற்றி விளக்குக

5.சுந்தரபாண்டியன் சிறப்புகளை விளக்குக

6.சுந்தரபாண்டியன் மதுரையை மீட்ட வரலாற்றை எழுதுக

7.அரிகேசரி பராக்கிரம பாண்டியன் கல்வெட்டுச் செய்திகளை எழுதுக

8.குலசேகர பாண்டியர் கல்வெட்டு பற்றி விளக்குக

9.தென்காசி கோயில்கள் பற்றி எழுதுக

10.பாண்டிய மன்னர்களின் சமய ஈடுபாட்டை விளக்குக.

# குறிப்புகள்

## அலகு 5 : செப்பேடுகள்

கல்வெட்டுகளுக்கு அடுத்து வரலாற்றை அறிந்துகொள்வதற்கு உதவுவன செப்பேடுகளாகும். உலோகங்களில் தங்கம், பித்தளை, வெள்ளி, செம்பு, ஈயம், இரும்பு முதலியவற்றை மக்கள் ஆவணங்கள் எழுதப் பயன்படுத்தினாலும் செம்பின் பயன்பாடே மிகுதியாகும்.

செம்பில் எழுதப்பட்டவை செப்பேடு, பட்டயம், செப்புப்பட்டயம், தாமிரசாசனம், தாம்பிரசாசனம், தாமிரபட்டயம், செப்புப்பத்திரம், செம்போலை எனப் பல பெயர்களில் அழைக்கப்படுகின்றன.

கி.பி.ஆறாம் நூற்றாண்டு முதல் தமிழ் நாட்டில் செப்பேடுகள் கிடைக்கின்றன. பேரராசர்கள், சிற்றரசரகள், சமீன்தார்கள், பாளையக்காரர்கள், பலசமூகத்தவரின் செப்பேடுகள் நமக்குக் கிடைக்கின்றன. பிற்காலத்தில் கல்வெட்டுகள் பொறிக்கும் பழக்கம் படிப்படியாகக் குறைந்து செப்பேடு அளிக்கும் வழக்கம் மிகுதியாகியுள்ளது.

சங்க காலத்தில் வெட்டப்பட்ட தமிழிக்கல்வெட்டுகளும் தமிழ் எழுத்துகளைக்கொண்ட காசுகளும் மட்பாண்டங்களும் கிடைதத்திருக்கும்பொழுது தமிழ் எழுத்துடன் கூடிய செப்பேடு ஒன்றுகூடக் கிடைக்காமைக்கு வரலாற்று அறிஞர்கள் வருந்துகின்றனர்.சங்க காலத்திலும் சங்கம் மருவிய காலத்திலும் வட இந்தியாவில் வெளியிடப்பெற்ற பல செப்பேடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.கி.மு.மூன்றாம் நூற்றாண்டைச்சேர்ந்த சோகௌரா சாசனமும், கி.பி.21 இல் எழுதப்பட்ட தக்ஷசீலப் பட்டயமும், கி.பி.77 இல் வெட்டபட்ட கவலன் செப்பேடும் கி.பி.433 இல் குமாரகுப்தன் வழங்கிய தாம்பிர சாசனமும் அவைகளுள் குறிப்பிடத்தக்கனவாகும்.

பல்லவர்களுக்கு முன்பு அரசாண்ட சாதவாகனப்பேரரசர்களில் கௌதமிபுத்ர சதகர்னி என்ற மன்னர் வெளியிட்ட கல்வெட்டில் பட்டிகா என்ற சொல் உள்ளது. பட்டிகா என்பது பட்டயத்தைக்குறிக்கலாம் என்று முனைவர் ச.கிருட்டினமூர்த்தி கருதுகிறார். முதுகுடுமிப் பெருவழுதி பார்ப்பனர்களுக்குத் தானம் தந்து ஆவணம் ஒன்றையும் அளித்தான் என்று வேள்விக்குடி செப்பேடு குறிப்பிடுகிறது. இந்த ஆவணம் செப்பேடாக இருக்கலாம்.தமிழகத்தில் பல்லவர் காலம் தொடங்கிச் சோழர், பாண்டியர், ஆய்மன்னர்கள் எனப் பலரும் செப்பேடு வழங்கியுள்ளனர் இவ்வாறு வழங்கப்பட்ட செப்பேடுகள் தொடக்கத்தில் இருமொழி செப்பேடுகளாக இருந்தன. தமிழ்மொழியில் கூடிய முதல் செப்பேடு சிம்மவர்மனுடைய பள்ளங்கோயில் செப்பேடாகும். இச்செப்பேட்டின் முதல் பகுதி வடமொழி கிரந்தத்தில் அமைந்துள்ளது. ஏறக்குறைய கி.பி.550 இல் இச்செப்பேடு எழுதப்பட்டிருக்கலாம் என்பர்.

### செப்பேடு அமைப்பு

ஒன்றிற்கு மேற்பட்ட ஏடுகளை உடைய செப்பேடுகளின் முதல் பக்கமும் கடைசி ஏட்டின் பக்கமும் எழுதாமல் விடுவர். ஏதாவது ஒரு செப்பேட்டின் வாசகம் இறுதிப் பக்கத்தில் முடிவதாக இருந்தால் அதற்குப் பிறகு வெற்றேடு ஒன்று விடுவதும் உண்டு. இதனால் எழுதப்பட்ட ஏடுகளின் பக்கங்கள் சிதைவுபடாமல் இருக்கும். இதே நோக்கத்திற்காக ஏடுகளின் ஓரங்களில் சற்றே கடினமான விளிம்புகளும் ஏற்படுத்தப்படும். தனித்தனி செப்பேடுகள் இருப்புதும் உண்டு. பல செப்பேடுகள் கோர்வையாகக்கட்டப்பட்டு வைத்திருப்பதும் உண்டு.

**பாண்டியர் செப்பேடு**

**செப்பேடுகளின் எண்ணிக்கை மிகுதி**

தொடக்க காலத்தில் மன்னர்கள் கல்வெட்டுகளைத்தான் அதிகமாக வெட்டினர். செப்பேடுகள் அந்த அளவு கிடைக்கவில்லை. பிற்காலச் சோழர் பாண்டியர் வீழ்ச்சிக்குப் பிறகு ஆட்ச இசெய்த விசயநகரப் பேரரசர்களும், அவர்களுக்குகீழிருந்து தஞ்சை, மதுரையை ஆண்ட நாயக்கர்களும், இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களும் அறந்தாங்கித் தொண்டைமான்களும், புதுக்கோட்டைத் தொண்டைமான்களும், மராத்தியர்களும் குறுநில மன்னர்களும், சாதியத் தலைவர்களும் மிகுதியான செப்பேடுகளை வெளியிட்டுள்ளனர். இச்செப்பேடுகளில் கோயில்களுக்கும் மடங்களுக்கும் பார்ப்பனர்களுக்கும் நிலங்கள் தானமாக வழங்கப்பட்ட செய்திகள் பதிவாகியுள்ளன. மகமை என்ற பெயரில் பொதுமக்களிடமிருந்து கோயில்களுக்கும் மடங்களுக்கும் வருவாய் கிடைக்க ஏதுவாக ஆணை பிறப்பித்துச் செப்பேடு வழங்கப்பட்டுள்ளதையும் அறியமுடிகிறது. கி.பி.12 ஆம் நூற்றாண்டில் நரலோக வீரன் என்பவன் தேவாரப் பாடல்களைச் செப்பேடுகளில் எழுதி வைக்க ஏற்பாடு செய்துள்ளான். ஆனால் அந்த செப்பேடுகள் ஒன்றுகூட நம் பார்வைக்குக் கிடைக்கவில்லை.

**இறையனார் களவியல் உரை**

இறையனார் களவியல் என்ற நூல் தொன்மையான நூலாகும்.இதற்கு எழுதப்பட்ட உரை விரிவானதாகும். இறையனார்க்களவியல் நூலை இரு செப்பேடுகளில் எழுதி இரவில் இறைவன் பீடத்தின் கீழ் இட்டனர் என்று களவியல் உரைப்பாயிரம் கூறுகிறது. இவ்விரண்டு செப்பேடுகளும் நமக்குகி கிடைக்கவில்லை.

**போலிச்செப்பேடுகள்**

செப்பேடுகள் வரலாற்றுக்கு முக்கியப் பங்காற்றுகின்றன. மேலும் சொத்து ஆவணங்களாகவும் விளங்குகின்றன. கல்வெட்டுகளில் போலிக்கல்வெட்டுகள் இல்லை. ஆனால் செப்பேடுகளில் போலிச் செப்பேடுகள் உண்டு என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். சொத்தாசை காரணமாகவும் சொத்து கைநுழுவிப் போய்விடாமல் இருக்கவும் போலிச்செப்பேடுகள் எழுதப்பட்டுள்ளன. கோயில் திருப்பணிகளின்பொழுது பழைய கல்வெட்டுகளை மீண்டும் பொறித்து 'பழம்படி கல்வெட்டு' என்று குறித்து வைப்பர்.இவ்வாறே செப்பேடுகளிலும் பிற்காலங்களில் எழுதுவது உண்டு.இதனைத் துல்யம் என்று குறிப்பிடுவர். எடுத்துக்காட்டாக ஆவுடையார் கோயிலுக்கு உரிய 15 ஆவணங்கள் வெவ்வேறு காலத்தவை. அவை பின்னாலும் 10 ஏடுகளில் தொடர்ச்சியாக எழுதப்பட்டுள்ளன. ஆனால் இவை போலிச்செப்பேடு இல்லை.

**அரசின் சின்னம்**

பல்லவர்,பாண்டியர்,சோழர் வெளியிட்ட செப்பேடுகள் பெரும்பாலும் ஒன்றுக்கு மேற்பட்ட ஏடுகளாக இருப்பதால் ஏடுகளை ஒன்றாகக் கோர்த்து வளையத்துடன் வெளியிட்டுள்ளனர். வளையத்தில் அரசின் சின்னம் அல்லது முத்திரை பதிக்கப்பிருக்கும்.

**தமிழ்ச்செப்பேடுகள்**

தமிழகத்தில் பலமொழிகளில் அமைந்த செப்பேடுகள் கிடைத்துள்ளன. வெவ்வேறு எழுத்து வகைகளில் இச்செப்பேடுகள் உள்ளன. சில செப்பேடுகள் மேல்நாட்டு

அருங்காட்சியங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.ஏறக்குறைய 600 செப்பேடுகள் இதுவரை கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. எனினும் இவை முறையாக விளக்கங்களடனு பிதப்பிக்கப்பவில்லை என்பது ஒரு பெருங்குறையாகும்..

**பட்டயங்கள் ஆவணங்களே**

பட்டயத்தில் உரிமைகள் மற்றும் தானங்கள் தெளிவாகக் குறிப்பிடப்படவேண்டும். உரிமைகளைப் பற்றி பிற்காலத்தில் வழக்கு வரக்கூடாது என்பதற்காவே சாசனங்கள் எழுதப்படுகின்றன. அபூர்வமாக வழக்குகள் வரும் காலத்தில் பட்டயங்களை எடுத்துப் படித்து அதிகாரிகள் அல்லது சபை உறுப்பினர்கள் இதுதான் முறை என்று தீர்ப்பு அளிப்பார்கள். அத்தீர்ப்பை மற்றொரு பட்டயமாகவும் வெளியிடுவது உண்டு.

ஒரு பட்டடயம் எழுதி நீண்ட காலம் ஆனால் பட்டயத்தில் உள்ள நிபந்தனைகள் மறந்துபோக வாய்ப்பு உண்டு. அரசனோ, தனிநபரோ, ஒரு கூட்டமோ தான நிலங்களை அபகரித்துக் கொண்டால் வழக்கு ஏற்பட வாய்ப்பு உண்டு. அந்த நேரத்தில் பழைய ஆவணங்களைப் பார்வையிட்டு அறவோர் பழைய பட்டயித்தின்படி நன்கொடையை நிலைநாட்டுவார்கள்.

அவ்வகையில் பாண்டிய மன்னன் முதுகுடுமிப் பெரு வழுதி என்பவன் பார்ப்பனர்களுக்கு வழங்கிய தானத்தைக் களப்பிரர்கள் கவர்ந்துகொண்டனர்.பல தலைமுறை கழித்து தானம் பெற்றவர் மரபில் வந்த ஒருவன் பாண்டிய மன்னன் நெடுஞ்சடையனிடம் முறையிட்டான். மன்னன் ஆவணங்களைக் கொண்டுவரச் செய்து பார்வையிட்டு உண்மையறிந்து வேள்விக்குடி என்ற உரை முறையிட்ட பார்ப்பனனிடம் ஒப்படைத்துச் செப்பேடும் வழங்கினான் என்று அறியும்பொழுது செப்பேட்டின் முதன்மை தெளிவாகப் புரியும்.

**திரிபலீ தாம்ரசாசனம்**

செப்பேட்டில் ஆவண்ணை வடிப்பதற்கு முன்பாக ஓலையில் எழுதுவது பழக்கமாகும். அதனைப் பின்னர் கல்வெட்டில் பொறிப்பர். மூன்றாம் படியாகச் செப்பேட்டில் பொறிப்பர்..இதனைத் திரிபல்லீ தாம்ர சாசனம் என்பர்.அரசனின் நேர்முக ஆணை முதலில் ஓலையில்தான் எழுதப்படும்.இதனைத் திருவாய்க் கேள்வி எழுதுவார்.தானம் பெற்றவருக்கு வெகுகாலம் தான உரிமை வேண்டும் ஆதலால் செப்பேடு வழியாக ஆணை வழங்கப்படும்கல்வெட்டுகள் சிலவற்றில் 'கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்க' என்று குறிப்பு காணப்படுகிறது.

**செப்பேடுகள் கிடைக்கும் இடங்கள்**

பழைமையான செப்பேடுகள் பலவும் பூமிக்கடியில் தோண்டும்பொழுது இடைத்தவையாகும். கட்டடங்களின் அஸ்திவாரங்களிலும் கிடைத்துள்ளன.பெரும்பாலும் கோயில் வளாகங்களில் நிலத்தைத் தோண்டும்பொழுது கிடைத்தவையே பெரும்பாலான செப்பேடுகளாகும். முன்பு மண்பானைகளில் செப்பேடுகளை வைத்துப் புதைத்துள்ளனர். திருத்தணி வேலஞ்சேரிச் செப்பேடுகள் இவ்வாறு கிடைத்தனவாகும். செப்பேடுகளுடன் ஐம்பொன் சிஐகளையும் சேர்த்துப் பாதுகாப்புக்காகப் புதைப்பு உண்டு.

**செப்பேடுகள் வழியாக அறியலாகும் உண்மைகள்**

செப்பேடுகளின் வழியாக இருவகை ஆட்சி சமூகத்தில் இருந்துள்ளமை புலனாகிறது. ஒன்று அரசு. மற்றொன்று சமூகம். இவை இரண்டும் முன்பு தனித்தனியாகச் சிறப்புடன் நடந்துள்ளன.அரசில் மன்னன், அமைச்சர், படை, குடி, நிதி,

போர், இறை முதலிய பகுப்புகள் இருந்தன. சமூகத்தில் வகுப்புத்திட்டம், சமயத்திட்டம் என்ற இரண்டு பகுப்புகள் இருந்துள்ளன. அதாவது அரச மரபு மாறும். சமூக மரபு மாறாது என்பது இதன் சிறப்பாகும்.

**கோயில்புதுப்பித்தல்**

கோயில்கள் காலப்பழைமையால் பழுதுபடும். இப்பழுதினை நீக்குவதை அரசன் கடமையாகக்கொண்டிருந்தான். மன்னனுக்கு உதவியாகச் சமூகத்தலைவர்கள் இருந்தனர். சிதிலமடைந்த கோயில்களைப் புதுப்பித்துச் சாசனங்கள் வெளியிட்டுள்ளனர். ஒரு சோழ அரசனுக்கு நோய் வருகிறது. கொங்குநாட்டுத்தலங்களைப் புதுப்பிக்க அந்நோய் நீங்கும் என அறிந்து நாட்டுத் தலைவர்களான சமயமுதலிகள் கஸ்தீரிரங்கப்ப செட்டி, சடையப்ப வள்ளலை அழைத்துக்கொண்டு கொங்குதேசத்திற்குச் சோழமன்னனுடன் செல்கின்றனர். சேரனும் அவர்களுடன் சேர்ந்துகொள்கின்றான். பல சிவாலயங்கள் புதுப்பிக்கப்பட்டன. ஊர்த் தேவதைகளுக்குக் கோயில்கள் கட்டி மானியமும் சோழன் வழங்கினான் எனச் சோழன் பூர்வபட்டயம் கூறுகிறது. முப்பத்தாறு பெருங்கோயில்களும் 360 சார்புக்கோயில்களும் கட்டி, குடமுழுக்கு நடத்தப்பட்டதாக முற்சுட்டிய பட்டயம் குறிப்பிடுகிறது.

**சோழர் செப்பேடுகள்**

ஆதித்தசோழன் விசயாலயச்சோழனுக்குப் பிறகு மன்னனான்.இவன் காவிரிக்கரையில் இரு மருங்கிலும் சிவாலயங்களை எடுப்பித்தான் என்று அன்பில் செப்பேடுகள் கூறுகின்றன.சர்வசிவ பண்டிதர் கட்டிய எய்தார் (எசாலம்) சிவன் கோயிலுக்கு ஏராளமான நிலங்களை இராசேந்திரசோழன்வழங்கி இரு செப்பேட்டையம் வெட்டுவிக்கச்செய்தான்.

**வலங்கை-இடங்கைப்பிரிவு**

பழங்காலத்தில் சாதியின் அடர்த்தி அதிகமாகும்.பல சாதிப்பிரிவுகளால் சமூகம் பிருந்து கிடந்தது.வலங்கை இடங்கை என்ற இருபிரிவினராக மக்கள் இருந்தனர்.அவ்விரு பிரிவுகளில் அடங்காத சாதியினரும் உண்டு. அரசர்கள் கைக்கோளர்களின் பேச்சைக் கேட்டு அதற்கு மதிப்பு தந்ததற்குப் பல செப்பேடுகள் சான்றாக உள்ளன.மல்லிகுந்தம் பட்டயம் இடங்கையரின் செல்வாக்கைக் குறிப்பிடுகின்றது..

**கைக்கோளர்**

சோர, சோழ, பாண்டியர்கள் காஞ்சிபுரத்தில் இருந்தபொழுது கச்சிவீரனால் கருமாரிக்குளத்தில் பட்டயம் இருப்பது அறிந்து அதை எடுப்பித்து ஓதுவித்துப் பண்டைய வரலாறு அறிந்து சாலிவாகனன் மீது படையெடுத்து வென்று நாட்டைப் பெற்று நாடாள்கின்றான். கச்சிவீரன் கைக்கோளன் ஆவான். வலங்கையருக்குக் கஸதூரிரங்கச்செட்டியும் குடியானவர்களுக்கு வெண்ணைய் நல்லூர் சடையப்ப வள்ளலும் தலைமை வகித்தனர் என்று சோழன் பூர்வ பட்டயம் கூறுகின்றது.

**எடைமிகுந்த செப்பேடுகள்**

எண்ணிக்கையிலும் எடையிலும் மிகுந்ததாகக் கரந்தைச்செப்பேடுகளைக் கூறுவர். இதன் எடை 9 மணங்கு ஆகும். ஒருவர் தூக்குவது இயலாத காரியம். அதனை அடுத்துத் திருவாலங்காட்டுச்செப்பேடுகளைக்கூறலாம். வெட்டத் தொடங்கிப் பாதியிலேயே நின்ற செப்பேடுகளும் உண்டு.

**சாட்சிகள்**

செப்பேடுகளின் முடிவில் சாசனம் எழுதித் தருபவர் கையொப்பம் இடம்பெறும். 'இவை என் எழுத்து' என்ற சொற்களும் இடம்பெறும். சாட்சிகள் ஒப்பமிடும்பொழுது 'இப்படி அறிவேன்' என்று கூறி ஒப்பமிட்டுள்ளனர். தானம் வழங்க மன்னிரட்ம பிரிந்துரைத்தவரின் பெயரும் செப்பேடு வெட்டிய ஆசாரியின் பெயரும் பெரும்பாலும் செப்பேடுகளில் இடம்பெறுவது உண்டு.

**சுருக்கெழுத்து**

கல்வெட்டுகள் போன்று செப்பேடுகளில் குறியீடுகள் பயின்றுவருவது உண்டு. ஆண்டு, மாதம், தேதி, நிலம், வேலி, பொன், பணம், நெல், கலம், எண்கள், பின்னங்கள், அளவுகள் போன்றவை குறியீடுகளில் காட்டப்பட்டிருக்கும். சுருக்க எழுத்துகளும் இருப்பது உண்டு.பல்லவரின் சித்தூர்ப்பட்டயத்தில் பல சுருக்க குறியீடுகள் உண்டு. திரிபுவனமாதேவி என்ற ஊர்ப்பெயர் திரிபு என்று கரந்தைச்செப்பேட்டில் உள்ளது. புள்ளிருக்குவேளூர்ச் செப்பேட்டில் 'பு' என்ற சுருக்கெழுத்து உள்ளது.வேறு செப்பேடுகளிலும் இப்போக்கு உள்ளது.

தமிழ்ச்செப்பேடுகளில் கிரந்த எழுத்துகளும் பழைய தெலுங்கு எழுத்துகளும் அபூர்வமாக நாகரி எழுத்துகளும் வரும்.எனவே செப்பேடுகளைப் பதிப்பிப்பவருக்குப் பன்மொழி அறிவு தேவைப்படுகிறது.செப்பேடுகளில் கூட்டு எழுத்துகளில் சில சொற்கள் எழுதப்பட்டிருப்புதும் உண்டு.

**இலெய்டன் செப்பேடுகள்**

செப்பேடுகள் கிடைக்கும் ஊர்ப்பெயரிலும், இருக்கும் ஊர்ப்பெயரிலும் பெயரிட்டு வழங்கப்படுகின்றது. ஆங்கிலேயரும் பிரஞ்சுக்காரரும் தமிழகத்திற்கு வந்தபொழுது இங்கிருந்த பல செப்பேடுகளைத் தத்தம் நாடுகளுக்கு எடுத்துச்சென்றர். அங்குள்ள அரசு அருங்காட்சியகங்களில் வைத்துப் பாதுக்காத்துவருகின்றர். அவ்வகையில் ஆலந்து நாட்டில் உள்ள இலெய்டன் நகரில் இராசராசன் செப்பேடுகளும், குலோத்துங்கன் செப்பேடுகளும் உள்ளன. இவை முறையே பெரிய லெய்டன் செப்பேடுகள் எனவும் சிறிய இலெய்டன் செப்பேடுகள் எனவும் பெயர்பெறுகின்றன. நாகைப்பட்டினம் அருகில் உள்ள ஆனைமங்கலம் என்ற ஊரில் இருந்து மேற்கண்ட இரண்டு செப்பேடுகளும் கிடைத்ததால் இவை ஆனைமங்கலம் செப்பேடுகள் என அழைக்கப்படுவதும் உண்டு.

**கூரம் செப்பேடுகள்**

காஞ்சிபுரம் மாவட்டம் கூரம் என்ற ஊரில் வாழ்ந்த அறங்காவலரிடமிருந்து பெறப்பட்ட செப்பேடு தற்பொழுது சென்னை அருங்காட்சியகத்தில் இருக்கிறது. கூரம் என்ற ஊரிலிருந்து கிடைத்ததால் கூரம் செப்பேடு என்பர்.

**செப்பேட்டின் அமைப்பு**

கூரம் செப்பேடு ஏழு ஏடுகளைக் கொண்டுள்ளது. இறுதி ஏடு உடைந்து காணப்பபடுகின்றது. இவ்வேடுகளைக் கோர்க்கும் வளையத்தின் புட்டு வட்ட வடிவமாக அமைக்கப்பட்டுள்ளது. வளையத்திலுள்ள முத்திரையில் இடபமும், பிறைச்சந்திரனும், சிவலிங்கமும் காணப்படுகின்றன.

வடமொழி, தமிழ் என்ற இருமொழிச் செப்பேடாகக் கூரம் செப்பேடு அமைந்துள்ளது. 95 வரிகளில் எழுதப்பட்டுள்ள இச்செப்பேடுகளில் முதல் 57 வரிகள்

26 வடமொழிச் சுலோகங்களைக் கொண்டுள்ளது.எஞ்சிய பகுதிகள் தமிழில் எழுதப்பட்டுள்ளன. செப்பேட்டின் முதலில் உள்ள வடமொழிப்பகுதி 'ஸ்வஸ்திஸ்ரீ' என்று தொடங்குகிறது. செப்பேட்டின் தமிழ்ப்பகுதியை அடுத்து இறுதியாக அமைக்கப்பெற்றுள்ள வடமொழிச் சுலோகம் 'பூமி தானத்திலும் உயர்ந்த தானம் இருந்ததுமில்லை. இருக்கப் போவதுமில்லை'என்று கூறுகிறது.பல்லவர்களின் வரலாற்றைச் செப்பேட்டின் வடமொழிப் பகுதி குறிப்பிடுகின்றது.

**அரசனும் காலமும்**

கூரம் செப்பேடு முதலாம் பரமேசுவர வர்மன் காலத்தில் வெளியிடப்பட்டது. இவன் காலம் கி.பி.670- 685 ஆகும். செப்பேடு வெட்டப்பட்ட காலம் கி.பி.675 ஆகும். (ஏழாம் நூற்றாண்டாகும்).

**கூரம் செப்பேட்டால் அறியலாகும் செய்திகள்**

பல்லவ மன்னன் பரமேசுவர வர்மனின் கூரம் செப்பேடுகளின் தமிழ்ப்பகுதியில் இம்மன்ன்ன் செய்த அறச்செயல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. கூரம் என்ற ஊரிலிமு, பரமேசுவரமங்கலம் என்ற ஊரிலும் இம்மன்ன்னின் அறச்செயல்கள் இந்தச் செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது. பரமேசுவர வர்மன் வருணாசிரத் தருமங்களை செம்மையாக கடைப்பிடித்தான் என்று கூரம் செப்பேட்டின் 17 ஆம் அடி குறிப்பிடுகின்றது. கோயில் திருப்பணி பற்றி முதன்முதல் கூரம் செப்பேடுதான் செய்திகளைத் தருகின்றது.

ஊற்றுக்காட்டுக் கோட்டத்திலுள்ள நீர்வேளூர் நாட்டைச் சேர்ந்த கூரம் ,அம்மணப்பாக்கம் (அம்மனப்பாக்கம்) ஆகிய நிலப்பகுதிகள் வித்யாவிநீத பல்லவனாகிய பரமேஸ்வரனால் விலைபொருள் கையில் கொடுத்துத்(விலை காணங் கையில் கொடுத்து) தனக்கு உரியதாக ஆவணம் செய்யப்பெற்றது.

திருக்கோயில் எடுப்பதற்காகச் செங்கல் சுட ஊர்வெளியில் அமைந்த நிலப்பரப்பிலுள்ள சூளைமேட்டுப்பட்டி என்னும் நிலமும், கூரத்தின் உள்ளே மண்டபம் எடுப்பதற்கு நிலமும் வழங்கப்படன. இவ்விரு நிலங்களும் 5 1?2 பட்டி பரப்புடையது.

இங்கு,

1.வித்தியா விநீத பல்லவ பரமேசுவர கிருகம் என்னும் சிவாலயம் எடுக்கப்பெற்றது. (இக்கோயில்தான் தமிழகத்தில் எடுக்கப்பெற்ற முதல் கற்கோயிலாகும்).

2.கூரத்தில் பெரிய மண்டபம் எடுக்கப்பெற்றது. இதில் பாரதம் வாசிக்க ஏற்பாடு செய்யப்பெற்றது.

3.பரமேசுவர தடாகம் என்னும் ஏரி தோண்டப்பெற்றது.

4.தன்னால் எடுப்பிக்கப்பெற்ற சிவாலயத்தில் வழிபாடு செய்வார்க்கு வீடும் தோட்டமும் வகுக்கப்பெற்றன.

5.எஞ்சிய நிலம் கூரத்து இறைவனின் அமுது படையலுக்கு விளைநிலமாகக் கொடுக்கப்பட்டது.

வித்தியா விநீத பல்லவ பரமேசுவர கிருகம் என்னும் இச்சிவாலயத்திற்குள் வேண்டிய நாள் வழிபாடு, திருப்பணிகள் செய்வதற்கும், நான்கு வேதங்களில் வல்ல அந்தணர்க்குப் பரம்மதேயமாகத் தருவதற்கும் மணவில் கோட்டத்துப் பன்மா நாட்டில் பரமேசுவரமங்கலம் என்னும் விளைநிலம் தரப்பெற்றது. இந்த நிலம் 25 பங்குகளாகப் பிரிக்கப்பெற்றுள்ளது.

**பங்கு விவரம்**

கூரத்துச்செப்பேட்டில் உரத்து இறைவனுக்கு நாள் வழிபாடு, திருப்பணி (தேவகருமம், நவகருமம்) செய்ய பங்கு மூன்று.

கூரம் மண்டபத்தில் தண்ணீர் வைக்க, விளக்கு ஏற்ற பங்கு ஒன்று.

இம்மண்டபத்தில் பாரதம் வாசிப்பதற்கு பங்கு ஒன்று.வேதம் வல்ல அந்தணர்கள் இருபது பேர்க்கும் பங்கு இருபது; ஆக இருபத்து ஐந்து பங்குகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

**வரி விதிப்பு**

இவ்வூருக்கு உரிய வீட்டுவரி(மனை) முதலிய வரிகளை இபங்கு விகிதப்படி பிரித்துக்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பரமேசுவரத் தடாகம்**

பரமேசுவர மங்கலத்தில் தன்னால் எடுக்கப்பெற்ற பரமேசுவரத் தடாகம் என்னும் ஊருக்குப் பாலாற்றிலிருந்து நீர் வருவதற்கு வெட்டப்பெற்ற 'பெரும்பிடுகு வாய்க்கால்' சேர்ந்த புஉதிப்பாடு, நீர் செல்லும் வழியிலுள்ள தலைவாய்,ஊற்றுக்கால் தோன்றிய இடம் முதலியன இவ்வூரைச் சார்ந்ததாகும்.

கூரம் செப்பேட்டில் பல்லவ நாட்டின் நாட்டுப்பிரவுகளான கோட்டம்,நாடு பற்றிய செய்திகளை அறியமுடிகின்றது. நிலத்தின் நான்கு எல்லைகளைத் தெளிவாகக் குறிப்பிடும் பழக்கம் அந்நாளில் இருந்துள்ளமையை அறியமுடிகன்றது. அந்நாளில் வசூலிக்கப்பெற்ற பலவகையான வரிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

மன்னன் அந்நாளில் கோயில் கட்டவும் பாரதம் படிக்கவும் ஆவன செய்துள்ளதை அறியமுடிகின்றது.பல்லவர்களின் இந்தச் செயல்பாடுகள் பிற்காலத்தில் தஞ்சையை ஆண்ட இராச ராச சோழன், கங்கைகொண்ட சோழபுரத்தை ஆண்ட இராசேந்திர சோழன் உள்ளிட்ட அரசர்கள் பல்வேறு திருப்பணிகள் செய்ய முன்னுதாரணமாக விளங்கியிருக்கின்றது.

**வேள்விக்குடிச் செப்பேடுகள்**

பாண்டிய மன்னர்கள் வெளியிட்ட செப்பேடுகளில் வேள்விக்குடி செப்பேடுகள் பழைமை வாய்ந்தவையாகும். பாண்டிய மன்னர்களின் வரலாற்றை அறிவதற்கு உதவுவன வேள்விக்குடிச்செப்பேடாகும். இடைக்காலப் பாண்டிய மன்னர்களில் ஏழு மன்னர்களின் பெயரினை இந்தச் செப்பேட்டில் காண்கின்றோம். இச்செப்பேட்டில் சங்க காலப்பாண்டிய மன்னன் பெருவழுதி பார்ப்பனர்களுக்குத் தானம் வழங்கி ஆவணம் வழங்கிய விவரம் கூறுகின்றது. இந்த ஆவணத்தைக் காட்டியே சற்சிங்கன் மீண்டும் வேள்விக்குடி செப்பேடு பெற்றுள்ளான். வேள்விக்குடி செப்பேடு வழங்கப்பட்ட காலம் கி.பி.768 இல் என்று வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இது இருமொழியில் அமைந்த ஆவணமாகும்.

வேள்விக்குடிச்செப்பேடுகள் இலண்டன் பிரிட்டிஷ் பொருட்காட்சி சாலையில் வைக்கப்பெற்றுள்ளது.

வேள்விக்குடிச்செப்பேட்டுத் தொகுதி பத்து ஏடுகளைக் கொண்டுள்ளது. முதல் ஏடு கடைசி ஏடும் முறையே முன்புறத்திலும் பின்புறத்திலும் எழுதப்படவில்லை. மொத்தம் 18 பக்கஙளில் 155 வரிகளைக் கொண்டதாக உள்ளது. தமிழ்ப்பகுதி 31 ஆம் வரியிலிருந்து தொடங்குகிறது. கொல்யானை என்று தமிழ்ப்பகுதி தொடங்குகிறது.

மங்கலச்சொல் இல்லை. முதல் ஏழு ஏடுகளின் பின்புறத்தில் இடது பக்க விளிம்புகளில் வரிசையாக ஒன்று முதல் ஏழு வரை தமிழ் எண்கள் இடப்பட்டுள்ளன. இறுதி மூன்று ஏடுகளில் எண்கள் இடப்பெறவில்லை. வளையத்தில் கோர்க்கப்படுதற்காகத் தலைப்பில் இடது புறமாகத் துளையிடப்பட்டுள்ளன.

இச்செப்பேட்டின் முதற் பகுதி சமற்கிருதமாகும். கிரந்த எழுத்துப் பயன்படுத்யூவ் பட்டுள்ளது. வேள்விக்குடிச்செப்பேட்டில் இரண்டாம் பகுதி தமிழ்ப்பகுதியாக அமைந்து வட்டெழுத்தாக அமைந்துள்ளளது. தமிழ்ப்பகுதியில் வரும் சமற்கிருதச்சொற்கள் கிரந்த எழுத்திலேயே எழுதப்பட்டுள்ளது. இருமொழி அறிவு பெற்றவர்களால்தான் இவ்வாறு எழுதமுடியும்.

வேள்விக்குடிச் செப்பேட்டுத்தொகுதியில் வேள்விக்குடி என்று ஊர்ப்பெயர் பதிவாகியுள்ளது.

பாண்டிய நாட்டைக் களப்பிரர்கள் கவர்ந்துகொண்டதையும் அவர்களைக் கடுங்கோன் என்னும் அரசன் வென்று மீண்டும் பாண்டியர் ஆட்சியை நிறுவினான் எனவும், கடுங்கோன் வழியில் வந்த ஏழாவது அரசன் காலத்தில் இச்செப்பேடுகள் வழங்கப்பட்டதையும் இச்செப்பேட்டால் அறியமுடிகின்றது. இச்செப்பேட்டை வழங்கியவன் நெடுஞ்சடையன் பராந்தகன் ஆவான்.

முதுகுடுமி பெருவழுதி காலத்தில் பல்யாகங்களை நிகழ்த்திய கொற்கைக்கிழான் நற்கொற்றன் என்னும் வேத விற்பன்னருக்கு வேள்விக்குடி என்ற ஊரை முதுகுடுமிப் பெருவழுதி வழங்கினான். பெருவழுதியிடம் தானம் பெற்ற கொற்கைக்கிழான் மரபினரர் நீண்டகாலம் தான நிலத்தை அனுபவித்து வந்தனர்.பின் களப்பிரர் ஆட்சிக்காலத்தில் தானத்தை இழந்தனர். பிற்கலாத்தில் பட்டத்திற்கு வந்த நெடுஞ்சடையனிடம் கொற்கைக்கிழான் மரபில் வந்த கொற்கைக்கிழான் காமக்காணி நற்சிங்கன் என்பவன் முறையிட,நன்று நன்று என்று மன்னன் முறுவலித்து, நாட்டானின் பழமையாதல் காட்டி நீ பெறுக என்று கூற, அவனும் பழைமையாதல் காட்ட, அப்போதே முன்னோர் தந்த தானத்தை மன்னன் நீரோடு அட்டிக்கொடுத்தான். தானம்பெற்ற கொற்கைக் கிழான் காமக்காணி சுவரஞ்சிங்கன் வேள்விக்குடியில் $1/3$ பாகம் தனக்கு வைத்துக்கொண்டு எஞ்சிய இருபாகத்தை ஐம்பது பார்ப்பனர்களுக்குத் நானமாக நீர்வார்த்துக்கொடுத்தான்.

**வேள்விக்குடி செப்பேட்டின் சில பகுதிகள்**

கொல்யானை பலவோட்டிக் கூடாமன்னர் குழாம் தவிர்த்த பல்யாக முதுகுடுமிப் பெருவழுதியெனும் பாண்டியாதிராசனால் நாகமா மலர்ச்சோலை நளிச்சினைமிசை வண்டலம்பும் பாகனூர்க் கூற்றமென்னும் பழனக்கிடக்கை நீர்நாட்டுச் சொற்கணாளர்

சொலப்பட்ட சுருதி மார்க்கம் பிழையாத கொற்கைகிழான் நற்கொற்றன் கொண்ட வேள்வி முற்றுவிக்கக் கேள்வியந்த ணாளர் முன்பு கேட்கவென் றெடுத்துரைத்து வேள்விச்சாலை முன்புநின்று வேள்விக்குடியென்றப் பதியைச் சீரோடு திருவளர்ச் செய்தார் வேந்தனப்பொழுதே நீரோட்டிக் கொடுத்தமையால் நீடுபுத்தி துய்த்தபின்...

**பொருள்:**

(பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்ற பாண்டிய மன்னன் அரசாண்ட காலத்தில் பாகனூர் க்கூற்றம் என்னும் நீர்நாட்டில் கொற்கைக்கிழான் நற்கொற்றன் என்ற அந்தணன் இருந்தான். அவன் வேத நெறி பிறழாதவன். அவன் ஒரு வேள்வியை நடத்தினான். அரசன் வேள்விக்குச் சென்றான். வேள்வி நடந்த அந்த ஊருக்கு வேள்விக்குடி என்று பெயரிட்டான். அரசன் வேள்விக்குடியை முற்றுவித்த

அந்தணனாகிய நற்கொற்றனுக்கு நீர்வார்த்துக்கொடுத்தான்.நற்கொற்றனும் அவன் வழியினரும் அவ்வூரின் செல்வ வளங்களை நெடுங்காலம் அனுபவித்தனர்).

**வேள்விக்குடி செப்பேட்டால் அறியாலாகும் முதுகுடுமி வழியினர்**

- பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி
  (வேள்விக்குடியை நற்கொற்றனுக்கு வழங்கியவன்)

(களப்பிரர் ஆட்சி)

- கடுங்கோன்
  (களப்பிரர் ஆட்சியை நீக்கிப் பாண்டியர் ஆட்சியை மீண்டும் நிறுவியவன்)
- மாறவர்மன்
  (அவனிசூளாமணி)
- சேந்தன்
  (செழியன் சேந்தன்)
- ஸ்ரீமாறவர்மன்
- கோச்சடையன்
- மான்தேர்மாறன்
- நெடுஞ்சடையன்

**சின்னமனூர்ச் செப்பேடுகள்**

**சின்னமனூர் சிறிய செப்பேடுகள்**

மதுரை மாவட்டம் பெரியகுளம் வட்டத்தில் உள்ள சின்னமனூர்ப் பெருமாள் கோயிலில் மடைப்பள்ளி கட்டுவதற்காக்க் கடைக்கால் தோண்டியபொழுது சில செப்பேடுகள் கிடைத்தன. அவற்றுள் மூன்று ஏடுகள் கொண்ட சிறிய தொகுதிகள் சின்னமூர்ச் சிறிய செப்பேடுகள் எனப்படுகிறது. சீவல்துரையின் பழம்பொருட்களின் பட்டியல் என்ற நூறில் இச்செப்பேடு தொகுதி குறிப்பிடப்படுகின்றது.

முதல் இரண்டு ஏடுகளுக்குப் பின் நடுவில் ஒரு ஏடோ,இரண்டு ஏடுகளோ இல்லை என்றும் அதில் அரசர்களின் பெயர் இருந்திருக்க வேண்டும் என்றும் அறிஞர் தி.நா.சுப்பிரமணியம் கருதுகின்றார்மேற்கோள் தமிழ் நாட்டுச் செபேடுகள், ச.கிருஷ்ணமூர்த்தி) ஏடுகள் 9 அங்குலம் நீளம்; 3 அங்குலம் அகலம்;

**சின்னமனூர் பெரிய செப்பேடுகள்**

சின்னமனூரில் கிடைத்த மற்றொரு தொகுதிச்செப்பேட்டைச் சின்னமனூர் பெரிய செப்பேடுகள் என்று குறிப்பிடுவர். இத்தொகுதியில் முதல் ஏடும் இறுதி ஏடும் காணப்படவில்லை. செப்பேடுகளின் இடப்புறத்தில் வளையம் சேர்த்துக் கட்டுவதற்கான துளைகள் உள்ளன. எண்கள் இரண்டு முதல் எட்டு வரை உள்ளன. முதல் நான்கு ஏடுகள் வடமொழிப் பகுதிகளைக் கொண்டது.இறுதி நான்கு ஏடுகள் தமிழ்ப்பகுதிகள் கொண்டது.

**புராணச் செய்திகள்**

பாண்டியரின் குலப்பெருமைகள் பேசுவனவாக இந்தச் செப்பேடுகள் உள்ளன. அகத்தியர் பாண்டியருக்குக் குருவாக இருந்தமை, தேவாசுரப் போரில் தேவர்களுக்குப் பாண்டியர்கள் துணையாக இருந்தமை, தேவர்களுக்காக இராவணனிடம்

சமரசம் செய்ய ஒரு பாண்டியன் சென்றது,கடலைக் கடந்தது; கடல் தெய்வத்திற்கு விழா எடுத்தது போன்ற பல செய்திகள் இந்தச் செப்பேட்டில் உள்ளன.தமிழ்ப்பகுதியில் தாங்கமுடியாத பாரத்தையுடைய 'பொன்னாபரணத்தைத் தாங்கியும் சிவந்த மணிகள் பதித்த அணிகலன் அணிவித்தும்' என்று வருகிறது. இராச சூயம்,மற்றும் அசுவமேத யாகம் செய்து தெய்வத் தன்மையைப் பாண்டியர் எய்தியதையும் அறியமுடிகின்றது. பாண்டியர் மரபில் வந்த ஒருவன் குருவைக் காப்பாற்ற தன் தலையை அறுத்துக்கொண்ட செயலையும் அறியமுடிகின்றது. பல் கலைக்களைக் கற்ற சுந்தரபாண்டியன் பாண்டியர் மரபில் தோன்றியவன் என்ற செய்தியும் இச்செப்பேட்டில் உள்ளதுழ

**பாண்டியர் மரபு**

பாண்டிய வமிசத்தில் தோன்றிய பல மன்னர்களை இச்செப்பேடு கூறுகின்றது.அரிகேசரி என்ற மன்னனும் அவனையடுத்து சடிலன், இராசசிம்மன், முதலாம் வரகுணன், ஸ்ரீ மாறன் ஸ்ரீ வல்லபன், இரண்டாம் வரகுணபாண்டியன், பராந்தகன் வீரநாராயணன், இராசசிம்மன் ஆகியோர் கூறப்படுகின்றனர். இராசசிம்ம பாண்டியன் என்பவனே இச்செப்பேடுகளை வழங்கியவன் ஆவான். இவன் இரவலர்களுக்கு இனியவன். பிருகஸ்பதி போன்ற குணமுடையவன். எதிரிகளுக்கு இன்னல் தருபவன். 'இவன் பரதன் போன்று பூவுலகை ஆள்வதாக' என்று சாசனம் கூறுகின்றது.

**சின்னமனூர் செப்பேட்டின் மொழியழகு**

சின்னமனூர் செப்பேட்டில் அழகிய தமிழ்த்தொடர்கள் காணப்படுகின்றன.'உளமிக்க மதியதனால் ஒண்தமிழும் வடமொழியும் பழுதறத்தான் ஆராய்ந்து பண்டிதரின் மேம்பட்டு'பாண்டியர் விளங்கினர் என்று செப்பேடு கூறுகிறது.

'தலையாலங்கானத்திற் தனதொக்கும் இரு வேந்தரைக் கொலைவாளிற் தலைதுமித்து குறைத்தலையின் கூத்தொழித்தும்' என்னும் வரிகள் மூலம் சங்க காலப்போரை இச்செப்பேடு நினைவூட்டுகிறது. தலையாலங்கானத்துப் போர் கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் நடந்ததாக அறிஞர்கள் குறிப்பிடுவது உண்டு. தலையாலங்கானப் போரில் சேர சோழரையும் குறுநில மன்னர் ஐவரையும் இப்பாண்டியன் வென்றான்.

நெடுஞ்செழியனைக் கூறிய பின், செப்பேடு 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரி சங்கம் வைத்தும்' என்ற தொடரைக் குறிப்பிடுகின்றது. தமிழ் இலக்கிய வரலாற்றிலும், வரலாற்றுத் துறையிலும் மிகுதியாகப் பயன்படுத்தப்படும் இத்தொடர் மதுரையில் சங்கம் இருந்தமையை நிலை நிறுத்துவதுடன், பாரதத்தைத் தமிழ்ப்படுத்திய செய்தியைக் குறிப்பிடுகின்றது. மகாபாரதம் என்ற சொல் வடமொழி கிரந்தத்தில் உள்ளது.மாபாரதம் என்று தமிழில் உள்ளது கண்டு அறிஞர்கள் வியக்கின்றனர்.

**சின்னமனூர் செப்பேட்டின் தான விவரம்**

'இராசசிம்மன் பெருங்குளக்கீழ் என்னும் நாட்டுச் சூழல் என்னும் ஊரில் தங்கியிருந்தபோது பராந்தகன் என்பவனுக்கு அழல்நாட்டு நற்செய்கைப்புதூர் என்ற ஊரைத் தம் பெயரில் மாற்றி மந்திரகௌரமங்கலம் என்று வழங்குகிறான்.கௌசிக கோத்திரத்தில் ஆக்நிவேச்ய கல்பத்தில் ஓம்பாழ்வரில் மிக்கோனும் புகழ் வாய்ந்தவனுமான செட்டி என்பானது சிறந்த மகன் தானம் பெறுகிறான்....' என்று செப்பேட்டுப் பகுதி விரிவாக உள்ளது.

வடமொழிப் பகுதியில் தானம் பெறுபவனின் பரம்பரை மிகச்சிறப்பாகப் புகழப்பெற்றுள்ளது.தமிழ்ப்பகுதியில் சுருக்கமாக உள்ளது.இறுதி ஏடு இல்லாததால் நில எல்லை அறியமுடியவில்லை.

**திருமலை நாயக்கர் செப்பேடுகள்**

மதுரையைத் தலைநாகராகக்கொண்டு ஆட்சி செய்த நாயக்கர் மன்னர்களுள் திருமலைநாயக்கர் குறிப்பிடத்தகுந்தவர். இவர் ஆட்சிக் காலம் கி.பி.1623 முதல் 1659 வரையாகும். கலையுணர்வு நிறைந்த இவர் தமிழ் மாமுனிவர் குமரகுருபர அடிகளாரை ஆதரித்த பெருமைக்குரியவர். மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் இவர் அவையில் அரங்கேறியது என்பர்.

திருமலை யாக்கர் மிகச்சிறப்பாக ஆட்சிய செய்ததுடன் கோயில்கள் பலவற்றுக்குத் திருப்பணிகள் செய்தவர்.விழாக்கள் தொடர்ந்து நடக்க உதவியவர்.மத வேறுபாடு பாராது சைவம், வைணவம் சமயங்களைப் போற்றியவர்.கிறித்தவப் பெரும்மகள் பலர் இவரிடம் அன்பு பாராட்டி வாழ்ந்தனர்.

திருமலை நாயக்கர் காலத்திய செப்பேடுகள் 25 ஐத் தமிழ்நாட்டு அரசின் தொல்பொருள் ஆய்வுத்துறை பதிப்பித்துள்ளது (1994).

**திருமலை நாயக்கர செப்பேடுகளின் அமைப்பு**

திருமலை நாயக்கர் செப்பேடுகளை நோக்கினால் இவற்றில் ஒரு ஒழுங்குமுறை உள்ளதை அறியலாம். உயரம் அதிகமாகவும், அகலம் குறைவாகவும் மெல்லிய தகடுகளாகவும் இச்செப்பேடுகள் உள்ளன.

**திருமலை மன்னன் செப்பேடுகளில் காலக்குறிப்புகள்**

திருமலை மன்னனுடைய சில செப்பேடுகளில் சகாப்தம், தமிழாண்டு, மாதம், தேதி, பட்சம், திதி, கிழமை, யோகம், கரணம், வேளை, ஓரம், நட்சத்திரம் போன்ற எல்லாக் காலக்குறிப்புகளும் உளன. மேற்படி செப்பேடுகளைக் கிறித்தவ ஆண்டுக்கு மாற்றித் துல்லியமாக கணிக்க முடியும். ஒரு சிலவற்றில் சக ஆண்டும் கலியுக ஆண்டும் கூறப்பட்டுள்ளன.

**நோக்கங்கள்**

திருமல நாயக்கர் பல்வேறு நோக்கங்களுக்குப் பட்டயங்களை வழங்கியுள்ளான்.நாட்டில் புகுந்து தீங்கிழைத்த புலியைக் கொன்ற வீரனுக்கும் நாயக்கருக்கும் படைகளுக்கும் விருந்து வழங்கியவர்களுக்கும், பல்லக்கில் தூக்கிச்சென்ற போயர்களுக்கும் கோயில்களுக்கும், பிராம்ணர்களுக்கும், நாட்டாண்மைக்காரர்களுக்கும் எனப் பல நோக்கங்களுக்காகத் திருமலை நாயக்கர் செப்பேடுகளை வழங்கியுள்ளார்.

வழக்கு நடைபெற்றபொழுது வழக்குத் தொடுத்தவர் யார்? என்பதும் வழக்கின் விவரமும் எடுத்துச்சொல்லப்பெற்று, இறுதியில் அரசரின் தீர்ப்பும் செப்பேட்டில் எழுதப்பட்டுள்ளது.

செப்பேட்டு வாசகத்தை எழுதியவர் பெயரும் செப்பேட்டில் பொறித்தவர் பெயரும் பல செப்பேடுகளில் உள்ளன. பெரும்பாலான செப்பேடுகளில் பொறித்தவர் ஆசாரிகளாக உள்ளனர்.

செப்பேடுகள் நாயக்கரின் திருவுளப்படி, விடைகொடுத்தபடி, உத்தரவுப்படி, என்று இருப்பதால் திருமலையின் ஆணைப்படி இவை வழங்கப்படிருக்கலாம்.

**புலியிடமிருந்து திருமலையைக் காத்தவனுக்குப் பரிசில்**

திருமலை நாயக்கர் மதுரையருகே நாகமலையடிவாரத்தில் அரங்கசாமி என்ற அரண்மனைக் காவலனுடன் வேட்டையாடியபொழுது அவரையறியாமல் அவர் மேல் பாய ஒரு வேங்கை முயன்றது. அரங்கசாமி கல்வெடியால் ரெட்டைக்குண்டு போட்டு வேங்கையை வீழ்த்தினான். மன்னர் மகிழ்ந்து தம் கழுத்தில் அணிந்திருந்த கொத்துச்சரத்தினை அவனுக்கு வழங்கி விருந்தும் கொடுத்தார். வீரன் விரும்பியபடியே வாகைக்குளம் என்ற ஊருக்கு நாட்டாண்மையாக ஆக்கினார். இதனைச் சிந்து மேட்டுப்பட்டிச் செப்பேடு குறிப்பிடுகின்றது. 22.5 செ.மீ.நீளமும், 13 செ.மீட்டர் அகலமும் கொண்ட இச்செப்பேடு 19.05.1654 இல் பொறிக்கப்பட்டுள்ளது. செப்பேடு மதுரை நாயக்கர் மகாலில் பாதுகாக்கப்படுகின்றது.

**பல்லக்குத் தூக்கிகளுக்கு மீன்படிக்க உரிமை**

திருமலை நாயக்கர் பணியின்பொருட்டுத் திருச்சி செல்ல வேண்டியிருந்தது.அவரைத் தூக்கிச்செல்லும் நிலையில் அவருடைய பல்லக்குத் தூக்கிகள் இல்லை. அம்மை நாயக்கனூர்ப் பல்லக்குத் தூக்கிகள் தாங்கள் தூக்கிச் செல்வதாகக் கூறி அவ்வாறே தூக்கி வந்தனர். மன்னர் அவர்களுக்கு நிலங்கள் வழங்கினார். ஆனால் குறிப்பிட்ட பகுதி நீர்நிலைகளில் மீன்படிக்க இவர்கள் உரிமை பெற்றுக்கொண்டனர். இவர்கள் போயர்கள் ஆவார்கள். மன்னனை இவர்கள் சாமி என்று அழைக்கின்றனர். அழகபோயன், கம்பய போயன் என்ற இருவர் பெயர்கள் செப்பேட்டில் உள்ளன.

**கோயிலில் களவு போன பொருட்களை மீட்டவருக்கு வெகுமதி**

அழகர்கோயில் சன்னிதியல் வேடர்கள் நுழைந்து கோயிலுக்கு உரிய தங்க நகைகள், வெள்ளிப்பாத்திரங்கள், மற்றும் திருவாபரணங்களைக் களவாடிச்சென்றனர். இதனைக் கோயில் தலத்தார் மன்னர் இதிருமலையிடம் விண்ணப்பித்தனர். மன்னர் திருமலை வெள்ளியங்குன்றம் பாளையக்காரர் இம்முடி கனகராமயக் கவுண்டரிடம் களவுபோன பொருட்களை மீட்டுத் தருமாறு கட்டளையிட்டார்.

கவுண்டர் கள்வர்களைக் கண்டுபிடித்து அவர்களிடமிருந்த கோயில் நகைகளை மீட்டதுடன் திருடர்களின் தலைகளையும் வெட்டி நாயக்கர் முன் பொதியாகக் கொண்டு சென்று வைத்தார். திருமலை நாயக்கர் மகிழ்ந்து விசுவநாத நாயக்கர் காலத்தில் அளிக்கப்பட்ட பாளையப்பட்டு கிராமங்களுக்குக் கொடுக்கவேண்டிய காணி, கப்பம், முதலியவற்றை நீக்கியதுடன் கோயிலில் நடைபெறும் சித்திரைத் திருவிழா, ஆடித்திருவிழா, திருங்கையாழ்வார் விழா ஆகியவற்றில் இவருக்கும் இவர் சுற்றத்துக்கும் முதல் மரியாதைதரும்படி ஆணையிட்டு அதனைச் செப்பேடாகவும் வழங்கினார்.

**தண்ணீர்ப்பந்தல் மானியம்**

திருமலை மன்னன் குமரக்கோயில் உள்ள இடத்தில் தங்கியிருந்தபொழுது திருத்தேவன், பேய்த்தேவன் ஆகியோர் மன்னனுக்குப் பாதகாணிக்கையாகப் பணம், அரிசி, ஆடு, பசு போன்றவற்றுடன் தங்கம் வெள்ளியில் மலர்களையும் செலுத்தி வணங்கினர். பிறகு அவர்கள் விரும்பியபடி கோவலன் கணவாய் அருகில் அமைந்திருந்த விநாயகர் கோயில், சுமை தாங்கிக்கல், கிணறு மற்றும் தண்ணீர் பந்தல் ஆகியவற்றுக்கு மன்னர் மானியம் வழங்கி உள்ளார். மேலே கண்ட சுமை தாங்கிக்கல், கோயில், கிணறு, தண்ணீர்பந்தல் யாவும் சிதைந்த நிலையில் இன்றும் உள்ளன.

**தஞ்சை மராட்டியர் செப்பேடுகள்**

தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு மராட்டியர்கள் சற்றொப்ப 180 ஆண்டுகள் ஆட்சி செய்துள்ளனர். 13 அரசர்கள் இம்மரபில் ஆட்சி செய்துள்ளனர். இவர்களின் வரலாற்றை அறிய மோடி ஆவணங்களும் (மராட்டியமொழியின் சுருக்கெழுத்து மோடியாகும்),கல்வெட்டுகளும், செப்பேடுகளும் உதவுகின்றன. மொத்தம் 60 செப்பேடுகள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. புலவர் செ.இராசு அவர்கள் மராட்டியல் காலச்செப்பேடுகளையும் கல்வெட்டுகளையும் கண்டுபிடித்து நூலாக்கியுள்ளார்.

மராட்டியர் காலத்திய செப்பேடுகளாக் தமிழ்ச்செப்பேடுகள் 43; மராத்தி மோடி செப்பேடுகள் 12; மராத்தி நாகரி செப்பேடுகள் 2; வடமொழிச்செப்பேடுகள் 5 என்று பட்டியலிடப்படுகின்றன.

மராட்டியர் காலச் செப்பேடுகள் செவ்வக வடிவில் பெரும்பாலும் இரண்டு பக்கங்களில் எழுதப்பட்டுள்ளன.இவர்களுடைய செப்பேடுகளில் வெற்றி,கொடைச்சிறப்புகளைக் கூறும் பிரசஸ்தி கிடையாது.ஆட்சியாண்டும் கூறப்படுவதில்லை.தமிழில் உள்ளள செப்பேடுகளில் தொடர்புடைய கோயில்களின் இறையுருவங்கள் வரைகோட்டு ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன.

**நாட்டுப் பிரிவுகள்**

மராட்டியர்கள் நிருவாக வசதிக்காக நாட்டைப் பல வகையில் பிரித்து ஆட்சி செய்துள்ளனர். ஐந்து சுபாக்களாகப் பிரிக்கப்பட்டன. நாடு, மண்டலம், சீமை, வட்டம், மாகாணம், பத்து, கரை எனப் பல பகுதிகள் செப்பேடுகளில் உள்ளன. தனியூர் சிலவும் செப்பேடுகளில் இருந்தன. வளநாடு, கூற்றம் என்ற பிரிவுகளும்சாவடியும் இருந்துள்ளன. அக்கிரகாரங்கள் அசேஷ வித்வமகாசனங்கள் என்ற பிராமணர் வாழிடங்களாக இருந்தன. மராத்தியர்கள் சிவனைப் பெரிதும் வழிபட்டனர்.மற்ற சமயத்தாரையும் ஆதரித்துள்ளனர்.

**மராத்திய அலுவலர்கள்**

மராத்தியர் ஆட்சியில் இருந்த அரசு அலுவலர்களின் பெயர்களைப் பல செப்பேடுகளில் காண்கின்றோம். அட்டவணை, அமீனா, ஆயம், ஏஜெண்டு, கணக்கு, காறுபாறு, கில்லேதார், சர்கேல், சுபேதார், தானாபதி, பண்டாரம், பெரியதனம், பேஷ்வா, மணியம், மத்திசம் போன்ற பதவிப் பெயர்களைக் காண்கின்றோம். பேழ்வா என்பது உயர் பதவியாகும்.

**நிலம் அளத்தல்**

மராட்டியர் ஆட்சியில் கொடையாக நிலம் வழங்கும்பொழுது நிலம் அளக்கப்பட்டதைத் தருமபுரச் செப்பேடு குறிப்பிடுகின்றது.இராமேசுவரம் அன்னதான தர்மசத்திரித்திற்கு 83 வேலி நிலம் பட்டுக்கோட்டைச் சீமையில் கி.பி.1735 இல் வழங்கப்பட்டுள்ளது.

மராட்டியர் ஆட்சியில் நிலம் அளக்க பல்வேறு அடிக்கோல்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. 21 அடிக்கோல், 14 அடிக்கோல், 12 அடிக்கோல், 24 அடிக்கோல்கள் பயன்பாட்டில் இருந்துள்ளதைச் செப்பேட்டில் காண்கின்றோம்.

நெல் முதலிய தானியங்கை அளந்து விற்றுள்ளனர். கலம், குறுணி, கண்டி, சேர், படி, நாழி, உரி, தூணி, மா போன்ற அளவுகள் இருந்துள்ளன.நெய் தோண்டி

என்றும் வெற்றிலை கட்டு என்றும் எண்ணெய் குடம்,காணம்,சேர் என்றுப் அளவிட்டு விற்கப்பட்டுள்ளன.

**நாணயங்கள்**

மராட்டியர் காலத்தில் நாணய உற்பத்தி சாலைகள் இச இருந்துள்ளன.நாகப்பட்டினத்தில் டச்சுக்காரருடன் ஏகோசி மன்னன் சேர்ந்து காசுகள் தயாரித்துள்ளான். கம்பட்டம் என நாணயம் தயாரிப்பு நிலையம் வழங்கப்பட்டது.அச்சுக்காசு (தங்கக்காசு, தஞ்சாவூர் சீமைக்காசு, 3 1-2 மாத்துக்காசு, பவழக்காசு, சீமைக்காசு, பணம், பொன், வராகன், இராசகோபாலச்சக்கரம் போன்றவை பயன்பாட்டில் இருந்துள்ளன.

**சிவாலயங்கள் தொடர்பான செப்பேடுகள்**

மராட்டியர் செப்பேடுகளில் துளசா மன்னன் தன்னைச் சிவாலய பூஷண அலங்காரன் என்றும் விஷ்ணு ஆலய உத்தண்டன் என்றும் கூறிக்கொள்வதைச் சென்னை அருங்காட்சியகச் செப்பேடு கூறுகின்றது.திருவாரூர்ச்செப்பேடு ஒன்றில் சிதம்பரேசுர சுவாமியாருக்கும் தில்லைக் கோவிந்தராய சுவாமியாருக்கும் ஒன்றாகக்கொடை வழங்கப்பட்டதைக் காணமுடிகின்றது. வைத்தீசுவரன் கோயில் செப்பேடு ஒன்றுதிருநீறு, திருநாமத்துக்கு உள்ளான சகலாமன பேருக்கும் இந்தத்தருமம் பொதுவானது என்று கூறுகிறது. மராத்தியருடைய செப்பேடுகளில் 45 செப்பேடுகள் சிவாலயம் தொடர்புடையவை.

**மராட்டியரும் சிதம்பரமும்**

சிதம்பரம் கோயிலுக்குரிய சில மராட்டியர் செப்பேடுகள் திருவாரூர்க் கோயிலில் உள்ளன.நான்கு செப்பேடுகள் சிவாஜியின்மகனும் செஞ்சியிஜ ஆண்டவனுமான சாம்போஜி வெளியிட்டவை ஆகும். இவை மேல்பகுதி அரைவட்டமும் கீழே சதுர வடிவமும் உள்ளன. சூலம் என்ற உருவம் நான்கிலும் உள்ளன. மூன்று செப்பேடுகள் வடமொழி கிரந்தத்துடன் தமிழ்ப் பாடல்களைக் கொண்டுள்ளன.

24.12.1648 முதல் 14.11.1686 வரை 37 ஆண்டுகள் 10 மாதங்கள் 20 நாட்கள் சிதம்பரம் ஆடல் வல்லப்பெருமான் சிதம்பரத்தில் இல்லாமல் குடுமியான்மலையிலும் மதுரையிலும் இருந்துள்ளார்.சிதம்பரம் நடராசப் பெருமானைச் சிற்றம்பல முனி என்பவர் சிதம்பர் கொண்டு வருவதற்கு உதவியுள்ளார். நடராசர் ஏன் சிதம்பரத்தை விட்டு வெளியூர்களுக்குச் சென்றார் என்பதற்குச் செப்பேட்டிஃ காரணம் குறிப்பிட்டப்படவில்லை. பிற நாட்டினரின் படையெடுப்புக்கு அஞ்சி நடராசப்பெருமான் வெளியூரில் பாதுகாக்கப்பட்டிருக்கலாம். திருப்பனந்தாள் காசி மடத்துச் செப்பேடு விசயநகர அரசர் ஆட்சியிலும் முசுலிம்களின் ஆடியிலும் சிதம்பரம் கோயில் தாக்குதலுக்கு ஆளானதைக் குறிப்பிடுகின்றது.

**சுரோத்திரியம்**

மராட்டிய மன்னர்கள் பயிரடமுடியாத நிலங்களைச் சுரோத்திரியம் என்ற பெயரில் வேதம் வல்ல பிராமணர்களுக்கு வழங்கினர். அநிலம் பெற்றவர்கள் தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றிக்கொண்டனர். சுரோத்திருயம் என்ற பெயர் சோத்திரியம் எனப்படுகின்றது.

**படேவியா அருங்காட்சியகச் செப்பேடு**

இந்தியாவிற்கு வெளியே படேவியா அருங்காட்சியகத்தில் தஞ்சை ஏகோசி அரசருக்கும் டச்சு அரசருக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தம் வள்ளிச்செப்பேடாக உள்ளது.தமிழில் அமைந்த இச்செப்பேட்டின் காலம் 30.12.1676 ஆகும்வணிகம் சார்ந்த செய்திகள் இச்செப்பேட்டில் உள்ளன.

ஏகோசி மன்னனுடைய பட்டயம் தமிழில் இருப்பினும் பிறமொழிச்சொற்கள் தமிழ் நடைக்கு ஏற்ப பேச்சு நடையில் எழுதப்பட்டுள்ளன. ஹாலந்து என்பதை உலாந்தா எனவும் கம்பெனி என்பதைக் கும்பெனி எனவும் அட்மிரல் என்பதை அமரால் எனவும் குடோன் என்பதைக் கிட்டங்கி எனவும் குறிப்பிட்டுள்ளனர். நாகப்பட்டினம் என்பது னாகப்பட்டினம் எனக் குறிப்பிட்டப்படிகின்றது. வாணிக நடையில் பட்டயம் உள்ளது.

**தேசிய அருங்காட்சியகச் செப்பேடு**

சுவாமிமலையிலுள்ள வரதாராசபெருமாள் கோயிலுக்கு வழங்கப்பட்ட இச்செப்பேடு தற்பொழுது புதுதில்லி தேசிய அருங்காட்சியகத்தில் உள்ளது. இச்செப்பேட்டின் முதல் பக்கம் கோயிலுடன் தொடர்புடைய தெய்வ உருவங்களும், பின் ஸ்வஸ்த தொடங்கி 42 வரி வரை முதல் பக்கத்தும், 43 வரி தொடங்கி109 ஆம் வரி வரை இரண்டாம் பக்கத்திலும் எழுப்பட்டுள்ளன. வரதாராசப்பெருமாள், இலக்குமி, உள்ளிட்டவர்களின் உருவங்கள் இடம்பெற்றுள்ளன.

**செப்பேடுகள் உணர்த்தும் செய்திகள்**

செப்பேடுகள் கோயில்கள்களுக்கும், பிராமணர்களுக்கும் மடங்களுக்கும், சத்திரங்களுக்கும் வழங்கிய தானங்களையே பெரும்பாலும் குறிப்பிடுகின்றன. எனினும் இரு அரசுகளின் ஒப்பந்தங்களையும், வாணிக உரிமைகளையும் நீதிமன்றத் தீர்ப்புகளையும் கற்பனை கலந்த சமயம் தொடர்பான நிகழ்வுகளையும் குறிப்பிடுகின்றன. குறிப்பிட்ட சாதியார் ஒன்றுகூடி நம்பிக்கையில் சிலருக்குப் பட்டயம் வழங்குவதுண்டு. ஓடாத தேரை ஓடவைத்த ஒருவனுக்கு வன்னியர் ஒன்றுகூடி தாம் தந்து பட்டயம் வெளியிட்டுள்ளதை ஒரு செப்பேடு குறிப்பிடுகின்றது.

ஒரு பிராமணப் பெண் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகக் கள்ளர் காரணமாக இருந்ததால் அவர்கள் கோயில் ஏற்படுத்தி வழிபாடு செய்துள்ளதற்கு ஒரு செப்பேடு சான்றாக உள்ளது.

நரபலி தருதல், முடவரை ஆதரித்தல், அனாதையை எடுத்து வளர்த்தல், கள்ளரை அழித்தல், சத்திரம் கட்டுதல், விலங்குகளைக் கொல்லுதல் எனப் பலவற்றிற்கும் பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**செப்பேட்டில் சிறுகதை**

வலையர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள், சேர்வைக்காரப் பெண்ணிற்குத் தந்த மதிப்பினை ஒரு செப்பேடு சிறுகதையைப் போல் குறிப்பிடுகின்றது. வேலந்தரவை கிராமத்தில்,மூப்பர் சாதியில் வீரமூப்பன் வாழ்ந்துவந்தார். மகன்வழிப் பேத்தியான வீராயி என்பவளை வளர்த்துவந்தார். அவள் பூப்பெய்திய பின்னர் பெற்றோரும் பாட்டனாரும் மூப்பர் சாதியில் அவளுக்கு மாப்பிள்ளை பார்க்கவில்லை.இச்சூழலில் இளநேரி நயினக்குட்டி என்ற சேர்வைக்கும் வீராயிக்கும் காதல் ஏற்பட்டது. வீராயி

கர்ப்பம் தரித்தாள். இதனையறிந்த உறவனிர், பெற்றோர் கண்டித்தனர். தண்டிக்கவும் செய்தனர். அதனால் வீராயி இறந்துவிட்டாள்.

வலையர் சமூகத்தினர் ஒன்றுகூடி நயினிக்குட்டி சேர்வைக்காரனுடன் சேதுபதி மன்னரைக் கண்டு பலிக்குப்பலி தரவேண்டும் என்று நீதிகேட்டு நின்றனர். சேதுபதி மன்னரும் நயினுக்குட்டியின் தங்கை உடையக்காளையை வலையர் சமூகத்திடம் ஒப்படைக்க ஆணையிட்டார். வீராயி பிணத்தை ஒரு சிதையில் வைத்த வலையர் உடையக் காளையை உயிருடன் ஒரு சிதையில் வைத்தனர்.பின் தீயினை இரண்டிற்கும் வைக்க முற்பட்டனர். அப்போது மூப்பர்கள் ஒன்றுகூடி உடையக்காளையைச் சிதையை விட்டு கீழே இறகிவிட்டு நம்முடைய பிள்ளைக்குப் பிள்ளை வந்தது என்று கூறி, சாதிப்பிள்ளை என்று பேரும் தந்து அப்பெண்ணிற்கு, நிரந்த வருவாய்க்கும் ஏற்படு செய்தனர்.வலையர் திருமணத்தின்போது ஏழு பணமும் ஒரு குறுணி அரிசியும் சடங்குக்கு 3 பணமும் 3 படி அரிசியும் கட்டுதாலிக்கு 5 பணமும் 3 படி அரிசியும் வெற்றிலை பாக்ககுடன் தருவதென்று முடிவுசெய்தனர்.மேலும் ஆண்டுதோறும் வலையர் சமூகத்தினர் குடி ஒன்றுக்கு 2 பணமும் 3 படி தானியமும் தருவதென்று ஒப்புக்கொள்கின்றனர். கைம்பெண்ணுக்கு மட்டும் 1 பணமும் 1 படி தானியமும் நிர்ணயிக்கப்பட்டது.

25 ஊர்களைச் சேர்ந்த வலையக்காரர்கள் ஒப்பந்தத்தில்கையெழுத்திட்டு, செப்பேடும் வழங்கி உள்ளனர்.15.05.1691 இல் இராமநாதபுசேதுபதி ஆட்சியின்பொழுது வெளியிடப்பட்ட செப்பேடு தற்பொழுதும் அரண்மனையில் உள்ளது.

**கோயில் புதுப்பித்தல்**

மன்னர்கள் புதிய கோயில்கள் கட்டியதுடன் பழைய கோயில்களைப் புதுப்பித்து மக்கள் வழிபாட்டுக்குத் தந்ததுள்ளனர். இவ்வாறு அரசர்கள் உதவுவதுடன் சமூகத்தலைவர்களும் இப்பணியில் முன்னின்றுள்ளனர். ஒரு சோழ அரசனுக்கு நோய் வருகிறது.கொங்கு நாட்டுத்தலங்களைப் புதுப்பிக்க அந்நோய் நீங்கும் என அறிந்து நாட்டுத்தலைவர்களான சமய முதலிகள் கஸ்தூரி ரங்கப்ப செட்டி, சடையப்ப வள்ளலை அழைத்துக்கொண்டு கொங்கு தேசத்திற்குச் சோழ மன்னனுடன் செல்கின்றனர். பல சிவாலயங்கள் புதுப்பிக்கப்பட்டன. ஊர்த் தேவதைகளுக்குக் கோயில்கள் கட்டி மானியமும் சோழ மன்னன் வழங்கினான் என்று சோழன் பூர்வ பட்டயம் கூறுகின்றது.

**சோழர் செப்பேடுகள்**

விசயாலயசோழனுக்குப் பின் ஆதித்த சோழன், சோழ மன்னனான்.இவன் காவிரிக் கரையின் இரு மருங்கிலும் சிவாலயங்களை எடுப்பித்தான் என்று அன்பில் செப்பேடுகள் குறிப்பிடுகின்றன.சர்வசிவ பண்டிதர் கட்டிய எய்தார் (எசாலம்) சிவன் கோயிலுக்கு ஏராளமான நிலங்களையும் வழங்கி,ஒரு செப்பேட்டையும் இராசேந்திர சோழன் வெளியிட்டான்.

**சாதிய உணர்வு**

அக்காலத்தில் சாதிய உணர்வு சமூகத்தில் மேம்பட்டு இருந்தது என்பதைப் பல செப்பேடுகள் குறிப்பிடுகின்றன. வலங்கை இடங்கை முறை இருந்ததை பல செப்பேடுகள் குறிப்பிடுகின்றன. அரசர்கள் கைக்கோளர்களின் பேச்சைக்கேட்டு அதற்கு முக்கியத்துவம் கொடுத்தனர் என்று பல செப்பேடுகளில் செய்திகள் உள்ளன. மல்லிகுந்தம் பட்டயம் இடங்கையரின் செல்வாக்கினைக் குறிப்பிடுகின்றது.

செப்பேடுகளில் இறுதியில் சாசனம் எழுதித் தருபவரின் கையொப்பம்,இவ்வை என் எழுத்து என்ற செய்திகள் இடம்பெறும்.சாட்சிகள் ஒப்பமிடும்பொழுது 'இப்படி அறிவேன்' என்று கூறி ஒப்பமிட்டுள்ளனர். தானம் வழங்க மன்னரிடம் பரிந்துரை செய்தவரின் பெயரும் செப்பேடு வெட்டிய ஆசாராயின் பெயரும் செப்பேடுகளில் பெருமாலும் இடம்பெறும்.

செப்பேடுகள் இருப்பதால் திருமடங்களுக்கு உரிமையான நிலங்களைத் தனியார் கைப்பற்ற நினைக்கும்பொழுது நீதி மன்றங்களுக்குச் சான்றாக இந்தச் செப்பேடுகள் பயன்புட்டுள்ளன. நெல்லை மாவட்டம் விக்கிரம சிங்கபுரத்துக்கு அருகில் உள்ள சிவந்திபுரம் மடத்திற்கு வழங்கப்பட்ட செப்பேட்டின் துணையுடன் திருவாவடுதுறை ஆதீனம் கைம்மாற இருந்த சொத்தினை மீட்டுள்ளது.

**ஊருணிக்குளம்**

ஊர் மக்கள் நீர் உண்ண பயன்படும் குளம் ஊருண்ணிக்குளம் எனப்படும். ஊருணிக்குளம் தூய்மையாக வைக்கப்பட வேண்டும் என்று செப்பேடுகள் குறிப்பிடுகின்றன. எனவே புதுநீர் அவ்வப்பொழுது குளத்திற்கு வருவதற்கு அக்காலத்தில் வழி செய்தனர். எசாலம் (விழுப்புரம் அருகில் எண்ணாயிரம் என்ற ஊருக்கு அருகில் உள்ள ஊர்) செப்பேடுகளில் நீர்வரும் ஓடை குறிப்பிடப்பட்டுகின்றது. குளமும் கரையும் ஓடையும் மூன்றும் அளவிடப்பட்டு, முக்காலே மாகாணி முந்திரிகைக்கீழ் இரண்டு முக்காணி அரைக்காணி கீழ் கால் அதாவது 1 வேலி 3?4 மா குறிக்கப்பட்டுள்ளது. எசலாம் ஊருக்கு வடகிழக்கில் சுடுகாட்டிற்குச் செல்லும் வழியில் இன்றும் ஒரு குளம் ஆழமாக உள்ளது. தெற்கில் மட்டும் படிக்கட்டுகள் உள்ளன. பாறைகளை வெட்டி ஆழமாகவும் அகலமாகவும் இக்குளத்தை வெட்டியுள்ளனர். செப்பேடுகளில் வரும் ஊருணிக்குளம் இதுவாக இருக்கும் என அறிஞர் சா.கிருட்டினமூர்த்தி குறிப்பிடுகின்றார்.

மாதிரி வினாக்கள்

1.செப்பேடுகள் என்றால் என்ன?

2.வரலாற்று ஆய்வுக்குச் செப்பேடுகள் எவ்வாறு உதவுகின்றன?

3.செப்பேட்டின் அமைப்பை விளக்குக

4.போலிச்செப்பேடுகள் குறிப்பு வரைக

5.தமிழ்ச்செப்பேடுகள் பற்றி எழுதுக.

6.பட்டயங்களும் ஆவணங்களே விளக்குக.

7.செப்பேடுகள் எங்குக் கிடைக்கின்றன?

8.செப்பேடுகள் வழியாக அறியலாகும் உண்மைகள் யாவை?

9.கூரம் செப்பேடுகள் விளக்குக

10.வேள்விக்குடிச் செப்பேட்டின் சிறப்புகள் யாவை?

11.சின்னமனூர்ச் செப்பேடுகளின் முக்கியத்துவத்தை எழுதுக.

12.திருமலைநாயக்கர் செப்பேட்டுச் சிறப்புகளை விளக்குக.

13.தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் குறிப்பு வரைக.

1.நூல்: முப்பது கல்வெட்டுகள்
நூலாசிரியர்: வித்துவான் வை.சுந்தரேச வாண்டையார்.
வெளியீடு: பழனியப்பா பிரதர்சு,சென்னை

2.நூல் தமிழ்நாட்டுச் செப்பேடுகள்,1,2.
நூலாசிரியர்: ச.கிருஷ்ணமூர்த்தி
வெளியீடு: மெய்யப்பன் தமிழாய்வகம்,
53, புதுத்தெரு,சிதம்பரம்- 608 001

பார்வை நூல்கள்

1.இரா.நாகசாமி,
நடன.காசிநாநாதன்,
கல்வெட்டியல்
2.தி.வை.சதாசிவப் பண்டாரத்தார்,
பாண்டியர் வரலாறு(கழகம்,திருநெல்வேலி)

## குறிப்புகள்